Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

தினமுரசு

THINAMURASU

முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2043 ஐப்பசி 11 சனிக்கிழமை (27.10.2012) பக்கங்கள் 20 ஓசை – 027

விஷானி நகை மாளிகை




இல. 187. கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.
0212219510 (C/1675)



04



06



11


13



09

# கடற்பாதுகாப்புக்கு உதவுகிறது அமெரிக்கா



(கொழும்பு)

இலங்கையின் கடற்பிராந்தியத்தில் எல்லைப் பாதுகாப்புத் தொடர்பான விடயங்களில் இணைந்து செயற்படுவதற்கு அமெரிக்கா இணங்கியுள்ளது.

இந்த இணக்கப்பாட்டின் அடிப்படையில் கடற்பாதுகாப்பு மற்றும் எல்லைப் பாதுகாப்புத் தொடர்பான பயிற்சிகளையும் தேவையான உபகரணங்கள் மற்றும் தொழில்நுட்ப அறிவு என்பவற்றை இலங்கைக்கு வழங்குவதற்கு அமெரிக்கா இணங்கியுள்ளது.

இந்த உதவித் திட்டத்தின் முதற்கட்ட நடவடிக்கை ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது.

திருகோணமலைக் கடற்பரப்பில் முதலாவது கடற்பாதுகாப்புப் பயிற்சி செயற்திட்டம் நேற்று நிறைவுபெற்றது. இந்தச் செயற்றிட்ட நிறைவு வைபவத்தில் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் மிசேல் ஜே.சிஸன் சிறப்புரை நிகழ்த்தினார்.

இதன்போது அமெரிக்காவின் இந்த உதவித் திட்டம் தொடர்ந்து அமுற்படுத்தப்படும் என்று அவர் உறுதிப்படுத்தினார்.

இத்திட்டத்திற்கு அமெரிக்க அரசாங்கத்தால் முன்னெடுக்கப் படுகின்ற பிரதானமான முன் முயற்சியாகும். அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம், உள்நாட்டுப் பாதுகாப்பு, வர்த்தகம், சக்திவளம மற்றும் பாதுகாப்பு திணைக்களம் ஆகியவற்றிலிருந்து பெறப்படும் நிபுணத்துவதின் மூலமாக உலகெங்கிலுமுள்ள

19 ஆம் பக்கம் பார்க்க




## நட்ட ஈடுவேண்டும் அமெரிக்காவிடம் கோரிக்கை

(கொழும்பு)

• எரிபொருள் சுத்திகரிப்புப் பிரச்சினையைத் தீர்க்க அமெரிக்கா இலங்கைக்கு நட்டஈடு வழங்கவேண்டுமென ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார். அமெரிக்க அரசாங்கம் ஈரான் மீது பிரயோகித்துள்ள பொருளாதாரத் தடையினால் நட்பு நாடுகள் பாதிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

நட்பு நாடுகள் பாதிக்காத வகையில் தடைகள் விதிக்கப்பட வேண்டும் அல்லது அதற்கான நட்டஈடு வழங்கப்பட வேண்டுமென அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல அமெரிக்காவிடம் கோரியுள்ளார். ஈரானிலிருந்து மசகு எண்ணெய் இறக்குமதி செய்ய முடியாத காரணத்தினால் சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் மூடப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். இதன் காரணமாக இலங்கை பாரியளவு எரிபொருள் பிரச்சினையை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவித்துள்ளார்.

## சி–4 வெடிமருந்து மீட்பு

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு மாவட்டம் வெள்ள முள்ளிவாய்க்கால் பகுதியில் நிலத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த பெருமளவு சி-4 வெடிமருந்து உட்பட வெடி பொருட்கள் பொலிஸாரினால் கடந்த வாரம் மீட்கப்பட்டிருப்பதாக யாழ். பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்துள்ளார். நேற்று யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாயத்தில் நடைபெற்ற

19 ஆம் பக்கம் பார்க்க

## கோதுமை மா விலை உயர்வு

(கொழும்பு)

கோதுமை மாவின்விலை நேற்று வெள்ளிக்கிழமை நள்ளிரவு முதல் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன்படி ஒரு கிலோ பிறீமா கோதுமை மாவின் விலை 6 ரூபாவினாலும் செரன்டிப் கோதுமை மாவின் விலை 4 ரூபாவினாலும் அதிகரிக்க அந்நிறுவனங்கள் தீர்மானித்துள்ளதாக உத்தியோக பூர்வத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## கிருஷ்ணா இராஜினாமா இந்திய அமைச்சரவையில் அதிரடி

இந்தியாவின் புதிய வெளியுறவுகள்துறை அமைச்சராக காங்கிரஸ் கட்சியின் இளைஞர் அணித் தலைவரும், ராஜிவ் காந்தியின் புதல்வருமான ராகுல் காந்தி நியமிக்கப்படுவார் என்று ஊகங்கள் எழுந்துள்ளது. இந்தியாவின் அமைச்சரவையில் நாளை ஞாயிற்றுக் கிழமை மறுசீரமைக்கப்படவுள்ளது.

இதன் நிமித்தம் வெளியுறவுத்துறை அமைச்சராக இருந்த எஸ்.எம்.கிருஷ்ணா நேற்று மாலை பதவி விலகினார்.

இந்த நிலையில் அவரது பதவிக்கு ராகுல் காந்தி நியமிக்கப்படலாம் என்று இந்திய அரசாங்கத் தகவல்களை மேற்கோள் காட்டி இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இதே வேளை அமைச்சரவை மாற்றம் தொடர்பில் தற்சமயம் இந்திய பிரதமர் மன்மோகன் சிங்கிற்கும், காங்கிரஸ் தலைவர் சோனியா காந்திக்கும் இடையில் நேற்று முன்தினம் இரவுவரை பேச்சுவார்த்தை இடம்பெற்றது.

## பாலியல் தொந்தரவு இலங்கையில் இல்லை

பாலியல் தொழிலாளர்கள் இலங்கையில் தொந்தரவுக்கு உள்ளாகின்றனர் என்ற ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சில குற்றச்சாட்டுக்கள் ஆதாரமற்றவை. ஆயினும் அரசாங்கம் என்ற வகையில் இந்தக் குற்றசாட்டுக்களை உதாசீனம் செய்யாது இந்தப் பிரச்சினை தொடர்பில் முழுமையாக ஆராய்வுளளோம் என அரசாங்கம் அறவித்துள்ளது. இது தொடர்பில் அமைசசரவை பேச்சாளரும்

19 ஆம் பக்கம் பார்க்க

இணையத்தில் தினமுரசு
www.thinamurasu.net

## வரணியில் துப்பாக்கிச் சூடு பின்னணி என்ன?

(யாழ்ப்பாணம்)

யுத்தம் விட்டுச் சென்ற மற்றுமொரு விசித்திர விளைவின் வெளிப்பாடு நேற்று முன்தினம் வரணியில் நடந்தேறியிருக்கிறது. இளைஞன் ஒருவன் காதலியுடன் தன்னை சேர்த்து வைக்க கோரி துப்பாக்கியுடன் ஆர்ப்பாட்டத்தில் குதித்தார். அவர் பின்னர் படையினரால் பிடிக்கப்பட்டுள்ளார். வறணிப் பகுதியில் வறணி மகா வித்தியாலயத்தின் முன்பாக நேற்று முன்தினம் குறித்த நபர் கைகளில் துப்பாக்கியை ஏந்தியவாறு வானத்தை நோக்கி வேட்டுக்களை தீர்த்த வண்ணமிருந்த வேளை படையினரால் பிடிக்கப்பட்டுள்ளார். பின்னர் அவர் கொடிகாமம் பொலிஸார் வசம் கையளிக்கப்பட்டிருந்தார். பொதுமகனான குறித்த நபர் வசம் எவ்வாறு துப்பாக்கி வந்து சேர்ந்ததென்பது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். சம்பவம் தொடர்பில் மேலும தெரிய வருகையில் குறித்த

19 ஆம் பக்கம் பார்க்க

## கிணற்றில் விழுந்து சிறுவன் மரணம்

கிணற்றுள் விழுந்த 4 வயது சிறுவன் ஒருவன் உயிரிழந்த சம்பவமொன்று நாவாந்துறை, கமால் வீதிப் பகுதியில் நேற்று மதியம் 2 மணியவில் இடம் பெற்றுள்ளது. அதே இடத்தைச் சேர்ந்த சுமந்தன் பபிசன் என்ற சிறுவனே உயிரிழந்துள்ளார்.

சிறுவனின் தாயார் கணவருக்கு சாப்பாடு கொடுப்பதற்கு அருகில் உள்ள இடத்திற்கு சென்ற வேளையில், வீட்டிற்கு அருகில் இருந்த கிணற்றடிக்கு சென்ற சிறுவன் வாளியை கிணற்றுக்குள் போட முற்பட்டுள்ளான். இதன்போது வாளிக் கயிறு அவன் மீது சுற்றப்பட்ட நிலையில் அவன் கயிற்றினால் இழுபட்ட நிலையில் கிணற்றில்

19 ஆம் பக்கம் பார்க்க



இரணைமடு குடிநீர் தீவகத்திற்கு எப்போது கிடைக்கும்? அதிகாரிகள் குழு நேற்று ஊர்காவற்றுறையில் கள ஆய்வு செய்தனர்.

# யாழ்ப்பாணம் மாநகரசபை

## சந்தைகள், இறைச்சிக் கடைகள், கருவாட்டுக் கடைகள், கோழிக்கடைகள், துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையங்கள், சிற்றுண்டிச்சாலை என்பவற்றைக் குத்தகைக்கு வழங்குவதற்கான

# கேள்வி அறிவித்தல் - 2013

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள மேற்படி கடைகள் 01.01.2013 ஆம் திகதி முதல் 31.12.2013 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குக் குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாணம் மாநகரசபையால் கோரப்படுகின்றது.

| | |
|---|---|
| கேள்விப்படிவக் கட்டணம் | - ரூபா [illegible]00.00 |
| கேள்விப்படிவம் விநியோகித்தல் | - 01.11.2012 - 16.11.2012 மு.ப. 10.00 மணி வரை |
| கேள்விப்படிவம் ஏற்றுக்கொள்ளல் | - 16.11.2012 நண்பகல் 12.00 மணி வரை |
| கேள்வி திறத்தல் | - 16.11.2012 பி.ப 2.30 மணிக்கு |

விண்ணப்பப் படிவத்தினைப் பூர்த்தி செய்து கடித உறையின் இடது பக்க மூலையில் கடையின் பெயர் குறிப்பிடப்பட்டு மாநகரசபை நானாவித இறைவரிப் பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

தபாலில் அனுப்புவோர் மாநகர ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம். என்று முகவரியிட்டு 16.11.2012 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விக்காரர்கள் அல்லது அவர் சார்பில் அவரால் அனுமதியளிக்கப்பட்ட எவரேனும் சமூகமளிக்கலாம்.

குறிப்பு :

01. கூட்டுறவுச் சங்கங்கள் தவிர்ந்த தனிப்பட்டவர்களால் சமர்ப்பிக்கப்படும் கேள்வித் தொகையின் வீதத்திற்குச் சமமான தொகைக்கு அங்கீகரிக்கப்பட்ட ஏதாவது ஒரு வங்கியின் முறி ஒன்று சமர்ப்பித்தல் வேண்டும்.
02. சந்தையைக் குத்தகைக்குப் பெறுபவர் சந்தைக்கு வரும் பொருள்களின் மொத்தப் பெறுமதியின் 3 வீதம் கட்டணம் பெறலாம். வியாபாரிகள் மீன் வியாபாரம் செய்யும் இடத்துக்கு (கல்லுக்கு) நாள் ஒன்றுக்கு ரூபா 50.00 பெறலாம். மரக்கறி வியாபாரம் செய்யும் இடத்துக்கு ( [illegible] ) நாள் ஒன்றுக்கு ரூபா 50.00 பெறலாம். மேலதிகமாக எந்தவித கட்டணங்களும் அறவிடக் கூடாது.
03. சபையின் சைக்கிள் பாதுகாப்பு நிலையங்களில் பாதுகாக்கப்படும் துவிச்சக்கர வண்டிகளுக்கு ரூபா 5.00 உம் மோட்டார் சைக்கிள்களுக்கு ரூபா 10.00 உம் வாங்கலாம். மேலதிகமாக எந்த வரியும் அறவிடக்கூடாது.
04. சபையின் கடைகளில் இறைச்சி [illegible] கருவாடு [illegible] கோழி ஆகிய பொருட்கள் விற்பனை செய்யும் உரிமையாளர்கள் சபையால் விதிக்கப்படும் மாத வாடகை செலுத்த வேண்டும்.
05. சபையின் கடைகள் இல்லாத இடமாகிய மானிப்பாய் வீதி, ஜீன்னா வீதி, பாசையூர் ஆகிய பகுதிகளுக்கு கேள்வி விண்ணப்பம் சமர்ப்பிப்பவர்கள் குறிப்பிட்ட இடத்தின் காணி உரிமையாளர்களின் சம்மதக் கடிதத்தினையும் இணைத்தல் வேண்டும்.
06. சுப்பிரமணியம் பூங்கா வளாகத்துக்குள் இருக்கும் சிற்றுண்டிச்சாலையை குத்தகைக்குப் பெறுபவர்களுக்குரிய நிபந்தனைகள்.
    1. சிற்றுண்டிச்சாலை காலை 9.00 மணி தொடக்கம் மாலை 7.00 மணி வரை வியாபாரம் செய்ய அனுமதிக்கப்படும்.
    2. சிற்றுண்டிச்சாலைக்குப் பயன்படுத்தும் மின்சாரத்துக்கான மின் கட்டணத்தைக் குத்தகைக்குப் பெறுபவர்களே செலுத்துதல் வேண்டும்.
    3. மின்சாரக் கட்டணத்துக்கான பாதுகாப்பு வைப்புக் கட்டணமாக ரூ.15,000.00 ஐயும் உடன் செலுத்துதல் வேண்டும்.
07. கேள்விப் படிவக் கட்டணம், கேள்வித் தொகை, மாத வாடகை என்பவற்றுக்கு 12[illegible] 2[illegible] [illegible] சேர்த்து செலுத்துதல் வேண்டும்.
08. சித்திபெற்றவர்கள் உடனடியாகக் கேள்வித் தொகையின் 1[illegible]3 பகுதியைச் செலுத்திச் சபையுடன் உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டும். மிகுதித் தொகையின் 1[illegible]8 பங்கை ஜனவரி தொடக்கம் ஆகஸ்ட் வரையான 8 மாத காலப்பகுதிக்குள் 2013 ஜனவரி முதல் ஒவ்வொரு மாதமும் 20 ஆம் திகதிக்கு முன் செலுத்துதல் வேண்டும்.
09. கேள்விப்பத்திரம் பெற வருபவர்கள் அடையாள அட்டை சமர்ப்பிப்பதுடன் அதன் ஒளிப்படப் பிரதியும் சமர்ப்பித்தல் வேண்டும்.
10. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை யாழ்.மாநகர சபைக்கே உரியது.
11. கேள்விப்பத்திரங்களைப் பெறுபவர்கள் முன்பு மாநகர சபைக்கு எந்தவித கொடுப்பனவும் செலுத்த முடியாத காரணத்தால் கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டவராக இருத்தல் கூடாது.

மேலதிக விபரங்கள் தேவைப்படின் மாநகரசபை நானாவித இறைவரிப்பகுதியில் பெற்றுக் கொள்ளலாம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
25.10.2012.

திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா,
மாநகர முதல்வர்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

# இறைச்சிக்கடை குத்தகை

| தொ. இல | இறைச்சிக்கடை | கடை இல. | மீளளிக்கக் கூடிய கேள்வி பிணைப்பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வித் தொகை (12% பெறுமதி சேர் வரியும் 2% தே.க.எ.வரியும் நீங்கலாக) |
|---|---|---|---|---|
| 01 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 118,980.00 |
| 02 | பண்ணை கருவாட்டுக்கடை | இல.02 | 5,000.00 | 51750.00 |
| 03 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.03 | 5,000.00 | 106,722.00 |
| 04 | ,, | இல.04 | 5,000.00 | 208,001.70 |
| 05 | ,, | இல.05 | 5,000.00 | 66,701.80 |
| 06. | ,, | இல.06 | 5,000.00 | 66,701.80 |
| 07 | பண்ணை கோழிக்கடை | இல.07 | 5,000.00 | 199,001.70 |
| 08. | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.08 | 5,000.00 | 74,356.20 |
| 09 | பண்ணை மாட்டிறைச்சிக்கடை | இல.09 | 5,000.00 | 100,350.00 |
| 10 | பண்ணை மாட்டிறைச்சிக்கடை | இல.10 | 5,000.00 | 100,350.00 |
| 11 | செங்குந்தா ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 136,006.20 |
| 12 | பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 522,000.00 |
| 13 | ,, | இல.02 | 5,000.00 | 517,500.00 |
| 14 | புங்கன்குளம் ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 99,999.99 |
| 15 | புங்கன்குளம் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 280,800.00 |
| 16 | ஜீன்னா வீதி ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 34,303.50 |
| 17 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 429,399.90 |
| 18 | ,, | இல.02 | 5,000.00 | 325,899.00 |
| 19 | ,, | இல.03 | 5,000.00 | 343,899.00 |
| 20 | ,, | இல.04 | 5,000.00 | 88,935.00 |
| 21 | ,, | இல.05 | 5,000.00 | 315,999.00 |
| 22 | ,, | இல.06 | 5,000.00 | 88,935.00 |
| 23 | ,, | இல.07 | 5,000.00 | 88,935.00 |
| 24 | ,, | இல.08 | 5,000.00 | 88,935.00 |
| 25 | ,, | இல.09 | 5,000.00 | 88,935.00 |
| 26 | நாவாந்துறை கோழிக்கடை | இல.10 | 5,000.00 | 105,075.00 |
| 27 | நாவாந்துறை ஆட்டிறைச்சிக்கடை | இல.11 | 5,000.00 | 63,075.00 |
| 28 | நாவாந்துறை கருவாட்டுக்கடை | இல.12 | 5,000.00 | 12,705.00 |
| 29 | அரியாலை மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 253,806.30 |
| 30 | அரியாலை ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 28,800.00 |
| 31 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 7,000.00 | 454,500.00 |
| 32 | ,, | இல.02 | 7,000.00 | 496,935.00 |
| 33 | ,, | இல.03 | 7,000.00 | 364,500.00 |
| 34 | ,, | இல.04 | 7,000.00 | 361,089.00 |
| 35 | ,, | இல.05 | 7,000.00 | 450,000.00 |
| 36 | ,, | இல.06 | 7,000.00 | 360,900.00 |
| 37 | ,, | இல.07 | 7,000.00 | 288,000.00 |
| 38 | முஸ்லிம் கல்லூரி வீதி. ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 104,400.00 |

# பொதுச் சந்தைக் குத்தகை

| தொ. இல | பொதுச் சந்தைகள் | மீளளிக்கக்கூடிய கேள்வி பிணைப்பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வித்தொகை (12% பெறுமதி சேர் வரியும் 2% தே.க.எ வரியும் நீங்கலாக) |
|---|---|---|---|
| 01 | பெரிய கடை மரக்கறிச் சந்தை | 10,000.00 | 1,573,880 |
| 02 | பண்ணை மீன் சந்தை | 10,000.00 | 3,140,730.00 |
| 03 | குருநகர் மீன் சந்தை | 10,000.00 | 1,334,025.00 |
| 04 | செங்குந்தா சந்தை | 10,000.00 | 1,203,120.00 |
| 05 | நாவாந்துறை மீன் சந்தை | 10,000.00 | 550,000.00 |
| 06 | அரியாலை மீன் சந்தை | 1,000.00 | 55,088.00 |
| 07 | பாசையூர் மீன் சந்தை | 2,000.00 | 157,599.00 |
| 08 | சுப்பிரமணியம் பூங்கா வளாகத்திலுள்ள சிற்றுண்டிச்சாலை | 1,000.00 | 66,000.00 |
| 09 | பண்ணை மீன் சந்தை சிற்றுண்டிச்சாலை | 1,000.00 | 81,855.00 |
| 10 | பஸ் நிலைய கடைகளுக்கு கிழக்கு பக்கமாகவுள்ள து.வி.வண்டி பாதுகாப்பு நிலையம் | 1,000.00 | 166,320.00 |
| 11 | புங்கன்குளம் சந்தை | 2,000.00 | 12,705.00 |

மேலதிக விபரங்களை மாநகரசபையின் நானாவித இறை வரிப்பகுதியில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா,
மாநகர முதல்வர்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
25.10.2012.

(C/2082)

# பிள்ளைகளின் ஆளுமை வளர வாய்ப்புக்களை வழங்கவேண்டும்

## - டாக்டர் பிறிற்ரோ டக்ளஸ் -

(கைதடி)

யாழ்.கைதடி கலைவாணி வித்தியாலயத்தில் உலக உள நல நாள் நிகழ்வுகள் அண்மையில் வித்தியாலய அதிபர் நா.கருணாகரன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக டாக்டர் பிறிற்ரோ டக்ளஸ் கலந்து கொண்டார்.

அந்நிகழ்வில் மாணவர்களின் ஒவியக் கண்காட்சியும் இடம் பெற்றது. இக்கண்காட்சியையும் திறந்து வைத்து பிரதம விருந்தினர் டாக்டர் பிறிற்றோ டக்ளஸ் கருத்துரை வழங்குகையில்,

மாணவர்களின் உள ஆரோக்கியத்தினைப் பேணுவதில் பெற்றோரும், ஆசிரியர்களுமே அதிக பங்கு வகித்து வருகின்றனர்.

ஆரோக்கியமான மாணவர்கள் உருவாக வேண்டுமாயின் உளநலன் அத்தியாவசியமானதாகக் காணப்படுகிறது. உளநலன் பேணுவதில் உள்ள முக்கியத்துவத்தினை மாணவர்களுக்கு உணர்த்த வேண்டியவர்கள் பெற்றோரும், ஆசிரியர்களுமே இதன் மூலமே அறிவு சார்ந்த மாணவர்களை உருவாக்கி சமூகம் பலனடைய முயற்சிக்க வேண்டும்.

ஒவ்வொரு பிள்ளையின் ஆளுமை வளர்ச்சியில் பாடசாலைகள் வாய்ப்புக்களை வழங்க வேண்டும். அதனூடாகப் பிள்ளைகளின் ஆற்றல், திறன், சமூகப் பொறுப்புகள் ஏற்றல் போன்ற பல்வேறு விடயங்கள் வளர்வதற்கு வாய்ப்புக்கள் கிடைக்கும் என அவர் மேலும் தெரிவித்தார்.



இலங்கைக்கான விஜயத்தை மேற்கொண்டு யாழ்.வந்த இலங்கைக்கான சீனத்தூதுவர் வூஜிவான் ஹாவு உள்ளிட்ட குழுவினர் யாழ்.மாவட்டத்தின் அபிவிருத்தி குறித்து யாழ். மாவட்டத்தின் ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறியுடன் கலந்துரையாடுவதைக் காணலாம். (படம் கே.நந்தகுமார்)

# மாபெரும் பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வடக்கிலிருந்து முஸ்லிம் மக்கள் வெளியேறிய தினத்தை நினைவு கூருமுகமாக எதிர் வரும் 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 4.00 மணிக்கு யாழ்.ஒஸ்மானியாக்கல்லூரியில் மாபெரும் பொதுக்கூட்டமும் ஒன்றுகூடலும் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்ப்பாண முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்தற்குத் தடையாக இருக்கின்ற காரணிகள் என்ற மகுடத்தில் பேராசிரியர் எச்.எஸ்.ஹஸ்புல்லாவும், யாழ்.மாவட்ட முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்திற்கு எவ்வாறு ஒத்துழைப்பு நல்கலாம் என்ற தலைப்பில் பேராசிரியர் இரா.சிவச்சந்திரனும் உரையாற்றுகின்றார்கள்.

யாழ்.கிளிநொச்சி முஸ்லிம் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் இந்நிகழ்வு நடைபெறுகின்றது. அனைத்து இன மக்களையும் வருகைதருமாறு தலைவர் எம்.எம்.நிலாம் வேண்டுகோள் விடுத்துள்ளனார். (105)

# கும்பாபிஷேகம்

மண்டைதீவு கண்டுப்புளியடி அருள்மிகு ஸ்ரீ சிவ உக்கிர வீரபத்திர சுவாமி திருக்கோயிலின் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு ஆரம்பமாகி இடம்பெறவுள்ளது.

இதில் நயினை சிவஸ்ரீ ஜன கலை வாமதேவக்குருக்கள் பாலஸ்தாபன பிரதம குருவாக கிரியைகளை ஆற்றவுள்ளார்.

இன்று சனிக்கிழமை விநாயகர் வழிபாடு, கணபதி ஹேமம், வாஸ்து சாந்திகள், பூர்வாங்க கிரியைகள், யாக பூசை ஹோமம் ஆகியன இடம் பெறவுள்ளன. (பா)

# கால்நடைகள் அச்சம்

(வரணி)

வரணி இடைக்குறிச்சிப் பகுதியில் பகல் வேளைகளில் வேட்டைக்கு செல்வோர் கத்திச் சத்தமிடுவதால் வீடுகளில் கட்டியிருக்கும் கால்நடைகள் அச்சம் காரணமாக அறுத்து அருகில் உள்ள வயல் வெளிகளிற்கு செல்வதால் அவைகள் வயல் நிலங்களை நாசப்படுத்தி வருவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக இதனால் கால்நடை உரிமையாளரும் பாதிக்கபபடுவதாகவும் குறிப்பாகத் தமது கால்நடைகள் வயல் நிலங்களில் பிடிக்கப்பட்டால் குற்றப் பணம் செலுத்தியே மீளப் பெற்றுக் கொள்ளவேண்டிய நிலை காணப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

இந்த வேட்டைக்காரர் குறித்து கவனம் செலுத்த முன் வருவார்களா? என்று மிகவும் கவ லையுடன் விவசாயிகள், கால்நடை வளர்ப்போர் தெரிவிக்கின்றனர். (150)

# வைத்தியசாலை மலசல கூடங்களை சுகாதாரமாகப் பயன்படுத்த அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையின் நோயாளர் விடுதியில் காணப்படும் மலசல கூடங்களை சுகாதாரமான முறையிலும் தகுந்த அறிவிப்புக்களைப் பின்பற்றியும் நோயாளர்களும், நோயாளர்களைப் பராமரிப்பவர்களும் பயன்படுத்துமாறு யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் ஸ்ரீபவானந்தராசா கேட்டுக்கொண்டுள்ளார்.

இவ்வைத்திய சாலையின் விடுதிகளில் தங்கிச் சிகிச்சை பெற்று வரும் நோயாளர்களும், அவர்களைப் பராமரிப்பவர்களும் வைத்தியசாலை விடுதியில் உள்ள மலசல கூடங்களைப் பாவித்த பின் சரியாக நீர் ஊற்றிக் கொள்வதில்லை. இதனால் அப்பகுதியில் துர்நாற்றம் வீசுவதுடன் இதனைச் சீர் செய்வதில் வைத்தியசாலை சுகாதாரத் தொழிலாளர்கள் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இவர்கள் மலசல கூடங்களைப் பாவித்த பின்னர் தேவையான அளவு நீர் ஊற்ற வேண்டும். அத்துடன் கழிவுப் பொருட்களையும் பொலித்தீன் பைகளில் கட்டி மலசலக் குழியினுள் போட்டு விடுகின்றனர். இதனால் கழிவு செல்லும் குழாயில் அடைப்புக்கள் ஏற்பட்டு விடுகிது. இதனைச் சீர் செய்வதற்கு வைத்தியசாலை நிர்வாகம் மிகுந்த நெருக்கடியை எதிர் நோக்க வேண்டி ஏற்படுகிறது.

எனவே நோயாளர்களும், அவர்களைப் பராமரிப்பவர்களும் அவ்வாறான செயல்களில் ஈடுபடாது தவிர்க்குமாறு பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (பா)



சாவகச்சேரி விளைவேலி அருள்மிகு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தில் கடந்த விஜயதசமி தினத்தில் நடைபெற்ற மானம்பூ திருவிழாவின் போது

# புகைப்பொருள் எதிர்ப்பு தினம்; சித்திரப் போட்டி முடிவுகள்

நேற்றைய தொடர்ச்சி....

(யாழ்ப்பாணம்)

புகைப்பொருள் எதிர்ப்புதினத்தை முன்னிட்டு யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையினால் பாடசாலை மாணவர்களிடையேயும் திறந்த பிரிவாகவும் நடத்தப்பட்ட போட்டியில் வெற்றி பெற்றவர்களின் விபரம் வெளியிடப் பட்டுள்ளது.

சித்திரப்போட்டி முடிவுகள்

வி.நயனன் யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி, அ.தனேந்திரன் யா/மத்திய கல்லூரி, பா.ரோமியா யா/இந்து மகளிர் கல்லூரி, செ.துஷ்யந்தன் யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி, மா.டிசோதன் யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி, சி.துவாரகன் யா/புனித அந்தோனியார் கல்லூரி, தே.பபிராஜ் யா/இணுவில் மத்திய கல்லூரி, யோ.எழில்வேந்தன் யா/இணுவில் மத்திய கல்லூரி, க.ரியூஸ்ரன் யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி, செ.திலக்ஷன் யா/மத்திய கல்லூரி, வ.கஜீப்ன் யா/இணுவில் மத்திய கல்லூரி, ஜெ.ஜெயதீபன் யா/வேலாயுதம் மகா வித்தியாலயம், பு.புவிதன் யா/ஆனைக்கோட்டை றோ.க.த.க.பாடசாலை, க.இந்துர்ஷன் யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், சி.தர்சிகா யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, ரி.திஜிதரன் யா/அச்சுவேலி மத்திய கல்லுரி, சோ.வரகுலன் யா/இணுவில் மத்திய கல்லூரி, இ.டினோஜன் யா/இந்துக்கல்லூரி, ப.விதுர்ஷன் யா/மாதகல் சென்.ஜோசப் மகா வித்தியாலயம், ஜெ.பிறிசில்லா யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, க.ரகுகரன் யா/சித்திவிநாயகர் வித்தியாலயம், உ.ராம்கி யா/அச்சுவேலி மத்திய கல்லூரி, சி.மஞ்சுளா யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, சி.பிரவீன் யா/இந்துக்கல்லூரி, ஈ.கஜன்ராஜ் யா/சித்திவிநாயகர் வித்தியாலயம்.

(தொடரும் ....)

# செம்மணி இந்து மயானத்தில் நவீன மின் உலைக்கு அடிக்கல்

(திருநெல்வேலி)

செம்மணி இந்து மயான அபிவிருத்தி சபையினால் நவீன மின் உலை ஒன்று மயானத்தில் அமைக்கப்படவுள்ளது. இதற்கான கட்டட அடிக்கல் நாட்டும் விழா இன்று சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இம்மின் உலை மூலமாக உடல் தகனம் செய்யும் கட்டடம் அமைப்பதற்கு ஒரு கோடி எழுபது இலட்சம் ரூபா செலவாகும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. வலி.கிழக்கு பிரதேச சபை இதற்காக நாற்பது இலட்சம் ரூபா பணத்தை ஒதுக்கிடு செய்துள்ளது.

இவ்வடிக்கல் நாட்டும் நிகழ்வில் சமய சமூகப் பெரியார்கள், உள்ளூராட்சி சபைத் தலைவர்கள், கௌரவ அங்கத்தவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், தொழிலதிபர்கள் துறைசார் வல்லுநர்கள், பொது நிறுவனப் பிரதிநிதிகள் எனப்பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

கடந்த 15 ஆம் திகதி திங்கட்கிழமை மயானத்தின் தென்புறமாகவுள்ள இரண்டு ஏக்கர் காணியில் யாழ்ப்பாணம் தியாகி அறக்கொடை நிறுவனத்தினரால் நிழல் தரும் மரங்கள் நாட்டப்பட்டுள்ளன இந்நிறுவனமே அவற்றைப் பராமரிக்கும் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (137)

நம்பிக்கை குறையும் போது ஒவ்வொரு மனிதனும் நெறியற்ற கொள்கையை மேற்கொள்கிறான். - ஜான்மில்டன்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, விளம்பரப் பணிமனை: 0212220188
thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## நல்லிணக்கத்திற்கு மொழியறிவு

மொழியின் மூலமே பிரிந்து பகையுணர்ச்சியை மேலும் மேலும் வளர்த்துக்கொண்டிருக்கும் இந்நாட்டு மக்களை அந்த மொழிகளைப் பயன்படுத்தியே இணைப்பதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அந்தவகையில் அரச வேலைகளில் பதவி உயர்வுக்கும் சம்பள உயர்ச்சிக்கும் தமிழர்கள் சிங்களமும் சிங்களவர்கள் தமிழும் கற்றிருக்க வேண்டும் என்பதைச் சட்டமாக்குவது பொருத்தமே.

'ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது' என்ற பழமொழி, புதுமொழியைக் கற்பதுக்குப் பொருந்தாது. தன் ஐம்பது வயதிலும் கூட புதுப்புது கணனி மொழிகளை உருவாக்குவதிலும், கற்பதிலும் மனிதன் கணனியோடு போட்டியிடும் போது, சக மனிதர்கள் பேசும் இன்னொரு மொழியைக் கற்பது ஒன்றும் கஷ்டமானதாக இருக்கப் போவதில்லை.

எதையுமே படிக்க வேண்டும் என்ற பதட்டத்தில் படித்தால் அது மூளையில் ஏறுவதில்லை. ஆனால், எந்த நிபந்தனையும் இன்றி எதையாவது கேட்டால் கூட அது எளிதில் நம்மிடம் அடைக்கலம் ஆகிவிடுகிறது. ஒரு வருடம் முழுவதும் பரீட்சைக்காகப் படிக்கும் இரண்டு அடி திருக்குறள் மனதில் நிற்பதில்லை. மாறாக, ஒருமுறை கேட்ட சினிமா பாடல், இசையோடு வாழ்நாள் முழுவதும் நம்மோடு தங்கி விடுகிறது.

மொழியை வெறும் தகவல் தொடர்பு ஊடகமாக மட்டும் எண்ணினால், மொழி பற்றிய பல சிக்கல்கள் நீங்கும்.

"கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றிய மூத்த குடி" என நாம் பெருமையுடன் கூறிக்கொண்டாலும், உலகில் தோன்றிய முதல் மொழி எது என்பதில் ஐயப்பாடுகள் உள்ளன. எழுத்து வடிவம் கொண்ட மொழிகளும், வெறும் பேச்சு வழக்கில் மட்டுமே உள்ள மொழிகளும் உலகில் பல உள்ளன. ஒரே மொழியைக் கோடிக்கணக்கானோர் பேசுவதும், இன்னொரு மொழியை ஒருசிலரே பேசுவதையும் காணலாம்.

உலகில் சுமார் 6900 மொழிகள் உள்ளன என்பது ஆச்சரியமான செய்திதான். இந்தியாவில் மட்டும் 1,652 மொழிகள் உள்ளன என்று தெரியவந்திருக்கிறது. பத்து லட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் பேசும் மொழிகளே அங்கு 30 உள்ளன.

மனிதன் மட்டும் அல்லாமல் உலகின் எல்லா உயிர்களும் தகவல்களைப் பகிர்ந்து கொள்கின்றன. நல்ல மழை பெய்து, குளங்கள் எல்லாம் நிறைந்திருக்கும் காலங்களில் தவளைகளின் இன்னிசைக் கச்சேரியைக் கிராமத்தில் வாழ்ந்தவர்கள் கேட்டிருப்பார்கள்.

அவற்றுக்குள் என்ன கருத்துப் பரிமாற்றம் நடக்குது எனத் தெரியவில்லை. ஆனால் கண்டிப்பாக ஒன்றுக்கொன்று கருத்துப் பரிமாறுகின்றன என்பது உண்மை.

தவளைகளைப் பற்றி இன்னோர் ஆச்சரியமான செய்தி. அவை பிற பூச்சி போன்ற உயிரினங்களின் சத்தத்தில் இருந்து அதன் அளவைப் புரிந்து கொண்டு, அதன்பின்பே அதைப் பிடித்து உண்ணும். அதற்கு முன், சிறிதாக இருந்தாலும், பெரிதாக இருந்தாலும், பட்டினியால் சாகுமே தவிர அதை உண்ண முயற்சி செய்யாது. உணவில் கூட மொழி பங்கு பெறுவதை இதனால் உணரலாம்.

க, கா எனும் காகமும், கி, கீ எனும் கிளியும், கு, கூ எனும் குயிலும் தம் குரலை மாற்றுவதில்லை. குரலின் ஏற்ற இறக்கங்களால் தம் இனத்துக்கோ பிறவற்றுக்கோ வெவ்வேறு செய்திகளைப் பகிர்ந்து கொள்கின்றன. உலகின் எல்லா உயிர்களும் அப்படியே. ஆனால் மனிதன் மட்டுமே புதுப்புது மொழிகளைக் கற்கும் வல்லமை உள்ளவன். அதைப் பயன்படுத்திக்கொண்டால் பிரச்சினை தீர்ந்துவிடும்.

- ஆசிரியர்

# சேமலாபநிதி மோசடியில் ஈடுபட்டோரை சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும்

## ஐ.தே.க.வலியுறுத்து

(கொழும்பு)

தேசிய சேமிப்பு வங்கியின் முன்னாள் தலைவர் பிரதீப் காரியவசத்துக்கு எதிரான நடவடிக்கையை துணிச்சலாக எடுத்தமைக்கு இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவை பாராட்டியுள்ள பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி, ஊழியர் சேமலாப நிதியை தவறாகப் பயன்படுத்தியவர்களுக்கு எதிராகவும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷா டி சில்வா மேலும் தெரிவித்துள்ளதாவது,

தேசிய சேமிப்பு வங்கியின் நிதியைப் பயன்படுத்தி த பினான்ஸ் கம்பனியின் பங்குகளை வாங்கிய விவகாரம் தொடர்பாக இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு எடுத்திருக்கும் நடவடிக்கைகளை வரவேற்கின்றோம்.

அதேபோல ஊழியர் சேமலாப நிதியை முறைகேடாக பயன்படுத்தியமை குறித்தும் இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அதேபோல ஊழல் நடவடிக்கைகள் யாவும் முழுமையாக அதிகாரிகளினால் ஆராயப்பட வேண்டும்.

சேமிப்பு வங்கித் தலைவர், ஒரு கையால் ஓசை எழுப்பியிருக்க முடியாது.

எனவே ஊழலில் சம்பந்தப்பட்ட சகலரையும் கண்டுபிடிக்க வேண்டும். ஊழியர் சேமலாப நிதிப் பிரச்சினை மிகவும் பெரியது. இந்த மோசடியில் ஈடுபட்டவர்களை சட்டத்தின் முன் நிறுத்தவேண்டும். என்றும் அவர் மேலும் கூறினார்.

# விவசாயக் கடனை இரத்துச் செய்யுமாறு பாதிக்கப்பட்ட விவசாயிகள் கோரிக்கை

நாட்டில் ஏற்பட்டிருந்த கடும் வறட்சியின் காரணமாக விவசாய நடவடிக்கை கடுமையாக பாதிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் குறித்த வறட்சி வன்னி மாவட்டத்திலும் ஏற்பட்டிருந்ததனால் வன்னி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்த நெற்பயிர்ச் செய்கை பாரிய அளவில் பாதிக்கப்பட்டிருந்தது. எனவே விவசாயக் கடனை இரத்துச் செய்யுமாறு ஜனாதிபதியிடம் விவசாய அமைப்புக் கோரவுள்ளது. குறித்த விவசாய நடவடிக்கைகளுக்காக விவசாயிகள் வங்கிகளில் விவசாயக்கடனை பெற்றதோடு நகைகளை அடகு வைத்தும் தமது நெற்பயிர்ச் செய்கையினை மேற்கொண்டிருந்தனர்.

இந்த நிலையில் வறட்சியினால் விவசாயிகள் பாதிப்படைந்திருந்த நிலையில் ஜனாதிபதியினால் குறித்த வங்கிக் கடன்கள் இரத்துச் செய்யப்படுவதாகவும், அடகு வைத்த நகைகளை எதிர்வரும் கால போகத்தில் நெற்பயிர்ச் செய்கையினை மேற கொண்டுவிட்டு பின் நகைகளை திருப்புவதற்குமான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்பட்டிருந்தது.

எனினும் வன்னி மாவட்டத்தில் உள்ள விவசாயிகளின் வங்கிக்கடன் இது வரை இரத்துச் செய்யப்படவில்லை. இதனால் விவசாயிகள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

# ஏ-9 வீதியில் வாகனநெருக்கம்; பாதசாரிகள் பெரும் தவிப்பு

(புதுக்குடியிருப்பு)

யாழ். ஏ-9 வீதியில் வஸ்தியன் சந்திக்கு அருகாமையில் உள்ள கோவில் வீதி திருப்புமுனையில் அதிகரித்த வாகனங்களின் போக்கு வரவினால், விபத்துக்கள் ஏற்படும் அபாயம் இருப்பதாக பொதுமக்கள் மற்றும் பாதசாரிகளால் சுட்டிக் காட்டப்படுகிறது.

காலை வேளைகளில் மேற்படி குறித்த வீதியில் பாடசாலை மாணவர்கள், அரச உத்தியோகத்தர்கள் மற்றும் அரச, தனியார் பேருந்துகள் அதிகரித்துச் செல்லும் நிலையில், கோவில் வீதிக்கு திரும்பிச் செல்ல முனைபவர்கள் பல நிமிடங்கள் பிரதான வீதியில் காத்து நிற்கவேண்டிய நிலைக்கு ஆளாகுவதோடு, முந்திச்செல்பவர்கள் வேகமாகப்பயணிக்கும் வாகனங்களால் விபத்துக்குள்ளாக வேண்டிய நிலை ஏற்படுவதாகவும் பொதுமக்களால் சுட்டிக் காட்டப்படுகிறது.

எனவே பொதுமக்கள் மற்றும் பாதசாரிகளின் நலனையும் வேண்டுதலையும் கருத்திற் கொண்டு, குறிப்பிட்ட வீதியின் சந்தியில் காலைவேளைகளில் போக்குவரத்து கண்காணிப்பு பொலிஸார் கடமையில் ஈடுபட்டு வாகன நெருக்கத்தை மட்டுப்படுத்தி பாதசாரிகளுக்கு உதவ வேண்டுமென சமூக நலன் விரும்பிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (138)

# போலி நாணயத்தாள்களுடன் இரு பெண்கள் கைது

போலி நாணயத் தாள்களை வங்கியில் வைப்பிலிடச் சென்ற இரு பெண்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்கள் எனத் தெரியவருகிறது.

கல்கிசை பிரதேசத்தில் அமைந்துள்ள தனியார் வங்கியொன்றில் வைப்பிலிட நபரொருவர் கொண்டு சென்ற பணத்தில் போலி நாணயத் தாள்கள் இருந்ததை அவதானித்த வங்கியின் நிர்வாகி பொலிஸாருக்கு அறிவித்துள்ளார்.

இதன்படி குறித்த இடத்திற்கு விரைந்த பொலிஸார் பணம் வைப்பிலிட வந்த பெண்ணொருவரை சந்தேகத்தின் பேரில் கைது செய்து விசாரணை நடத்தினர். அதன் பின்னர் குறித்த பெண்ணுக்கு அந்தப் பணத்தை வழங்கிய மற்றுமொரு நபரையும் பொலிஸார் கைது செய்தனர்.

சந்தேகநபர்கள் இருவரும் கல்கிசை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு எதிர்வரும் முதலாம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரியவருகிறது.

# கழிவு ஓயில் விற்பனையில் பலமில்லியன் வருமானம்

(திருநெல்வேலி)

சுன்னாகம் நொதோன் பவர் மின்நிலையத்திலிருந்து வெளியேறும் கழிவு ஒயில் பாரிய தொட்டிகளில் சேர்க்கப்பட்டுப் பின்னர் அவை பரல்களில் அடைக்கப்பட்டு வெளியிடங்களுக்கு அனுப்பப்படுகின்றன. என நொதோன் பவர் மின் நிலைய நிர்வாக முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

இம்முறையில் பரல்களில் நிரப்பப்பட்ட கழிவு ஓயில் விற்பனை மூலம் கடந்த 2010ஆம் ஆண்டு ஐந்து மில்லியன் ரூபாவும், 2011ஆம் ஆண்டு மூன்று மில்லியன் ரூபாவும் கிடைக்கப் பெற்றதாக அவர் மேலும் கூறினார்.

சுன்னாகம் மின் நிலையத்துக்கு அண்மையில் உள்ள பல குடியிருப்பாளர்கள் தமது கிணறுகளில் ஓயில் தன்மை காணப்படுவதினால் அவற்றைக் குடிநீராக பயன்படுத்துவதற்கு இயலாமல் இருப்பதாக சுற்றுச் சூழல் சம்பந்தமான அமைச்சுக்கு குடியிருப்பாளர்களினால் கையொப்பமிடப்பட்ட மகஜர் ஒன்றினை அனுப்பியிருந்தார்கள்.

இதுபற்றி நொதேன் பவர் மின்நிலைய நிர்வாக முகாமையாளரிடம் கேட்டபோது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நெதோன் பவர் ஊழியர்களின் பாவனைக்கென இருந்த கிணற்றிலும் இவ் ஒயில் தன்மை காணப்படுவதாக அவர் மேலும் கூறியுள்ளார்.

யாழ். மாவட்டத்துக்கு மின் வழங்கும் நிறுவனங்களாக சுன்னாகம் மின்சாரசபை, அக்றோ மற்றும் நெதோன் பவர் ஆகியவை செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (137)



**கடந்த காலத்தை மதிப்பிடுவதன் வழியாகவும், அந்தக் கடந்த காலத்தின் பாதிப்புகள், கசப்புகள், அழிவுகள், தாக்கங்கள் போன்றவற்றினால் ஏற்பட்ட வாழ்க்கை அழிவைப் பற்றியும் வாழ்வுச் சிதைவைப் பற்றியும் சிந்திப்பதன் மூலமாகவும் பகைப் பிராந்தியத்திலிருந்து வெளியே வரவேண்டியதன் அவசியத்தை நாம் உணர்ந்து கொள்ள முடியும்.**

நன்றி: எதுவரை

# பகை மறக்காமல் வாழ்க்கை இல்லை

நாம் எங்கள் கடந்த கால வாழ்க்கையில் "நிகழ்காலம்" என்ற ஒன்றை ஒருபோதும் அதன் முழுமையோடு அனுபவிக்கவில்லை. ஏனெனில் எங்களுடைய கடந்த முப்பது ஆண்டு கால நிகழ்காலம் என்பது உத்தரவாதங்கள் அற்றதாக - அபாயங்கள் நிறைந்ததாகவே இருந்தது. இதற்குக் காரணம் அது பகை வளர்ப்பின் மத்தியில் இருந்தது என்பதேயாகும். தமிழ் அரசியற் தலைமைகள் தமிழ்ச் சமூகத்தை பகை வளர்ப்பின் மூலம் இட்டுச் சென்றன. பகை வளர்ப்பின் மூலமே பிரிவினையைச் சாத்தியப்படுத்தலாம் என்ற எண்ணம் இங்கே மையம் கொண்டிருந்தது. பகைக் கூறுகளை அல்லது பகை நிலையை சிங்கள அதிகார வர்க்கம்தான் முதலில் உருவாக்கியிருக்கலாம். என்றபோதும் தமிழ்த் தரப்பினர் இதைத் தமது அரசியல் ஆதாயத்துக்குரிய ஒரு முதலீடாகக் கொள்ளத் தொடங்கி விட்டனர். சிங்கள அதிகார வர்க்கத்தின் நிகழ்ச்சிப் பின்னலுக்குள் இவர்கள் தம்மை அறியாமலே சிக்கி விட்டனர். இன்னும் இந்தப் பின்னலுக்குள்ளிருந்து வெளியேற முடியாமற் தவிக்கின்றமைக்கு தமிழ்த் தரப்பின் அறிவியற் பலவீனமே காரணமாகும். இந்த நிலையில் எவ்வாறு அமைதியும் மகிழ்ச்சியும் ஏற்பட முடியும்?

ஆனால், ஒவ்வொரு மனிதரும் தங்கள் நிகழ்காலத்தில்தான் வாழ்கிறார்கள். நிகழ்காலம் என்பது வாழும்காலம் - வாழ்க்கை நிகழும் காலம், வாழ்வு தங்கியிருக்கும் தளம் என்பதாகும்.

இங்கே எங்களுக்கு இந்தத் தளமே ஆட்டம் கண்டு கொண்டிருந்தது. இந்த நிலையில் எப்படி உத்தரவாதங்கள் இருக்க முடியும்? எவ்வாறு அமைதி கிட்ட முடியும்? இயல்பும் அமைதியும் இல்லாத காலத்தில் அல்லது அவ்வாறானதொரு சூழலில் மகிழ்ச்சியும் நிம்மதியும் இருக்காதல்லவா! நாங்கள் இவை எதுவும் இல்லாமற்தான் வாழ்ந்தோம். நாங்கள் இயல்பற்ற காலத்தில் வாழ்ந்திருக்கிறோம். சட்டங்கள், கட்டுப்பாடுகள், விதிமுறைகள் முற்றியிருந்த ஒரு சூழலில், எல்லாவற்றுக்கும் சந்தேகப்படுகிற நிலைமையில், அதிகார மையங்களுக்கிடையில் கிழித்தெறியப்படுகிற மையத்தில், எல்லாவற்றுக்காகவும் சனங்களைப் பிழியப்படுகிற நிர்ப்பந்தங்களின் மத்தியில் வாழ்ந்திருக்கிறோம்...

இந்த அவலம் மறக்க முடியாதது. அதேவேளை மீண்டும் இத்தகைய ஒரு அவல நிலைக்கு நாம் மீண்டும் திரும்பிச் செல்ல முடியாது.

எங்களின் கடந்த காலத்தைப் போலவே பிரச்சினைப்படுகிற பல சமூகங்கள் உலகம் முழுதும் இருக்கின்றன. பலஸ்தீனத்தில், கென்யாவில், பொஸ்னியாவில், ஆப்கானில், ஈராக்கில், ரிபியூனியாவில், சூடானில் என்றெல்லாம் திசை முழுதும் பரந்திருக்கின்றன.

எந்த மனிதரும் கடந்த காலத்தில் வாழ்வதில்லை. எதிர்காலத்திலும் வாழ்வதில்லை. நிகழ்காலத்தில்தான் வாழமுடியும். எதிர்காலத்தை நோக்கிப் பயணிப்பது வேறு. ஆனால் நிகழ்காலமொன்றில்தான் வாழமுடியும்.

நிகழ்காலத்தைச் சிதைத்து விட்டு எதிர்காலத்தைப்- பற்றி எவரும் கனவு காணமுடியாது. எதிர்காலம் என்பதே நிகழ்காலத்தின் உருவாக்கம்தான். சமூகப் பொறுப்பும் சமூகப் பணியும் எவ்வாறு அமைய வேண்டுமெனில், நிகழ்காலத்தைப் பாதுகாத்து, நிகழ்காலத்தை அமைதிப்படுத்தி, நிகழ்காலத்தை மகிழ்வூட்டி வைத்திருப்பதாகும். இதன்மூலம் எதிர்காலத்தை பாதுகாப்பானதாகவும் முன்னேற்றகரமானதாகவும் மாற்றிக் கொள்வது, அமைத்துக் கொள்வது, உருவாக்கிக் கொள்வதாகும்.

அரசியல் அதிகாரம் என்பது, நிகழ்காலத்தைப் பாதுகாப்பதில்தான் முக்கிய பங்காற்ற வேண்டும். எதன் நிமித்தமும் அது எதிர்காலத்தோடு விளையாடக் கூடாது. நிகழ்காலத்தைச் சிதைக்கும் நடவடிக்கைகள் எதிர்காலத்தையே பாதிக்கின்றன. அமைதியைப் பேணமுற்படாத எத்தகைய அரசியற் கோட்பாடும் பயனற்றது. அமைதிக் கெதிரான அரசியற் சூழலில், அதிகாரத்தின் கீழ் எவ்வாறு அமைதியைப் பேண முடியும்? என்று யாரும் கேட்கலாம். அமைதியின் உருவாக்கத்தில் மக்களே முக்கிய பங்களிப்பைச் செய்ய வேண்டும். என்னதான் வலிய அதிகார அமைப்பாக இருந்தாலும் அது மக்களில்தான் - சமூகத்தில்தான் தங்கியிருக்கிறது. ஊடகங்களும் புத்திஜீவிகளும் மக்களுக்கு விசுவாசமாக மக்களை விழிப்பு நிலையில் வைத்துக் கொள்ளலாம். விழிப்படைந்திருக்கும் மக்கள் தோற்கமாட்டார்கள். விழிப்போடிருந்தால் மக்கள் நிச்சயம் வெல்வார்கள்..

எங்கள் நாட்டில், ஊடகங்களும் புத்திஜீவிகளும் அதிகார அமைப்புகளுக்கும் அதிகாரத் தரப்புகளுக்குத்தான் விசுவாசமாக இருந்திருக்கின்றன. இன்னும் இதே நிலைமைதான் நீடிக்கிறது. இதுதான் கொடுமையானது. மக்களை மூடி மாயத் திரைகளை விரித்திருக்கிறார்கள். இனவாதத் திரை பல அடுக்குகளாக விரிக்கப்பட்டிருக்கிறது.

இனப்பகை வளர்ந்திருக்கும் ஒரு சூழலில் நிகழ்காலம் சிதைக்கப்பட்டு விடும். அல்லது எப்படியோ அது சிதைந்து விடும். அப்படியிருக்கும் போது எதிர்காலம் என்பது எவ்வாறு சாத்தியமாகும். அதாவது உத்தரவாதப்படுத்தப்படும் அளவில் அது எவ்வாறு சாத்தியப்படும்?

ஆனால், இன்னும் இலங்கையில் இவை குறித்த சிந்தனைகள் பரவலாக உருவாகவில்லை. அங்கும் இங்குமாக சில புள்ளி அளவில் சில முயற்சிகள் நடந்திருக்கின்றனவே தவிர, குறிப்பிட்டுச் சொல்லத்தக்கதாகவோ, நம்பிக்கை கொள்ளக் கூடியதாகவோ பகை மறப்புச் சிந்தனை வளர்த்தெடுக்கப்படவில்லை.

அதேவேளை இன்னும் பகையை வளர்க்கும் அனைத்துக் கூறுகளும் அப்படியே சூடுதணியாமல் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அரசியற் கட்சிகளும் ஊடகங்களும் இன முரண்களை வளர்ப்பதிலேயே குறியாக இருக்கின்றன. அத்துடன் பிரச்சினைக்குக் காரணமாகவும் பிரச்சினைக்குரிய களத்துக்கு வெளியேயும் இருக்கும் தரப்புகளும் இலங்கையின் இன முரணை வளர்க்க முனைகின்றன. இனமுரணில் பகைவளரும். பகை என்பது எப்போதும் வளர்ச்சிக்குத் தடையானது. அது சமூகங்களின் வளர்ச்சிக்கும் தடையே. நாட்டின் வளர்ச்சிக்கும் தடையே. ஆகவே வளர்ச்சிக்குச் சிரமப்படும் நாடுகளையும் சமூகங்களையும் தாம் தமது சந்தைக்காகப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற எண்ணத்தில் இந்தத் தரப்புகள் இனமுரணை - பகைக் கூறுகளை வளர்க்க முற்படுகின்றன.

ஆகவே பின் தங்கிய சமூகங்கள் தங்களுக்குள் முரண்படுவதையிட்டு எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அதாவது பகையையும் முரண்களையும் தவிர்த்துக் கொள்ள வேணும்.

இலங்கையில் சிங்களவர்கள் தமிழர்களை ஒடுக்க முனைகிறார்கள். தமிழர்கள் முஸ்லிம்களை ஒடுக்க முனைகிறார்கள். ஆனால் தமிழர்கள், சிங்களவர்கள், முஸ்லிம்கள் என்ற வேறுபாடில்லாமல் இலங்கையர்களைச் சுரண்டவும் இலங்கையர்களை ஒடுக்கவுமே பிற சக்திகள் முயற்சிக்கின்றன. இதில் அவை எந்த வேறுபாடுகளையும் பார்ப்பதில்லை.

ஆகவே நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை நமது அனுபவங்களைக் கொண்டே முடிவு செய்து கொள்ளலாம். நமது கணிதங்கள் தோற்றுவிட்டன. அவற்றுக்கான காரணிகளும் பிழையென்று தெரிந்திருக்கின்றன. எனவே நாம் நமது கடந்த காலத்தை விருப்பு வெறுப்புகளுக்கு அப்பால் முற்றுமுழுதாகவே பரிசோதனைக்குட்படுத்த வேண்டும்.

கடந்த காலத்தை மதிப்பிடுவதன் வழியாகவும், அந்தக் கடந்த காலத்தின் பாதிப்புகள், கசப்புகள், அழிவுகள், தாக்கங்கள் போன்றவற்றினால் ஏற்பட்ட வாழ்க்கை அழிவைப் பற்றியும் வாழ்வுச் சிதைவைப் பற்றியும் சிந்திப்பதன் மூலமாகவும் பகைப் பிராந்தியத்திலிருந்து வெளியே வரவேண்டியதன் அவசியத்தை நாம் உணர்ந்து கொள்ள முடியும்.

ஆனால், "இலங்கையில் பகை வளர்ப்பிலேயே அரசியல் வியாபாரத்தை முதலிட்டிருக்கும் நிலையில் பகை மறப்பைப் பற்றி எவ்வாறு சிந்திக்க முடியும்?" என்றொரு நண்பர் கேட்டார். இந்தக் கேள்வி நியாயமானதே. இதற்குத்தான் புத்திஜீவிகளும் ஊடகங்களும் பொறுப்போடு இருக்க வேண்டும் என்கிறேன். ஜனநாயகச் சூழலை வலுப்படுத்தும் பங்கு முக்கியமாக இந்த இரண்டு தரப்பினருக்கும்தான் உள்ளது. இவர்களை இயங்க வைப்பதில் சிந்தனையாளர்களுக்குமுக்கிய பொறுப்புண்டு. குறிப்பாக இடதுசாரிகளுக்கு.

பகை மறப்பு என்பது மேன்மையான தொரு பணி. அதுவொரு உயர் நிலைச் செயற்பாடு. பரஸ்பரப் புரிந்துணர்வின் அடிப்படையிலும் நம்பிக்கையின் அடிப்படையிலும் மேற்கொள்ளப்படுவதாகும். முழுமையானதொரு ஜனநாயகச் சூழலில் பகைக் கூறுகளும் பகைக் காரணிகளும் இல்லாமற் போய் விடும். ஆகவே நாம் ஜனநாயகச் சூழலை வளர்த்தெடுப்பதைப் பற்றி முதலில் சிந்திக்க வேண்டும்.

ஜனநாயகச் சூழலுக்கு நாம் செல்வதாயின் முதலில் சகிப்புத்தன்மையும் விட்டுக் கொடுப்புகளுக்கும் ஏற்றுக் கொள்ளல்களுக்கும் தயாராகவேண்டும். இதுதான் மனிதச் சிந்தனைக்குரிய - மானுடப் பண்புக்குரிய அடிப்படையாகும். பன்மைச் சமூகங்களாக வாழ்வதே மனிதச் சிறப்பாகும். எவ்வளவுக்கு பல சமூகங்களோடு, பல கலாசாரத் தளங்களோடு கலந்திருக்கிறோமோ அவ்வளவுக்கு பண்பாட்டில் சிறப்படைகிறோம்.

வளர்ச்சியடைந்திருக்கும் எந்தச் சமூகத்திலும் பன்முகத்தன்மையை நாம் காண முடியும். வளர்ச்சியடையாத சமூகங்களின் காட்டுமிராண்டி மனோபாவமே இனரீதியாகவும் மதரீதியாகவும் தம்மை முதன்மைப் படுத்துவதாகும். ஏனைய தரப்புகளிடம் இருந்து தம்மைமுதன்மைப் படுத்துவதும் மேன்மைப்படுத்திக் கொள்வதும் எதேச்சாதிகாரத்துக்கு - பாசிசத்துக்குமே அழைத்துச் செல்கிறது.

ஈழத்தமிழர்கள் இன்று உலகத்தில் பல தேசங்களிலும் பல திசைகளிலும் வாழ்கின்றனர். அங்கே பல சமூகங்கள் வாழக்கூடிய - உரிமைகளைப் பேணக்கூடிய-பெறக்கூடிய ஒரு நிலைமை எப்படி ஏற்பட்டிருக்கிறது என்று சிந்திப்பதில்லை. அங்கே குறைந்த பட்ச ஜனநாயகப் பேணுகையாவது உள்ளதே என்பதைப் பற்றி கவனிப்பதுமில்லை.



ஜனநாயகத்தை வளர்த்தெடுப்பது என்பது, இன்று இலங்கைக்கு ஒரு அவசியம். அது ஒரு கற்கையாக முக்கியப்படுத்தப்பட வேண்டியுள்ளது.

# பணம் செலவு செய்யாது நாடாளுமன்றக் கனவு பலிக்காது

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் 100 வீதம் நேர்மையானவர்கள் எனக் கருத முடியாது என போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

இந்த தேர்தல் முறைமையின் அடிப்படையில் நாடாளுமன்றம் செல்ல வேண்டுமாயின் குறைந்தபட்சம் 500 இலட்ச ரூபா தேவை. பணம் செலவழிக்காது நாடாளுமன்றத்திற்கு செல்வது கனவாகவே அமையும்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான நாம் அனைவரும் குற்றங்கள் செய்திருக்கின்றோம். எங்களை நேர்மையானவர்கள் என நினைக்க வேண்டாம்.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வாகன இறக்குமதி அனுமதிப்பத்திரமொன்று கிடைக்கின்றது. ஒரு சிலரைத் தவிர இந்த அனுமதிப் பத்திரத்தை அநேக நாடாளுமன்ற உறுப்பினர்கள் விற்பனை செய்துள்ளனர்.




150 இலட்ச ரூபா அளவிற்கு விற்பனை செய்து தேர்தல் காலத்தில் பட்ட கடன்கள் அடைக்கப்படும். நானும் இதனையே செய்கின்றேன்.

ஜே.ஆர். ஜயவர்தனவின் தேர்தல் முறையினால் அதிகளவு பணத்தை செலவிட நேரிட்டுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

மத்துகம தொடங்கொட பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

# உயர்தரப் பரீட்சை பெறுபேறு ஜனவரி மாதம் வெளியாகும்




(கொழும்பு)

ஜனவரி மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் உயர்தரப் பரீட்சை பெறுபேறு வெளியிடப்படும் என பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் உரிய முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகிள்றது.

பல்கலைக்கழக விரிவுரையாளர்களினால் முன்னெடுக்கப்பட்ட தொழிற்சங்கப் போராட்டத்தினால் விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கைகள் கால தாமதமடைந்திருந்தது.

எனினும், தற்போது இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டுள்ளது இரண்டாம் கட்ட விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பரீட்சை ஆணையாளர் என்.ஜே.புஸ்பகுமார தெரிவித்துள்ளார்.

# 51 ஆபாச இணைய தளங்களை முடக்குமாறு கோரிக்கை




(கொழும்பு)

இலங்கை இளைஞர், யுவதிகள் தோன்றும் 51 ஆபாச இணைய தளங்களை முடக்குமாறு சிறுவர் பாதுகாப்பு அதிகார-சபை, நீதிமன்றில் கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கை இளைஞர் யுவதிகள் தோன்றும் 51 ஆபாச இணைய தளங்கள் பற்றிய தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. இந்த இணைய தளங்களை முடக்கி விடுமாறு பத்தரமுல்லவில் அமைந்துள்ள விசேட சிறுவர் நீதிமன்றில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் விசாரணை நடத்தப்பட்டுள்ளதாக நீதிமன்றம் அறிவித்துள்ளது. குறித்த இணைய தளங்களை முடக்குவது தொடர்பில் சட்ட மா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனை பெற்றுக்கொள்ளப்பட உள்ளதாக நீதிமன்றம் அறிவித்துள்ளது.

சட்ட மா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனைக்கு அமை-வாக அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என விசேட சிறுவர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

# மசகு எண்ணெய் இறக்குமதி; பல நாடுகளுடன் பேச்சுவார்த்தை

ஈரானில் இருந்து மசகு எண்ணெயை இறக்குமதி செய்வது தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையுடனும், ஏனைய பல்வேறு நாடுகளுடனும் இலங்கை பேச்சுவார்த்தை நடத்தவுள்ளது. அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.


ஈரான் லைட் மசகு எண்ணெய் இல்லாத நிலையில், சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன. இந்த நிலையில் இலங்கையில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாட்டினை நீக்கும் பொருட்டு இந்தப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது ஈரான் மீது அமெரிக்கா பொருளாதாரத் தடையை விதித்ததைத் தொடர்ந்தே, இலங்கைக்கு மசகு எண்ணெய் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்றார்.

இதேவேளை எதிர்வரும் 10 தினங்களுக்கு மசகெண்ணெய்




இல்லாத நிலையில் சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

# இலங்கை தேயிலையின் விலை அதிகரிப்பு



இலங்கைத் தேயிலைக்கான விலை தொடர்ந்தும் உயர் நிலையில் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

த ஹிந்து பிஸ்னஸ் இணையத்தளம் இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது.

இந்த வாரம் கொழும்பு சந்தையில் ஒரு கிலோ இலங்கை தேயிலை 3.01 டொலர்களுக்கு விற்பனையாகியுள்ளது.

எவ்வாறாயினும் இது கடந்தவருடத்துடன் ஒப்பிடும் போது, 9.34 சதவீதம் குறைவான விலைப் பதிவு என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கென்யாவின் தேயிலை ஒரு கிலோ 2.77 டொலர்களாக காணப்படுவதுடன், விலை அடிப்படையில் கென்யாவின் தேயிலை இரண்டாம் இடத்தில் உள்ளது.

# 8 இலட்ச ரூபா கப்பம் பெற முயன்ற முன்னாள் சிவில் படையதிகாரி கைது




8 இலட்ச ரூபா கப்பம் பெற்றுக் கொள்ள முயற்சித்த முன்னாள் சிவில் பாதுகாப்பு படையதிகாரி ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஒருவரைப் போன்று தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தி அனுராதபுர மாநகரசபையின் ஆளும் கட்சி உறுப்பினரை குறித்த சிவில் பாதுகாப்புப் படையதிகாரி மிரட்டியுள்ளார்.

மாநகரசபை உறுப்பினர் சுசில் திலகரட்ன என்பவரிடம் இவ்வாறு எட்டு லட்ச ரூபா கப்பம் கோரப்பட்டுள்ளது.

சில ஆண்டுகளுக்கு முன்னர் இடம்பெற்ற படுகொலைச் சம்பவத்துடன் சுசில் திலகரட்ன தொடர்புபட்டிருப்பதாகவும் அந்தத் தகவல்களை தொடர்ந்தும் இரகசியமாகப் பேண கப்பம் வழங்குமாறும் குறித்த நபர் தொலைபேசி மூலம் அச்சுறுத்தியுள்ளார்.

கப்பப் பணம் வழங்கப்படாவிட்டால் தகவல்களை அம்பலப்படுத்தி சட்ட நடவடிக்கை எடுக்கப் போவதாக குறித்த சிவில் பாதுகாப்புப் படையதிகாரி எச்சரிக்கை விடுத்துள்ளார்.


கப்பப் பணத்தை வழங்குவதனைப் போன்று போலிப் பணப் பொதி ஒன்றை வழங்கி குறித்த சிவில் பாதுகாப்புப் படையதிகாரியை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

# பதில் சொலிஸிட்டர் ஜெனரலாக நியமனம்

இலங்கையின் மேலதிக சொலிஸிட்டர் ஜெனரலான ஜயாத்துரை ஞானப்பிரகாசம் பதில் சொலிஸிட்டர் ஜெனரலாக நியமிக்கப்பட்டுள்ளார்.

சட்டமா அதிபர் திணைக்களத்தில் பல வருடங்களாகக் கடமையாற்றி வருகின்ற இவர் யாழ். மாவட்ட தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள சாவகச்சேரியைப் பிறப்பிடமாக கொண்டவரர்வர்.

# ஏற்றுமதி வீழ்ச்சி



இலங்கையின் ஏற்றுமதிகள் கடந்த மாதம் வீழ்ச்சி அடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. கடந்த மாதம் 13.1 சதவீதத்தால் வீழ்ச்சி அடைந்த ஏற்றுமதிகள், 828.9 மில்லியன் டொலர்களாகப் பதிவாகி உள்ளன.

அத்துடன் இறக்குமதிகளும் 4.7 மில்லியன் சதவீதத்தால் குறைவடைந்துள்ளது.

குறிப்பாக தேயிலை ஏற்றுமதி 32.7 சதவீதமாக குறைவடைந்துள்ளது. அத்துடன் ஆடை உற்பத்திகளின் இறக்குமதிகள் 15.1 சதவீதமாக குறைவடைந்துள்ளது.

# 13 + ஐ இரத்து செய்வது தற்கொலைக்கு நிகரானது

(கொழும்பு)

13ஆம் திருத்தச் சட்டத்தை. இரத்துச் செய்யும் அரசாங்கத்தின் முயற்சியானது தற்கொலைக்கு நிகரானது என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார்.

13ஆம் திருத்தச் சட்டம் இரத்துச் செய்யப் பட்டாலூல் அது நாட்டுக்கு பாரியளவில் பாதிப்புக்களை ஏற்படுத்தும்.

தற்போதைய ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் விமல் வீரவன்ச, சம்பிக்க ரணவக்க போன்றோர் கோஷங்கள் எழுப்ப எதுவும் இல்லாத காரணத்தினால் 13ஆம் திருத்தச் சட்டத்தை தூக்கிப் பிடித்துள்ளனர்.

இந்தப் போராட்டங்களினால் மக்களின் கவனத்தை திசை திருப்ப ஆளும் கட்சி முயற்சிக்கின்றது. நாட்டின் பிரச்சினைகளுக்கு 13ஆம் திருத்தச் சட்டமே காரணம் என சிலர் குற்றம்



சுமத்துகின்றனர்.


எனினும், மக்களின் அநேக பிரச்சினைகளுக்கு அரசாங்கத்தின் இயலாமையே கரணமாகும். வடக்கு கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் வெற்றியீட்ட முடியாத காரணத்தினால் அரசியல் சாசனத்தில் திருத்தங்களைச் செய்ய அரசாங்கம் முயற்சிக்கின்றது.

நாட்டின் அரசியல் சாசனத்துடன் விளையாடுவது எதிர்காலத்தை பாதிக்கும் என லக்ஸ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார்.



நெல்லியடி செலான் வங்கிக் கிளையில் நவராத்திரி விழா கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றபோது குருக்கள் பூஜை வழிபாடுகளில் ஈடுபடுவதை காணலாம். (18)

# பரமர் சங்கமம்



"சிறு பிள்ளை வேளாண்மை வீடுவந்து சேராது" அப்பவும் கொஞ்சப் பேர் உப்புடித்தான் சொன்னவை. அதைக் கேக்கிற அளவில் பொடியள் இருக்கேல்லை.

மாணவர் பேரவையைச் சேர்ந்த பொடியள் கொஞ்சம் ஒண்டாச் சேர்ந்து துவங்கினாங்கள். அதுக்கு முன்னதா வடமராட்சிப் பகுதியிலும் இளைஞர் சிலர் வெளிக்கிட்டவை.

எனக்கு நல்ல ஞாபகம். வடமராட்சி, வல்வெட்டித்துறை அந்த நாளேல தமிழ் நாட்டில இருந்து கடத்தல் சாமான்களைக் கொண்டு வாறதில் பேர்பெற்றிருந்தது.

பருத்தித்துறையும் கொஞ்சம் ஈடுபாடுதான். எண்டாலும் வல்வெட்டித்துறைதான் மும்முரம். அதைத்தடுக்கவும் அப்போதைய அரசுகள் படாத பாடுகள் பட்டன.

முடிவாக இராணுவத்தைக் களத்துக்குக் கொண்டுவந்து அடக்கினாங்கள். அதுக்குப்பின்னாலதான் இந்தப் போராட்டம் வடிவம் பெற்றது.

ஒண்டா இருந்த பொடியள் நாலைந்து பாடாகப் பிரிஞ்சாங்கள். அதில ஒண்டுதான் முள்ளிவாய்க்கால் வரை நிண்டது. இதில அரசியல் பார்வை இருந்த மற்றக் குழுக்களை மிதிச்சுக் கொண்டு ஆயுத பலத்தைக் கொண்ட 'பெரிசு' பல வருசங்களாக நிண்டு புடிச்சுது.

இதைத்தான் போராசிரியர் எம்.ஏ.நுஃமான் 'காலச்சுவடு' செவ்வியில் புலிகளிடம் அரசியல் இல்லை எண்டு குறிப்பிட்டார். அவர் வெறுமனே அரசியல் இருக்கவில்லை எண்டதோட சரி; அதனை விளக்கமாகச் சொல்லவில்லை.

பரமருடைய எண்ணத்தில் அவர்களின் அரசியல் தோல்வி எண்டது இப்படித்தான் படுகிறது. பல தடவைகளில் இலங்கை அரசு பூட்டான், திம்பு, ஜெனிவாப் பேச்சுகள் முறிந்தவுடன் அதுவரை தம்மை திடவளப்படுத்திக் கொண்ட புலிகள் போரைத் தொடுத்தனர்.

இவற்றையெல்லாம் ஆவணப்படுத்திய அரசு, இறுதியில் முள்ளி வாய்க்கால் போரில் புலிகள் அந்தத் தந்திரோபாயத்தைப் பயன்படுத்த முடியாமல் சர்வதேசப் பார்வைக்கு அதனை அரசியல் சூத்திரமாகப் பயன்படுத்தியது.


இன்னும் சொல்லப் போனால் இந்தியத் தலையீட்டில் இணைக் கப்பட்ட வடக்கு கிழக்கை ஆறுமாதங்களில் மக்களின் வாக்கைப் பெற்று நிரந்தரமாக்க வேண்டுமெண்டதில் புலிகள் அக்கறை எடுக்கவில்லை.

அதையே நோக்கமாக இருந்த அரசு அதனை நீக்கி வடக்கை யும், கிழக்கையும் பிரித்தது. ஜப்பான் வெளிவிவகார பிரதிநிதி யசூசி அகாசி பிரபாகரனை நேரில் சந்திக்கவேண்டுமெண்டதை நிராக ரித்தது.

புலிகள் தமிழர்களின் ஏகப்பிரதிநிதித்துவத்தைக் காட்ட, தான் தோன்றியாக வந்த பிரபாகரன் சாதகமான வேளையைப் பயன்படுத்தி தேர்தலில் மக்கள் முன்பாக தோன்றி அனுமதியைப் பெறமுடியா மையும் பெரிய அரசியல் தோல்வியே.

இவையைத் தவிர புலிகளின் அரசியல் மீறல்கள் இதனையும் விட அதிகமெண்டுதான் சொல்ல வேண்டும். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இயக்க காலங்களில் இராணுவ தலைமைத்துவத்தை வைத்திருந்தவர். பிற்காலத்தல் அரசியல் நீரோட்டத்திற்கு வந்ததாலே இண்டைக்கும் எங்களோட வாழ்கின்றார் இல்லையே பின்ன...

# பயன்தரு மரங்களை வளர்த்து வாழ்வாதாரத்தை உயர்த்த வேண்டும்



மகிந்த சிந்தனைக்கு அமைவாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் முன்னெடுக்கப்பட்டு வரும் வாழ்வின் எழுச்சி (திவிநெகும) திட்டத்தின் நான்காம் கட்டமாக நாட்டின் சகல இடங்களுக்கும் 2012/ 2013 வருட போகத்தில் விதைகள் மற்றும் பயிர்களை பயிரிடும் தேசிய நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் கோப்பாயில் விதை பொருள் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

ஜே/261 கோப்பாய் மத்தி கிராமசேவகர் அலுவலகத்தில் விதை பொருட்கள் வழங்கு வழங்கும் வைபவம் கிராம சேவகர் எஸ்.பாலசுந்தரம் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதன்போது கருத்துத் தெரிவித்த ஈ.பி.டி.பியின் கோப்பாய் பிரதேச அமைப்பாளரும் வலி.கிழக்கு பிரதேசசபை எதிர்க் கட்சித் தலைவருமான இராமநாதன் ஐங்கரன், இத்திட்டத்தின் ஊடாக இங்கு வாழுகின்ற மக்கள் அனைவரும் தங்களுடைய அன்றாடத் தேவைக்கு பயன்படுத்தும் மரக்கறிகளை வீட்டுத்தோட்டத்தின் ஊடாக பூர்த்தி செய்வதுடன், அவசியமான பழவகைகளையும் நீண்டகாலம் வளரக்கூடிய பயன்தரும் மரக்கன்றுகளையும் வளர்த்து உங்களுடைய வாழ்வாதாரத்தை மேம்படுத்த வேண்டுமென்பதே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் விருப்பாகுமென்றும். அந்த வகையிலே உங்களுக்கு கிடைக்கின்ற திட்டங்களை நீங்கள் அனைவரும் சரியாக பயன்படுத்திக் கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்வில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் உத்தியோகத்தர்கள், வலிகாமம் கிழக்கு பிரதேச செயலக பட்டதாரி பயிலுனர்கள், வன வள திணைக்கள உத்தியோகத்தர் எஸ்.ரவிராஜ், சுகாதார உத்தியோகத்தர், பயனாளிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## திருட்டு முயற்சி தோல்வி

(வரணி)

வரணி - இடைக்குறிச்சி கிழக்கு தவசியாகுள விநாயகப் பெருமான் ஆலயத்தில் இடம்பெறவிருந்த திருட்டு முயற்சி தோல்வியில் முடிந்துள்ள சம்பவம் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

குறித்த ஆலயத்தின் கூரை ஒடுகளைக் கழற்றி உள்நுழைய முற்பட்ட திருடர்களை அவ்வீதியால் வந்த பொது மக்கள் சிலர் கண்டு சத்தமிட்டதை அடுத்து அவர்கள் அங்கிருந்து தப்பி ஓடியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (150)

## வாசிப்புமாத நிகழ்வு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கரைதுறைபற்று பிரதேச சபையின் பொது நூலகத்தினால் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு புத்தகக்கண்காட்சியும், கருத்தரங்கும் நேற்று முன்தினம் பொது நூலகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கரைதுறைபற்று பிரதேச சபை செயலாளர் கலந்து கொண்டு கண்காட்சியை ஆரம்பித்து வைத்தார். இதில் முல்லைத்தீவு மகா வித்தியாலயம், முல்லைத்தீவு இந்து வித்தியாலயம் ஆகிய பாடசாலை மாணவர்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

முன்னர் இந்நூலகத்தில் வாசிப்பு மாத நிகழ்வுகளாக முன்பள்ளி சிறார்களின் கதை சொல்லும் நேரம் போன்ற நிகழ்வுகள் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. (04)

# முரசின் இன்றைய பலன்

(20.10.2012 - சனிக்கிழமை)

நந்தன வருஷம் ஐப்பசி மாதம் 11 ஆம் திகதி. நட்சத்திரம் உத்தரட்டாதி.
சித்தயோகம் முன்னிரவு 11.46 வரை. திதி திரயோதசி முன்னிரவு 11.12 வரை.
இராகுகாலம் 9.03 - 10.33 வரை. சுபநேரம் 03.03 - 04.33 வரை.
எமகண்டம் 1.33 - 03.03 வரை, குளிகன் காலம் 06.03 - 7.33 வரை.
சனிப்பிரதோச விரதம், கேதாரகௌரி விரத 4 ஆவது நாள்.

**சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.**

| | |
|---|---|
| மேடம் | புதிய அனுபவம். பழப்பனைகள் செயல் வெற்றிக்கு உதவும். தொழில், போட்டி குறையும். கடன் மீளும். வழக்கு சாதகம். உறவுகள் பாசம். அமைதியும் இனிமையும். |
| ரிஷபம் | மனதிலும், உடலிலும் புத்துணர்வு. வேலையில் ஆர்வம். தொழில் வளர்ச்சி. உபரி வருமானம். வெளியூரிலிருந்து சுபசெய்தி. கேட்ட உதவிகள் கிடைக்கும். வெற்றிகர நாள். |
| மிதுனம் | முக்கிய பணி நிறைவேறும். திருப்திகரமான வரவு. உடல் நலம் சீராகும். மேலதிகாரி ஒத்துழைப்பார். நீண்ட நாள் பிரச்சினை தீரும். உறவினரால் மகிழ்ச்சி. மாணவர் தேர்ச்சி. |
| கடகம் | மனதில் உற்சாகம், செயல்களில் திறமை. தொழிலில் புதிய யுக்தி வெல்லும். இலாபம் கூடும். பொன், பொருள் சேர்க்கை. விருந்து, விசேஷம் நண்பர் உதவுவர். புது முதலீடு. |
| சிம்மம் | குடும்பத்தினர் உதவி. தொழில் உயர்ச்சி. உபரி வருமானம். வீடு, வாகன மாற்றம். பாராட்டு, வெகுமதி. அக்கம்-பக்கம் ஆதரவு பெருகும். விமர்சனங்கள் தாண்டி முன்னேற்றம். |
| கன்னி | அனுபவம் ஞானம் உதவும். கூடுதல் நேரம் வேலை. சராசரி பணவரவு. கடன் இருக்கும். உடல்நலத்தில் கவனம். புது அறிமுகம். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும். வெளியூர் நற்செய்தி. |
| துலாம் | பிள்ளைகளால் அந்தஸ்து உயரும். பழைய நபர் சந்திப்பு. வீட்டில் திருத்தம். திறமைக்கு பாராட்டு. அதிக பணவரவு. அரச உதவி. சுபநிகழ்வு திட்டம். திடீர் யோகம் கிட்டும். |
| விருச்சிகம் | தொழில், முன்னேற்றம். பணவரவு மிகும். போக்குவரத்தில் கவனம். கூடுதல் வேலை. பிள்ளைகளின் தேவை பூர்த்தி. உறவும் நட்பும் அனுசரணை. குடும்பத்திலும் வெளியிலும் மதிப்பு. |
| தனுசு | எல்லோரிடமும் அன்பும், கருணையும். உதவிகளால் சமூகத்தில் நற்பெயர். தொழில், புதிய பரிமாணம். அதிக இலாபம். குடும்ப விருப்பங்கள் நிறைவேற்றுவீர்கள். விருந்தும் பாராட்டும். |
| மகரம் | சஞ்சலம் மறையும். கூடுதல் வேலை. கூடுதல் இலாபம். இல்லறத்துணை விருப்பம் நிறைவேற்றுவீர்கள். குடும்ப மங்கல நிகழ்வு. பழைய பிரச்சினை தீரும். நன்மை வந்து சேரும். |
| கும்பம் | நட்புக்கு உதவி. நீண்டநாள் எதிர்பார்ப்பு நிறைவேறும். பணவரவு மிகும். விலை மதிப்புள்ள பொருள் வாங்குவீர்கள். உறவினர் வருகையும் கேளிக்கையும். பயணம் நேரலாம். |
| மீனம் | சிறப்பான நாள். வெற்றிகரமான திருப்பம். சக ஊழியர்களால் உதவி. வேலையில் புது வாய்ப்புகள். புது அத்தியாயம். அளவான பணவரவு. சேமிப்பு பயன்படும். பயணத்தில் மாறுதல். |

# காலிறுதியில் சாய்னா

(பாரிஸ்)

பாரிஸ் பிரெஞ்ச் ஓபன் சூப்பர் சீரீஸ் பட்மின்ரன் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதியில் விளையாட, இந்தியாவின் சாய்னா நெஹ்வால் தகுதி பெற்றார்.

இரண்டாவது சுற்றில் தாய்லாந்தின் சாப்ஸ்ரீ தயரத் தனசாயுடன் நேற்று முன்தினம் மோதிய சாய்னா 21,16, 21,13 என்ற நேர் செட்களில் வென்றார். இப்போட்டி 37 நிமிடம் மட்டுமே நீடித்தது குறிப்பிடத்தக்கது. லண்டன் ஒலிம்பிக் போட்டிக்கு பின்னர் களமிறங்கிய டென்மார்க் ஓப்பனில் பட்டம் வென்று அசத்திய சாய்னா, பிரெஞ்ச் ஓபனிலும் கோப்பை வெல்வார் என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது

# ஒலிம்பிக்கை நடத்தியதன் மூலம் பொருளாதாரத்தில் வளர்ச்சி

(லண்டன்)

லண்டன் ஒலிம்பிக் போட்டிகளிலிருந்து கிடைக்கப்பெற்ற வருமானத்தின் மூலம்பிரித்தானிய பொருளாதாரம்வளர்ச்சி கண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. கடந்த ஜூலை முதல் செப்டம்பர் வரையான காலப் பகுதியில் பிரித்தானிய பொருளாதாரம் வளர்ச்சியினை நோக்கி நகர்ந்துள்ளது. சற்று பொருளாதார பின்னடைவுகளைக்கண்ட பிரித் தானியாவுக்கு ஒலிம்பிக் மூலம் கிடைக்கப்பெற்ற வரு மானம் சாதகத் தன்மையை ஏற்படுத்தியுள்ளது. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் குறிப்பிடத்தக்களவான பங்களிப்பை ஒலிம்பிக் நுழைவுச்சீட்டுக்கள் மூலமான விற்பனை பெற்றுள்ளது.

# டெக்கனை வாங்கியது சன்

(மும்பை)

இந்திய பிரிமியர் லீக் கிரிக்கெட்டின் ஹைதராபாத் அணியான டெக்கன் சார்ஜர்ஸை சன் தொலைக்காட்சி குழுமம் வாங்கியுள்ளது.

நிதி நெருக்கடியில் சிக்கியுள்ள இந்த அணியை ஆண்டொன்றுக்கு ரூபாய் 85 கோடிகள் என்ற ஒரு தொகைக்கு சன் தொலைக்காட்சி குழுமம் வாங்கியுள்ளது.

அவ்வணியின் உரிமையாளர்களாக இருந்துவந்த தொலைக்காட்சி ஹெச் எல் இந்தியாவின் கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையான பி.சி.சி.ஐக்குசெலுத்த வேண்டிய தொகைகளை அது செலுத்தத் தவறியதால் டெக்கன் சார்ஜர் அணிக்கென அந்நிறுவனத்துக்கு வழங்கப்பட்டிருந்த உரிமத்தை கடந்த செப்டம்பரில் பி.சி.சி.ஐ. இரத் துச் செய்தது.

டெக்கன் சார்ஜர்ஸ் அணியின் உரிமைக்காக பி.சி.சி.ஐ. நடத்திய ஏலத்தில் மிக அதிகமான தொகை கொடுத்து தற்போது அவ்வணியை சன் தொலைக்காட்சி குழுமம் வாங்கியுள்ளது.



# சம்பியன் லீக் ருவென்ரி-20 இறுதிபோட்டியில் லயன்ஸ்

(டர்பன்)

சம்பியன்ஸ் லீக் ருவென்ரி-20 கிரிக்கெட் தொடரின் முதலாவது அரையிறுதியில் டில்லி டேர்டெவில்ஸ் அணியை வீழ்த்தி லயன்ஸ் அணி இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

நான்காவது சம்பியன்ஸ் லீக் ருவென்ரி 20கிரிக்கெட் போட்டி தென்னாபிரிக்காவில் நடந்து வருகிறது. 10 அணிகள் பங்கேற்ற இந்த போட்டியில் லீக் முடிவில் டில்லி டேர்டெவில்ஸ், டைட்டன்ஸ், சிட்னி சிக்சர்ஸ், லயன்ஸ் ஆகிய அணிகள் அரையிறுதி சுற்றுக்கு முன்னேறின.

இந்த நிலையில் டர்பனில் நேற்று முன்தினம் இரவு நடந்த முதலாவது அரையிறுதியில் ஐ.பி.எல். அணியான டில்லி டேர்டெவில்சும், தென்னாபிரிக்கா உள்ளூர் அணியான லயன்ஸும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற டில்லி அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.

இதற்கமைய முதலில் ஆடிய லயன்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 139 ஓட்டங்களைப் பெற்றது. இதில் குலாம்போடி 50, மெக்கன்சி 46, அல்விரோ பீற்றர்சன் 24 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் உமேஷ் யதேவ் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார். பதிலுக்கு 140 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய டில்லி அணி 20 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 117 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் பீற்றர்சன் 50, வோனர் 21 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் திர்க் நேனஸ், கிறிஸ் மோரிஸ், ஆரோன் பான்கிசோ தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.



# நீள்கிறது நடாலின் ஓய்வு

(பாரிஸ்)

ரபேல் நடால் மேலும் இரண்டு ரென்னிஸ் தொடரிலிருந்து விலகவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

உலகின் நான்காம் நிலை ரென்னிஸ் வீரர் ஸ்பெயினின் ரபெல் நடால், இடது கால் முட்டி காயம் காரணமாக விம்பிள்டன் ரென்னிஸ் போட்டிக்கு பின்னர் இதுவரை களம் இறங்கவில்லை.

இந்த நிலையில் காயத்தில் இருந்து இன்னும் மீளாததால், அடுத்த வாரம் தொடங்கும் பாரிஸ் மாஸ்டர்ஸ் ரென்னிஸ் மற்றும், லண்டனில் நடைபெறும் உலகின் தரப்படுத்தலில் எட்டு நிலைகளில் உள்ள வீரர்கள் பங்கேற்கும் உலக டூர் இறுதி சுற்று ஆகிய போட்டிகளில் இருந்தும் விலகுவதாக நடால் நேற்று முன்தினம் அறிவித்துள்ளார்.

# கவாஸ்கருக்கு சாதனையாளர் விருது

(மும்பை)

இந்திய அணி முன்னாள் கப்டன் சுனில் கவாஸ்கருக்குசி.கே.நாயுடு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்படும் என்று கிரிக்கெட் சபை (பி.சி.சி.ஐ.) அறிவித்துள்ளது. சபையின் விருது தேர்வுக் குழு கூட்டம் மும்பையில் நேற்று முன்தினம் நடந்தது. இந்தக் கூட்டத்தின் முடிவில், பி.சி.சி.ஐ. செயலர் சஞ்சய் ஜக்தலே வெளியிட்ட அறிக்கையில், நவம்பர் 21ஆம் திகதி மும்பையில் நடக்கவுள்ள கிரிக்கெட் சபையின் வருடாந்த விருது வழங்கும் விழாவில் முன்னாள் கப்டன் சுனில் கவாஸ்கருக்கு சி.கே.நாயுடு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி கௌரவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

விருதுடன் பாராட்டுப் பத்திரம் மற்றும் ரூ.25 இலட்சத்துக்கான காசோலையும் வழங்கப்படும். மொத்தம் 125 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி உள்ள கவாஸ்கர் (1970,87), 10,000 ஓட்டங்கள் கடந்த முதல் வீரர் மற்றும் தொடர்ச்சியாக 100 டெஸ்ட் போட்டிகளில் விளையாடிய முதல் வீரர், பிராட்மேனின் 29 சதம் சாதனையை முறியடித்த முதல் வீரர் உட்பட பல்வேறு சாதனைகளைப் படைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இவரது தலைமையில் இந்திய அணி 47 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி உள்ளது. ஓய்வு பெற்ற பின்னர் கிரிக்கெட் சபைத் தொழில்நுட்பக் குழு தலைவர், வர்ணனையாளர் உட்பட பல்வேறு பொறுப்புகளை வகித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இது குறித்து கவாஸ்கர் குறிப்பிடுகையில், விருதிற்குத் தெரிவு செய்யப்பட்டதில் மகிழ்ச்சி. என்னால் முடிந்த வரை கிரிக்கெட்டு சேவையாற்றுவேன் என்றார்.



# இந்தியாவின் மோசமான தந்திரம் அழிவுக்கே வழிவகுக்கும்

பயிற்சி போட்டியில் இந்திய 'ஏ' அணியில் ஒரு சுழற்பந்து வீச்சாளரைக் கூட சேர்க்காதது, படுமோசமான தந்திரம். இது அழிவுக்கே வழிவகுக்கும் என இங்கிலாந்து அணியின் முன்னாள் கப்டன் மைக்கல் வோகன் குற்றம் சுமத்தியுள்ளார். இந்தியா ஏ, இங்கிலாந்து அணிகள் பங்கேற்கும் முதல் பயிற்சி போட்டி வரும் 30 முதல் 1ஆம் திகதி வரை மும்பையில் நடக்கவுள்ளது. இதற்காக, 14 பேர் கொண்ட இந்திய ஏ அணியை, முதன் முறையாக சந்தீப் படேல் தலைமையிலான புதிய தேர்வுக்குழு அறிவித்தது. இது பெரும் சர்ச்சையை கிளப்பியுள்ளது.

அதாவது இந்த அணியில் வினய் குமார், டிண்டா, பர்விந்தர் அவானா மற்றும் இர்பான் பதான் என, வேகப்பந்து வீச்சாளர்களாக சேர்க்கப்பட்டனர். இங்கிலாந்து அணியை பொறுத்தவரையில் இங்குள்ள சுழலுக்கு சாதகமான ஆடுகளத்தில் ஓட்டங்கள் சேர்க்கத் திணறுவர். இதற்காகத்தான் பயிற்சி போட்டியே ஏற்பாடு செய்யப்படுகிறது. ஆனால், ஒரு சுழற்பந்து வீச்சாளர்களை கூட அணியில் சேர்க்காததால், இங்கிலாந்து வீரர்கள் சுழற்பந்துவீச்சில் பயிற்சி எடுக்க முடியாமல் போகும் நிலை ஏற்பட்டுள்ளது. இதுகுறித்து மைக்கல் வோகன் அதிருப்தி தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் தெரிவிக்கையில், பயிற்சி போட்டியில் சுழற்பந்து வீச்சாளரை சேர்க்காமல் இருப்பது, மோசமான தந்திரம். தேர்வாளர்கள் விளையாட்டு உணர்வுடன் நடந்துகொள்ளவில்லை. அடுத்து ஆடுகளங்களையும் இந்திய சுழற்பந்து வீச்சாளர்களுக்கு சாதகமாக அமைத்துக் கொள்ளட்டும். ஏனெனில், அவர்கள் துடுப்பாட்ட வீரர்கள் ஆட்டத் திறனின்றி தவித்து வருகின்றனர். இந்தியாவின் இந்தச் செயல் மிகவும் கொடூரமானது. சொந்தமண் சாதகம் என்பதில், புதிய அத்தியாயத்தை ஏற்படுத்தியுள்ளனர். இதை மற்ற அணிகளும் பின்பற்றத் தொடங்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

# அச்சமின்றி வாருங்கள் உச்ச பாதுகாப்பு அளிப்போம்

(லாகூர்)

தமது நாட்டிற்கு வருகைதரும் கிரிக்கெட் அணிகளுக்கு குண்டு துளைக்காத வாகனங்களை வழங்கவுள்ளதாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

கடந்த சில ஆண்டுகளாக பாகிஸ்தானில் சர்வதேச கிரிக்கெட் போட்டிகள் எதுவும் நடத்தப்படாததை முடிவுக்கு கொண்டு வரும் பொருட்டு இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அத்துடன் தலைநகர் இஸ்லாமாபாத்தில் புதிய உயர் பாதுகாப்புடன் கூடிய விளையாட்டரங்கம் ஒன்றையும் தாம் நிர்மாணித்து வருவதாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை குறிப்பிட்டுள்ளது.

இதன்மூலம் தமது நாட்டிற்கு வருகை தரும் சர்வதேச கிரிக்கெட் குழுவினருக்கு பாதுகாப்பான தங்குமிடம் வழங்கப்படும் எனவும் பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.

2009 ஆம் ஆண்டு பாகிஸ்தானுக்கு விஜயம் மேற்கொண்ட இலங்கை கிரிக்கெட் அணி மீது லாகூரில் வைத்து தாக்குதல் நடத்தப்பட்ட பின்னர், சர்வதேச போட்டிகள் எதுவும் அங்கு நடத்தப்படவில்லை.

இந்த தாக்குதலில் ஆறு பாகிஸ்தான் பொலிஸார் கொல்லப்பட்டதுடன், இலங்கை வீரர்கள் சிலர் காயமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

# சவாலுக்குத் தயார்




இந்திய தொடர் சவால் நிறைந்ததாகவே இருக்கும். அதை எதிர்கொள்ளத் தயாராக உள்ளோம். சுழற்பந்து வீச்சுக்கு எதிராக ஆடுவதில் கவனம் செலுத்துவோம் என இங்கிலாந்து அணி கப்டன் குக் தெரிவித்தார்.

பீற்றர்சன் அணிக்குத் திரும்பியிருப்பது சிறப்பான விடயம். அவர் அணிக்கு மீண்டும் திரும்ப வேண்டுமென விரும்பினேன். அப்படியே நடந்துள்ளது. பாகிஸ்தானுக்கு எதிரான தொடரில் தோல்வியடைந்த போதும் இலங்கையில் சிறப்பாக ஆடி தொடரை சமநிலை செய்தோம். சுழற்பந்து வீச்சில் எப்படி ஆட வேண்டுமோ அதற்கு தகுந்தபடி செயற்படுவோம். மேலும் முதல் இன்னிங்ஸில் அதிக ஓட்டங்கள் குவிப்பதிலும் கவனம் செலுத்துவோம். இந்தியாவில் நாங்கள் தொடரை வென்று 30 வருடங்களாகிவிட்டது. இம்முறை தொடரை வெல்ல முடியும் என்ற நம்பிக்கையுடன் உள்ளோம் எனவும் அவர் தெரிவித்தார்.

# தேசியத்தில் பதக்கம் வென்று கல்லூரிக்குப் பெருமை சேர்த்ததில் மகிழ்ச்சி

## மகாஜனாக் கல்லூரி வீரர் கிருஷ்ணா பெருமிதம்



(தெல்லிப்பளை)

பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட தடகளப் போட்டியில் பதக்கம் வென்றமை என் கல்லூரி வாழ்க்கையில் மறக்க முடியாததொரு அற்புத நிகழ்வு. எதிர்வரும் காலங்களில் வளர்ந்து வரும் இளம் வீரர்கள் எமது கல்லூரிக்கு அதிக பதக்கங்களை வென்று கொடுக்கப்பார்கள் என்ற பெரு நம்பிக்கையும் எனக்கு உண்டு என தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி வீரர் முருகதாஸ் கிருஷ்ணா தெரிவித்தார்.

பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட தடகளப் போட்டியின் 21 வயதுப் பிரிவு ஆண்களுக்கான உயரம் பாய்தலில் வெண்கலம் வென்ற கிருஷ்ணா கல்லூரிக்கும் வடக்கு மாகாணத்திற்கும் பெருமை சேர்த்தார்.

சாதனை குறித்து எமது செய்தியாளர் தயாளபாலன், கிருஷ்ணாவிடம் கருத்துக் கேட்டபோது மேற்கண்டவாறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நான் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியில் கடந்த 11 வருடங்களாக மெய்வல்லுநர் போட்டிகளில் பங்குபற்றி வருகின்றேன். இந்த வருடம் எனது கல்லூரிக்குப் பெருமை சேர்க்க வேண்டும் என்ற பெரு விருப்பு, எண்ணம் எனக்கிருந்தது. உயரம் பாய்தலில் சாதிக்க வேண்டும் என்ற விருப்பம் எனக்கு ஏற்பட்டது. ஆரம்பத்தில் இப்போட்டி குறித்த தெளிவான விளக்கங்கள் அதிகளவில் எனக்குத் தெரியாது. என்னை கல்லூரியில் முதலில் இனங்கண்டவர் உடற்கல்வி ஆசிரியர் மயில்வானம் ஆசிரியர். சிறு வயதில் இருந்து உயரம் பாயும் நுட்பங்களை கற்றுக் கொண்டு பயிற்சியை மேற்கொண்டேன். எங்கள் கல்லூரிக்கு மேலும் ஒரு உடற் கல்வி ஆசிரியரான கமலமோகன் நியமிக்கப்பட்டார். அவர் உயரம் பாய்தலில் தேசியம், சர்வதேச மட்டங்களில் பங்குபற்றி சாதனை படைத்தவர் என்பதால் அவரது வருகை எனக்கு மேலும் பலமாக இருந்தது. அவரிடமிருந்து பல நுட்பங்களை நான் கற்றுக்கொண்டேன். 11, 15, 17, 19 ஆகிய வயதுப் பிரிவுகளில் மாவட்டம், மாகாண மட்டப் போட்டிகளைத் தாண்டி தேசியமட்டப் போட்டிக்குத் தகுதி பெறும் வாய்ப்பு எனக்கு ஏற்படவில்லை. இதனால் சிலவேளைகளில் மனச்சோர்வும் வருவதுண்டு. இதனை அவதானித்த கமலமோகன் ஆசிரியர் எனக்கு உற்சாகம் அளித்து ஊக்கம் தந்தார். அத்துடன் உயரம் பாய்தலில் முக்கியமான நுட்பமான பொஸ்பெரி புளோப் என்ற முறை எனக்குக் கற்றுத் தந்தார்.

எனக்கு விளையாட்டுத்துறையில் ஈடுபடுவதற்கு பெரிதாக வீட்டில் ஆதரவு கிடைக்கவில்லை. இதற்கு இந்த வருடம் உயர்தரப் பரீட்சையில் தோற்றவுள்ள எனக்கு படிப்பே முக்கியம் என்பதில் அவர்கள் அக்கறையாக இருந்தனர். இவை எனக்குப் பெரும் சவாலாகவே இருந்தது. படிப்புடன் தேசிய மட்டப் போட்டியில் பதக்கம் வென்று கல்லூரிக்குப் பெருமை சேர்க்க வேண்டும் என்ற நோக்கில் செயற்பட்டேன். ஏனெனில், இந்த வருடத்துடன் எனது கல்லூரி வாழ்க்கை நிறைவுக்கு வருகின்றது..

உயர்தரப் பரீட்சை முடிந்த பின்னர், காலை, மாலை எனத் தொடர் பயிற்சிகளை பெற்று வந்தேன். காலையில் எமது கல்லூரியிலும், மாலையில் யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கிலும் பயிற்சிகளைப் பெற்றேன். இறுதி நேரத்தில் கல்லூரியில் உடற்கல்வி ஆசிரியர் கமலமோகன் மற்றும் பயிற்றுநர் ரமணன் ஆகியோரின் பயிற்சிகள் தேசியத்தில் சாதிக்க முடியும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியது.

இந்த நிலையில் தேசிய மட்ட உயரம் பாய்தலில் 1.88 மீற்றர் பாய்ந்து வெண்கலம் வென்றமை மகிழ்ச்சி தருகின்றது. இது என் வாழ்க்கையில் மறக்க முடியாத சம்பவம். சாதிக்கக் கூடிய பல வீர, வீராங்கனைகள் எமது கல்லூரியில் நிறையப் பேர் உள்ளனர். அவர்களுக்கு இது பெரும் ஆர்வத்தை ஏற்படுத்தும். சாதிக்கவேண்டும், சாதிக்க முடியும் என்ற நம்பிக்கையை உருவாக்க உறுதுணையாக இருக்கும் என்று நம்புகின்றேன். இவர்கள் தொடர் பயிற்சிகளை பெற்றுக் கொள்வதன் மூலம் தேசிய மட்டத்தில் சாதிக்க முடியும் என்ற எண்ணம் எனக்கு இருக்கிறது.

எனது வெற்றிக்கு உறுதுணையாக இருந்த அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், உடற்கல்வி ஆசிரியர்களான மயில்வாகனம், கமலமோகன், ரமணன் ஆசிரியர்கள் என அனைவருக்கும் நன்றி தெரிவிக்க விரும்புகின்றேன். நான் தேசிய மட்ட் போட்டிக் களத்தில் போட்டியாளனாக இருந்தவேளை எமது கல்லூரி வீரர்களும், யாழ். மாவட்டத்திலுள்ள சகல கல்லூரி வீரர்களும் எனக்கு ஆதரவு தந்து எனக்கு உற்சாகம் அளித்தனர். அவர்களுக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன் எனத் தெரிவித்தார். (93)

# யாழ். கோட்ட மட்ட கால்பந்து இரு பிரிவுகளில் மத்திய கல்லூரி சம்பியன்



(யாழ்ப்பாணம்)

யாழ். கோட்டப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற கால்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் 14 மற்றும் 18 வயதுப் பிரிவுகளில் வென்று யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி சம்பியனாகியது.

இப்போட்டிகள் கடந்த திங்கட்கிழமை முதல் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானங்களில் நடைபெற்று வந்தன.

இறுதிப்போட்டி நேற்று முன்தினம் சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

14 வயதுப் பிரிவினருக்கான இறுதிப்போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியினை எதிர்த்து சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி மோதியது. இரு அணிகளும் முதல் பாதி ஆட்டத்தில் வேகமாக ஆடின. எனினும் முதல் பாதி ஆட்டத்தில் இரு அணிகளினாலும் கோல் எதனையும் அடிக்க முடியவில்லை. போட்டியின் முடிவுக்காக பெனால்டி உதை நாடப்பட்டது. பெனால்டி உதையில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியனாகியது.

மூன்றாம் இடத்திற்கான ஆட்டத்தில் நாவாந்துறை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை 1:0 என்ற கோல் கணக்கில் ஒஸ்மானியக்கல்லூரியை வென்றது.

18 வயதுப் பிரிவின் இறுதிப் போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியினை எதிர்த்து நாவாந்துறை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை மோதியது. தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய நாவாந்துறை றோமன் கத்தோலிக்க பாடசாலை முதல் பாதி ஆட்டத்தில் ஒரு கோல் அடித்தது.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் சுதாகரித்துக் கொண்ட யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி பதில் கோல் அடித்தது. ஆட்டம் முடியும் வரை இரு அணியாலும் வேறுஎந்தவித கோலினையும் அடிக்காததினால் போட்டி 1-1 என்று சமநிலையில் முடிவடைந்தது.

சம்பியனைத் தீர்மானிக்க பெனால்டி உதைக்கு போட்டி கொண்டு செல்லப்பட்டது. பெனால்டி உதையில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி 5-3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றுச் சம்பியனாகியது.

மூன்றாம் இடத்திற்கான போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி 1:0 என்ற கோல் கணக்கில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியினை வென்றது.

விளையாட்டுச் செய்திகள்

## கால்ட்றன் கூடைப்பந்து

(கொழும்பு)

தேசிய மட்ட கால்ட்றன் கூடைப்பந்தாட்டப் போட்டியில் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த ஆண், பெண் அணிகள் பங்குகொள்கின்றன.

இப்போட்டிகள் இன்றும் நாளையும் கொழும்பு பொலிஸ் விளையாட்டு அரங்கில் இடம்பெறவுள்ளது.

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட அணிகள், பயிற்றுநர் செ. ரமணன் தலைமையில் நேற்று கொழும்பு சென்றுள்ளது.

இப்போட்டி குறித்து பயிற்றுநர் ரமணன் குறிப்பிடுகையில், கூடைப்பந்தாட்டப் போட்டிகளில் யாழ். மாவட்ட வீர, வீராங்கனைகள் சிறப்பான முறையில் செயற்பட்டு வருவது மகிழ்ச்சி அளிக்கின்றது. இச்சுற்றுப் போட்டியில் சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்தி மாவட்டத்திற்கும், மாகாணத்திற்கும் பெருமை சேர்க்க முயற்சிப்பார்கள் என்ற பெரு நம்பிக்கை எனக்கு உண்டு.

எந்தக் களமாயினும் அதில் சாதிக்கக் கூடிய பல வீர, வீராங்கனைகள் இருப்பது எமக்கு மேலதிக பலம். அந்த வகையில் இப்போட்டியில் நாம் சாதிக்க முயற்சிப்போம் என்றார். (93)



# பிணங்களின் நடமாடும் செயற்பாடு!

**- டி.பி.எஸ்.ஜெயராஜ் கட்டுரையிலிருந்து.**

ரணில் விக்கிரமசிங்க பிரதமராக ஆனதுடன் சமாதான நடவடிக்கைகள் மிகப்பெரிய வழியில் முன்னேற்றம்



கண்டது. எல்.ரீ.ரீ.ஈயின் அரசியல் முன்னணியாக ரி.என்.ஏ. தான் செயற்படும் என்று அநேகர் எதிர்பார்த்தார்கள்.

எனினும் புலிகள் வேறுவிதமான எண்ணத்தைக் கொண்டிருந்தார்கள். ரி.என்.ஏ யை சுதந்திரமாக செயல்பட்டு அரசியலில் நற்பெயர் பெறவிடுவதற்குப் பதிலாக அதை தனது காலுக்கு கீழ் கொண்டுவர எல்.ரீ.ரீ.ஈ விரும்பியது. அதற்கு மேலாக எல்.ரீ.ரீ.ஈ, தமிழ் மக்களுக்கும் மற்றும் பெருமளவில் உலகத்துக்கும் புலிகள் தான் எசமான்கள் ரி.என்.ஏ தங்களின் ஏவலுக்கும் அழைப்புக்கும் காத்திருக்கும் வெறும் ஒரு பணியாள் மாத்திரமே என்று காண்பிக்க விரும்பினார்கள். மிகக் குறுகிய காலத்திற்குள் ரி.என்.ஏ யின் அடிமைத்தனம் வெளிப்படையாகத் தெரியத் தொடங்கிற்று.

இந்தக் காட்சியில் மிகவும் ஏமாற்றம் தருவதாக இருந்தது ஆனந்தசங்கரியை தவிர்ந்த ஏனைய தமிழர் விடுதலைக் கூட்டணி அங்கத்தவர்களின் இழிவான அடிமைத்தனம்தான். ஆனந்தசங்கரி தனது சக தோழர்களின் மிக மோசமான காட்டிக் கொடுக்கும் செய்கைகளினால் தனிமைப்படுத்தப்பட்டு பாதிப்புக்கு உள்ளானார். சங்கரியும் எல்.ரீ.ரீ.ஈக்கு முன்னால் தலை தாழ்த்தி புலிகளின் கைப்பொம்மையாக இயங்குவதற்கு தயாராக இருந்திருந்தால், ஏனைய தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர்களை ஏற்றுக்கொண்ட அதேவழியில் அவரையும் புலிகள் அணைத்துக் கொண்டிருந்திருப்பார்கள். ஆனால் அப்படி நடக்கவில்லை.

அன்ரன் பாலசிங்கம், ஊடகங்களுக்கு ரி.என்.ஏ. நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆணவப்போக்கான வெளிப்பாட்டை பகிரங்கமாக விமர்சித்து கடுமையான கண்டனங்களை வெளியிட்டார். ஆனால் இதர ரி.என்.ஏ அங்கத்தவர்கள் பகிரங்கமாக சங்கரிக்கு பின்துணை வழங்கவில்லை.



ரவிராஜ் போன்ற சிலர் மட்டும் தனிப்பட்ட முறையில் அவரைப் பாராட்டியிருந்தார்கள். ஆனால் பாலசிங்கம் பெரும் சீற்றம் அடைந்தார்.

விரைவிலேயே சங்கரியை தவிர்ந்த ஏனைய தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர்கள் கிளி நொச்சிக்கு வரவழைக்கப்பட்டார்கள், எல்.ரீ.ரீ.ஈயின் அரசியற் பிரிவு தலைவர் தமிழ்ச்செல்வன் சங்கரியை கட்சியின் தல்லமைப் பொறுப்பிலிருந்து நீக்கும்படி கட்டளை பிறப்பித்தார். எல்.ரீ.ரீ.ஈ. கட்டளையின் நீதியின்மையை உணர்ந்துகொண்ட தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னணிப் பிரமுகர்கள் காரியத்தை தள்ளிப்போடும் வகையில் எல்.ரீ.ரீ.ஈயின் விருப்பத்துக்கு ஏற்பவே நடக்கிறார்கள் மற்றும் விரைவில் தங்கள் கட்டளைகளை ஏற்றுக் கொள்வதற்காக அவர்கள் கிளிநொச்சிக்கு அழைக்கப்பட இருக்கிறார்கள் என்று சொல்லியதுதான் திருப்பமாக அமைந்தது. ஏனைய ரி.என்.ஏ. அங்கத்தவர்கள் ஒரு துளியளவாவது எதிர்ப்பினை வெளிக்காட்டாமல் இருந்த அதேவேளை, சங்கரி, பாலசிங்கத்தின் இந்த மாதிரியான சங்கரியை அவரது சொந்த விருப்பத்தின் பேரில் வெளியேறும்படி கேட்டுக் கொண்டார்கள். அவர் பிடிவாதமாக மறுத்துவிட்டது தமிழர் விடுதலைக் கூட்டணிக்குத் தொடர்ந்தும் முட்டுக்கட்டையானது. ஆனால் சங்கரியை வெளியேற்றவேண்டும் என்பதில் தமிழ்ச்செல்வன் பிடிவாதமாக இருந்தார். பின்னர் சங்கரியை வெளியேற்றவேண்டும் என்று தானும் விரும்புவதாக பிரபாகரனும் வெளிப்படுத்தினார். சங்கரியின் கீழ்படிய மறுத்தலினால் கோபமுற்ற எல்.ரீ.ரீ.ஈ, அதை மற்றவர்களுக்கு ஒரு உதாரணமாக்க விரும்பியது. இறுதியாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுச்சபை, ஆனந்த சங்கரிக்கு எதிராக வாக்களித்தது, இந்த நடவடிக்கையை மனித உரிமைகளுக்கான யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம், பிணங்களின் நடமாடும் செயற்பாடு என விவரித்திருந்தது.

எனினும் சங்கரி சட்ட நடவடிக்கையை மேற்கொண்டார், விஜயதாஸ ராஜபக்ஷ அவருக்காக வாதாடினார். தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் பதவியிலிருந்து ஆனந்த சங்கரி நீக்கப்பட்டதை நீதிமன்ற தீர்ப்பு தடை செய்தது. தமிழர் விடுதலைக் கூட்டணியின் விசுவாசமான சில அங்கத்தவர்கள் மட்டும் ஆனந்தசங்கரியின் கீழுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியில் நீடித்திருந்த அதேவேளை, ஏனைய தமிழர் விடுதலைக் கூட்டணியினர் ரி.என்.ஏ. யின் கட்டமைப்பின் கீழ் செயற்பட ஆரம்பித்தார்கள். அதைத் தொடர்ந்து இந்தக் கூறுகள் தங்களை இலங்கை தமிழரசுக் கட்சியின் கீழ் ஒன்றிணைத் துக்கொண்ட அதே வேளை, ஆனந்தசங்கரி தொடர்ந்தும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைப் பதவியை கைப்பற்றிக் கொண்டார். ஆனால் அளவிலும் தாக்கத்திலும் அக்கட்சி மெல்ல மெல்ல அழிந்து வந்தது.

தங்களுக்கு கீழ்ப்படிய மறுத்ததின் விலை என்னவென்று சங்கரி விவகாரத்தினூடாக ரி.என்.ஏ க்கு பாடம் கற்பித்த எல்.ரீ.ரீ.ஈ, ரி.என்.ஏ.' மீதான தனது பிடியை மேலும் தீவிரமாக்கியது. தாங்கள்தான் எசமானார்கள் என்பதை ரி.என்.ஏக்கு காண்பிப்பதில் எல்.ரீ.ரீ.ஈயினர் வெற்றி பெற்றிருந்தார்கள். அடுத்து வந்த சில வருடங்களும் ரி.என்.ஏ. முற்றாக எல்.ரீ.ரீ.ஈயினரின் அடிமைகளாக மாறிவிட்டனர் என்பதை தெளிவாக எடுத்துக்காட்டியது.

ரி.என்.ஏ. அங்கத்தவர்கள் ஒரு நிரந்தரமான கூட்டணியாக மாறுவதைக் காட்டிலும் தனித்தனி கட்சிகளாக இருப்பதையே புலிகள் விரும்பினார்கள். இது ஒவ்வொரு கட்சியையும் தனியாக கையாள்வதற்கும் மற்றும் கட்டுப்படுத்துவதற்கும் புலிகளுக்கு இயலுமாக இருந்தது. அதேநேரத்தில் தங்களுக்கு சமாந்தரமாக அல்லது போட்டியாக ஒரு தமிழ் அரசியல் அமைப்பு உருவாவதையோ அல்லது வளர்ச்சி பெறுதையோ புலிகள் முன்னெச்சரிக்கையுடன் தடுத்து வந்தார்கள்.

ரி:என்.ஏயினை எல்லாக் கட்சிகளும் சேர்ந்த ஒரு சுயாதீனமான கட்சியாக வலுப்படுவதை தடுத்ததோடு மட்டுமன்றி அவற்றிற்குள் பிளவுகளை எற்படுத்தவும் எல்.ரீ.ரீ.ஈ முயன்றது. ஒன்றை மற்றதுக்கு எதிராக கையாண்டது. மேலும் ஒரு கட்சியின் அங்கத்தவர்களுக்கு எதிராக செயற்பட அதே கட்சியை சேர்ந்த மற்றவர்கள் தூண்டப்பட்டார்கள். கோஷ்டிகள் உருவாக்கப்பட்டன. தனிப்பட்ட கதை காவுபவர்கள் ஊக்குவிக்கப்பட்டார்கள்.

அது பிரித்தானியர்களின் பிரித்து அரசாளும் கொள்கை என்று




சொல்லப்பட்டது. அவர்கள் நிருவாக வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்காக ஒன்றுபடுத்திய அதேவேளை அரசியல் ரீதியாக ஆட்சி நடத்துவதற்காக இனங்களிடையே பிளவுகளை உண்டாக்கினார்கள். பிரித்தானியர் வெளியேறிய வேளை யில் அவர்கள் விட்டுச் சென்ற இந்த பிளவினை ஏற்படுத்தும் போக்குகள் முன்னேறியதன் காரணமாக பொதுநலவாய அமைப்பிலுள்ள பல நாடுகள் இந்தப் பிரிவினைவாத இயக்கங்களின் தொல்லைகளை சுமக்கவேண்டியுள்ளது.

அதே பாணியில்தான் எல்.ரீ.ரீ.ஈயும் ரி.என்.ஏ க்குள் ஐக்கியத்தை பேணி வந்தது. ஒருபுறம் ஒரு தோற்றத்தைக் காண்பித்துக்கொண்டு அதேவேளை மறுபுறத்தில் அரசியற் கட்சிகள் தம்மில் பிளவுகளை ஏற்படுத்திக் கொண்டிருந்தது. ரி.என்.ஏ. ஒரே அமைப்பாக இருந்த அதேவேளை எல்.ரீ.ரீ.ஈயும் பலமுடையதாக இருந்தது. ஆனால் எல்.ரீ.ரீ.ஈ இனி இல்லை என்றாகிவிட்டபோது அடியில் புதைந்துகிடந்து வேற்றுமைகள் வெளிப்படத் தொடங்கியுள்ளன.

---

## பெங்குவினுக்கு கொழுப்பு!

- ஒக்ஸ்போர்ட் அகராதியைத் தொகுத்து முடிக்க 36 ஆண்டுகள் ஆனது. தொகுத்த பிறகு அதன் முதல் பதிப்பு வெளிவர 13 ஆண்டுகள் ஆனது.
- பெங்குவின் பறவைகளில் சுமார் 17 இனங்கள் உள்ளன. பெங்குவின் என்ற இலத்தீன் சொல்லுக்கு "கொழுப்பு" என்று அர்த்தம். உடலில் அதிகமான கொழுப்பு அடுக்குகளைப் பெற்றுள்ளதால் இப் பறவைக்குப் பெங்குவின் என்ற பெயர் வந்தது.
- இராணுவ வீரர்கள் விறைத்தபடியே காலை நீட்டி நடக்கும் முறையை இங்கிலாந்து இராணுவம்தான் முதன்முதலில் அறிமுகப்படுத்தியது.
- பறவைகள், செடிகள் ஆகியவற்றுக்கு விஞ்ஞானப் பெயர் இருப்பது போல மனிதனுக்கும் ஒரு விஞ்ஞானப் பெயர் உண்டு. அது: ஹோமோ ஸபியென் (Homo Sapien).
- ஆம்னி பஸ் முதன்முதலில் ஓடிய நாடு பிரான்ஸ்.
- பாகிஸ்தான் மற்றும் சீன எல்லைப் பகுதியிலுள்ள X2 மலைச் சிகரம்தான் உலகின் இரண்டாவது உயரமான சிகரம் (எவரெஸ்டுக்குப் பிறகு). குளிர்காலத்தில் இந்தச் சிகரத்தின் மீது ஏறவே முடியாது.
- பிராணிகளில் மிகப் பெரிய கண் களைக் கொண்டது ஸ்குவிட் எனப்படும் கடல் வாழ் உயிரினம்.
- சாலையோர அறிவிப்புப் பல-கைகளை முதன் முதலில் அறிமுகப் படுத்திய நாடு அமெரிக்கா.



---

## விளக்குமாறு கேட்கிறாள்!



**1971** தமிழ்நாட்டில் நடைபெற்ற இடைத்தேர்தல் பிரசாரத்தின் போது, அப்போதைய முதலமைச்சராக இருந்த கருணாநிதியை ஒரு பெண் விளக்குமாற்றுடன் அடிக்க வருவது போலப் படம் வரைந்து சுவர்களில் ஒட்டியிருந்தார்கள் எதிர்க்கட்சியான காங்கிரஸ் கட்சியினர். கருணாநிதி பேசிய ஒரு கூட்டத்தில் தி.மு.க. பேச்சாளர் ஒருவர், காங்கிரசார் வரம்பை மீறியிருக்கிறார்கள் என்று வேதனைப்பட்டார். அதற்கு கருணாநிதி மேடையில் பதில் சொன்னார்: "காங்கிரசார் சித்திர எழுத்தில் ஆர்வம் கொண்டவர்கள். அந்தப்பெண் இந்த கருணாநிதியிடம் திமுக ஆட்சியின் நான்காண்டு கால சாதனை-களை விளக்குமாறு கேட்கிறாள். மீண்டும் ஆட்சிக்கு வந்தவுடன் என்னவெல்லாம் நன்மை செய்யப்போகிறீர்கள் என்று விளக்குமாறு கேட்கிறாள். அண்ணனை இழந்த தம்பிகள் இந்தத் தேர்தலில் மீண்டும் வென்று சரித்திரம் படைக்கும்போது மக்கள் வாழ்வில் ஏற்படப்போகும் மறுமலர்ச்சியைப் பற்றி அன்போடு விளக்குமாறு கேட்கிறாள்."

# சினிமா சினிமா

◗ வடிவேலு கதாநாயகனாக நடித்த இம்சை அரசன் 23ஆம் புலிகேசியின் இரண்டாம் பாகம்



விரைவில் தயாராக உள்ளது. இரண்டாம் பாகத்திலும் வடிவேலுவே கதாநாயகனாக நடிக்கிறார்.

2006ஆம் ஆண்டு 5 கோடி ரூபா செலவில் உருவான இம்சை அரசன் 23ஆம் புலிகேசி, வெற்றி பெற்று ரூபா 15 கோடி வரை இலாபம் ஈட்டியது. சிம்பு தேவன் கதை எழுதி இயக்கிய இப்படத்தை ஷங்கர் தயாரித்து வெளியிட்டார்.

◗ சிம்புதேவனின் உதவியாளர் நவீன் இயக்கும் புதிய படம் "மூடர் கூடம்". ஓவியா மற்றும் புதுமுகங்கள் நடிக்கிறார்கள். 1963ஆம் ஆண்டு எஸ். பாலசந்தர் இயக்கத்தில் வெளியான "பொம்மை" படத்தின் சூப்பர் ஹிட் "நீயும் பொம்மை நானும் பொம்மை" பாடல் ரீமிக்ஸ் செய்யப்பட்டுள்ளது. பழைய பாடலைப் பாடிய ஜேசுதாஸே, புதியவர் நடராஜன் சங்கரன் இசையில் இந்த ரீமிக்ஸ் பாடலையும் பாடியுள்ளார்.



◗ தமிழில் வாய்ப்புகள் குறைந்ததால் மலையாளத்தில் நடித்து வருகிறார் பூர்ணா. "சேட்டக்காரி" என்ற மலையாளப் படத்தில் நடிக்கும்போது அதன் நாயகன் ஹேமந்துடன் காதல். அதனால் இஸ்லாம் மதத்தைச் சேர்ந்த ஷாம்னா கசிம் என்ற இயற்பெயருடைய பூர்ணா மதம் மாறப் போவதாக செய்திகள் வெளியாகின. அதுபற்றி கேட்டால்... "மதம் என்னுடைய அடையாளம். காதலுக்காக அதை விட்டுக்கொடுக்க மாட்டேன்" என்கிறார்.

◗ "செம்பருத்தி" மற்றும் "கேப்டன் பிரபாகரன்" உட்பட பல படங்களை இயக்கி, பின்னர் ரோஜாவுடன் திருமணமாகி பலகாலம் படங்களை எடுக்காமல் இருந்த ஆர்.கே.செல்வமணி, தற்போது, "அகிலா" என்ற படத்தை இயக்கியுள்ளார். "மக்கள் சக்தி இல்லாத எந்த சக்தியும் ஜெயிக்காது" என்ற கருத்தில் உருவாகியுள்ள இப்படத்தில், ஆர். கே.செல்வமணியும் ஒரு தீவிரவாதி வேடத்தில் நடித்துள்ளார்.

◗ சிம்பு பாணியில், ஆண்ட்ரியாவும் தான் நடிக்காத படங்களிலும், பின்னணி பாடத் தொடங்கி விட்டார். சமீபத்தில், "கர்மா" என்ற படத்துக்காக, எல்.வி.கணேசன் இசையில், ஒரு சோகப் பாடல் பாடியுள்ளார். அப்பாடலை தனது பாணியில் இருந்து, மாறுபட்ட கிராமிய சாயலில் பாடி அசத்தியுள்ளார்.

◗ எஸ்.ஏ.சந்திரசேகரன் இயக்கிய "சட்டம் ஒரு இருட்டறை" படத்தின் ரீமேக்கை அவரது உறவினர் சினேகா இயக்கி வருகிறார். இதில் ரீமா சென், பியா ஆகியோர் நடிக்கிறார்கள். இந்தப் படத்துக்காக எடுக்கப்பட்ட ஒரு ஹெலிகொப்டர் காட்சியில் பியா ஹெலிகொப்டரிலிருந்து விழுந்துவிட்டார். காயத்துடன் மயிரிழையில் உயிர் தப்பினார் என செய்திகள் வெளியாகின. பியாவிடம் கேட்டால்... "அப்படியா, ஆக்ஸிடென்ட்டா...! எப்போது? நான் நன்றாகத்தானே இருக்கிறேன்" என்கிறார். விளம்பரத்துக்காக பட யூனிட் இதுபோன்ற செய்திகளைப் பரப்பி வருவது சகஜம்தான் என்கிறார்கள். படத்தில் ஹெலிகொப்டர் செலவும் உண்டு என்பதைச் சொல்ல வேண்டுமே!



# பரஸ்பர நம்பிக்கைக்கு உழைக்க வேண்டும்!

கூட்டமைப்பு மற்றும் தமிழ் சமூகத்தின் உள்ளே தோன்றி வரும் இடைவெளியும் பிரிவுகளும் கவலை அளிக்க கூடியவையே. இலங்கை அரசின் சில நீக்கு போக்குகள் அவ்வப்போது கவசமாக இருந்து கூட்டமைப்பு சிதறி விடாமல் பாதுகாத்து வருகின்றது என்றே சொல்லத் தோன்றுகிறது. அதுபோன்றே இனப்பிரச்சினை குறித்த சில கருத்துகள் கொண்ட கூட்டமைப்பும் அதற்கான தீர்வு குறித்து இன்னமும் தெளிவான முடிவுகளை மட்டுமே எடுத்து வருகிறது என்று கூறிவிடமுடியாது.

அடுத்தடுத்து வந்துள்ள இலங்கை அரசு தலைமைகள் போன்றே, தமிழ் மிதவாத அரசியல் தலைமைகளும் எல்லா தரப்பினரையும் அணைத்துக் கொண்டு போகவேண்டும் என்ற எண்ணத்தில், யாரையும் அணைத்துச் செல்ல முடியாத நடு-நிலைப் போக்கை எடுத்து வந்துள்ளன. அதனால் மட்டுமே எந்தவித தீர்க்கமான முடிவையும் எடுக்க முடியாமல், போராளிகளின் ஒட்டுக் குழுக்களாக அரசியல் செய்யும் நிலைமைக்கு தள்ளப்பட்டு வந்துள்ளன. இந்த நிலைமை மாறவேண்டும். காரணம், இத்தகைய எண்ணப்போக்கே கோத்தாபய ராஜபக்ஷ போன்றவர்களின் விமர்சனத்திற்கான காரணம். அவர்களது கூற்று உண்மையானதோ இல்லையோ, அவர்களது சந்தேகங்களுக்கு கடந்த காலம் சான்றாக அமைந்து விட்டது வருந்தத் தக்க விடயம்!



- என் சத்தியமூர்த்தி கட்டுரையிலிருந்து.

இந்த நிலைமை மாற வேண்டும். அதற்கு இரு தரப்பினருமே அடுத்தவரின் நம்பிக்கையைப் பெறுவதற்கு உழைக்க வேண்டும். இதில் எந்த ஒரு தரப்பினரையும் மட்டுமே குறை கூறுவது தவறு. அது மட்டுமல்ல... அதனால், ஆவதற்கு ஒன்றுமே இல்லை என்பதே உண்மை.

# குரு இல்லாமல் கற்றுக் கொள்ளக் கூடாதா?

அரசர் மாலை வேளையில் அமைச்சரைச் சந்திக்கச் சொல்லியிருந்தார். அமைச்சர் வரக் காலதாமதமானது. எனவே அரசரே அமைச்சர் வீட்டிற்கு நேரடியாகச் சென்றார்.

அங்கு அமைச்சர் வீட்டிற்குள் இருந்தார். அரசர் வெளியில் நின்றபடியே அமைச்சரை அழைத்தார்.

அரசரின் குரல் கேட்ட அமைச்சர், வேகமாக வெளியில் வந்து, "அரசே, என்னை மன்னிக்க வேண்டும்." என்றார்.

"அமைச்சரே, நான் மாலையில் சந்திக்க வேண்டுமென்று சொல்லியிருந்தேனே ஞாபகமில்லையா? ஏன், இந்தக் காலதாமதம்?" என்று கேட்டார்.

"அரசே நான் நீராடிவிட்டு, மாலை நேரத்தில் செய்ய வேண்டிய சந்தியாவந்தனத்தைச் செய்து முடித்தேன். அதனால், சிறிது தாமதமாகி விட்டது" என்றார்.

"சந்தியா வந்தனமா? அப்படியென்றால் என்ன? அதை எனக்குக் கற்றுக் கொடும்" என்று கேட்டார் அரசர்.

"அரசே, அதைக் கற்றுக் கொடுக்கும் தகுதி எனக்கு இல்லை. தாங்கள் தகுந்த ஒரு ஆசானைக் கேட்டுத் தெரிந்து கொள்வதே நல்லது. தங்களுக்கு உரிமை உள்ளது என்றால், அவர் அதைத் தங்களுக்குக் கற்றுக் கொடுப்பார்" என்றார் அமைச்சர்.

"சந்தியா வந்தனத்தின் முக்கியப் பகுதி என்ன?" என்று கேட்டார் அரசர்.

"அதன் முக்கியப் பகுதி காயத்ரி மந்திரம்தான்" என்றார் அமைச்சர்.

"அப்படியானால், அதையாவது எனக்குக் கற்றுக் கொடு" என்று கேட்டார் அரசர்.

அமைச்சர், "அரசே, தாங்கள் என்னை மன்னிக்க வேண்டும். மந்திரம் எதையும் ஓர் ஆச்சாரியன் உபதேசிக்கக் கற்றுக் கொள்வதே நல்லது. இல்லாவிட்டல் அதற்கு மதிப்பில்லை" என்று சொல்லி மறுத்து விட்டார்.

அரசர் இதை ஒரு அவமானமாகக் கருதினார்.

பின்னர் அவர், காயத்ரி மந்திரத்தை ஒரு சுவடியிலிருந்து எடுத்து வரச் சொல்லிப் படித்துப் பார்த்து அதைத் தெரிந்து கொண்டார்.

இருந்தாலும் அரசருக்கு நிம்மதி கிடைக்கவில்லை.

இதுகுறித்து அமைச்சரிடமே தெரிந்து கொள்வோம் என்று எண்ணினார் அரசர்.

அரச சபையில் அன்றைய பணிகள் முடிவடைந்ததும் அரசர், அமைச்சர் மற்றும் தளபதியை மட்டும் அங்கிருக்கும்படி சொன்னார்.


அரசர், அமைச்சரிடம் காயத்ரி மந்திரத்தைச் சொல்லி, "இது சரிதானே?" என்று கேட்டார்.

அமைச்சர், "மந்திரம் இதுதான். ஆனால் மந்திர உச்சரிப்பும், அதைச் சொல்லும் முறையும் சரியில்லை. தாங்கள் ஓர் ஆசானிடம் கற்றிருந்தால், அவர் தங்களுக்குச் சரியாகக் கற்றுக் கொடுத்திருப்பார்" என்றார்.

அரசர், "ஏன், அதற்கு என்ன அவசியம்?" என்று கேட்டார்.

அமைச்சர் அருகில் நின்றிருந்த தளபதியைப் பார்த்து, "தளபதியாரே, இவரைக் கைது செய்து சிறையில் அடையுங்கள்" என்று அரசரைச் சுட்டிக் காட்டினார்.

தளபதி நடுங்கிப் போனார். அரசரைக் கைது செய்வதா? என்று நினைத்தபடி



திகைத்து நின்றார்.

அரசரோ அமைச்சரின் செயலைக் கண்டு கோபமடைந்தார். அவர் தளபதியைப் பார்த்து, "இவரைக் கைது செய்து சிறையில் அடையுங்கள்" என்று உத்தரவிட்டார்.

தளபதியும் அரசரின் உத்தரவைக் கேட்டு அமைச்சரைக் கைது செய்ய முற்பட்டார்.

அமைச்சர் புன்னகையுடன், "அரசே! மன்னிக்க வேண்டும். நான் கூறியதன் பொருளைத் தங்களுக்கு விளக்கவே அப்படிச் செய்தேன்" என்றார்.

அரசரும், "அது எப்படி?" என்று கேட்டார்.

"அரசே, நான் சொல்லிய அதே சொற்களைத்தான் நீங்களும் சொன்னீர்கள். அதற்குப் பலன் கிடைத்தது. ஏனென்றால், அந்த சொற்களைப் பயன்படுத்தியவரும், அதைச் சொன்ன விதமும், அதற்குரிய அதிகாரமும்தான் அதற்கு மதிப்பைத் தந்தன. அதையே நான் சொன்ன போது பயனில்லை. மந்திரங்களின் விசயமும் அப்படியே" என்றார் அமைச்சர்.



# மாமல்லபுரம்

பேச்சு வழக்கில் மஹாபலிபுரம் என்று அழைக்கப்படும் இந்த நகருக்கு மாமல்லபுரம், மஹாமல்லபுரம், கடல் மல்லை, மல்லாபுரி, ஜனநாதபுரம், மாவேலிவரம், மாவலிவரம் என்று பல பெயர்கள் உண்டு! கல்வெட்டுகள் மாமல்லபுரம் என்றே குறிக்கின்றன.


சங்க காலத்துக்கு முன்பிருந்தே படைக்கலத்தளமாகவும் கடல் வாணிபத்துக்குரிய பெரிய துறைமுகப் பட்டினமாகவும் மாமல்லை திகழ்கிறது' என்பதைப் பல சான்றுகள் அறிவிக்கின்றன.

சங்க காலத்தில் சோழர்களின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த இந்த நகரம் கி.பி.275இல் பல்லவர்கள் காஞ்சியைக் கைப்பற்றியதும் அவர்களின் துறைமுகமாக விளங்கியது. யவனர்கள் இங்கே விளக்குகள் அமைத்தார்கள் என்றும், கடல் கடந்து இங்கே குதிரைகள் வந்திறங்கின என்றும், "பேரிளமையர்" என்று தமிழ் நாமம் சூட்டப்பெற்ற அன்னியர்கள் பலர் 11ஆம் நூற்றாண்டு வரை இந்த நகரத்திலே வாழ்ந்தார்கள் என்றும் சரித்திரம் கூறுகிறது. சிம்மவர்மன் காலம் தொடங்கி அபராஜிதவர்மன் காலம் வரை பல்லவரின் ஆட்சியிலே இவ்வூர் பல மாண்புகளைக் கண்டது. பின்னர் சம்புவராயர் கைக்குச் சென்று, அவர்களிடமிருந்து விஜயநகர மன்னனின் கைக்கு மாறி, 300 ஆண்டுகள் "படை வீட்டு ராஜ்யம்" என்ற பகுதிக்குள் இது இருந்தது. பின் நவாப்களின் ஆட்சிக்குள் வந்த மாமல்லை ஆற்காடு நவாப்களின் பராமரிப்புக்கு வந்து பின்னர் பிரெஞ்ச்காரரர், ஆங்கிலேயர் முதலானோரின் தலையீட்டுக்கு உள்ளாகி 19ஆம் நூற்றாண்டில் முழுமையாக ஆங்கிலேயரின் ஆட்சிக்கு வந்தது!

1869இல் சென்னை அரசின் ஆணைப்படி மாமல்லபுரத்தைப் பற்றிய ஓர் அரிய நூல் வெளியாயிற்று. அதில் அந்தரங்கச் செய்திகளைக் காண்கிறோம். ராபர்ட்க் ளைவ் மாமல்லபுரத்துக் குன்றின் வடக்குப் பக்கத்திலுள்ள சிவன் கோவில் நந்தியை எடுத்துக் கொண்டு போய்விட்டார் என்று இந்த நூல் சொல்கிறது!

பெரும்பாணாற்றுப் படை போன்ற சங்க நூல்களும் கி.பி.முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்த தொலமியின் பயணக் குறிப்புகளும் இவ்வூரில் கிடைத்துள்ள பழமையான யவனக் காசுகளும், பல்லவர், சோழர், பாண்டியர் காலத்து நாணயங்களும் இங்குள்ள கல்வெட்டுக்களும் நகரத்தின் தொன்மையையும் மரபையும் எடுத்து இயம்புகின்றன.

('நமது செல்வம்' என்ற நூலில் மீ.ப.சோமு)




சரியான விடை எழுதுபவர்களின் விபரங்கள் புகைப்படத்துடன் ஒவ்வொரு சனிக்கிழமையும் வெளிவருகின்றது

**அதிக புள்ளிகளைப் பெற்ற திறமைசாலிகள் மூவருக்கு பெறுமதியான பரிசில்கள் காத்திருக்கின்றன. உங்களுக்கான பரிசில்கள் விபரம் பத்திரிகையில் வெளியாகும். மூன்று மாத இறுதியில் தினமுரசு காரியாலயத்தில் வைத்து வழங்கிக் கௌரவிக்கப்படும்.**

**1**

வசந்தன், சந்திரன், சுந்தரம், இந்திரன் ஆகியோர் ஒரு அலுவலகத்தில் பணிபுரியும் ஊழியர்களாவர். அலுவலகத்தில் உள்ள பதவிகள் லிகிதர், கணக்காய்வாளர், தட்டெழுத்தாளர், சிற்றூழியர் என்பதாகும். இவர்கள் அலுவலகத்திற்கு பஸ், புகையிரதம், துவிச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிள் என்பவற்றின் மூலம் பயணம் செய்வர். இவர்கள் விரும்பும் ஆட்டங்கள் துடுப்பாட்டம், கால்பந்து, கைப்பந்து, டெனிஸ். இவர்கள் அணியும் ஆடைகள் நீண்ட காற்சட்டை, காற்சட்டை, சாறம், தேசிய உடை என்பனவாகும். இங்கு இவர்களின் பெயர்கள், தொழில், விரும்பும் ஆட்டம், அணியும் உடை என்பன தரப்பட்ட ஒழுங்கில் இருக்க வேண்டிய அவசியமில்லை. கீழ்க்காணும் தரவின் அடிப்படையில் பின்வரும் வினாக்களுக்கு விடை காண்க.

1) வசந்தன் நீண்ட காற்சட்டை அணிபவர். துடுப்பாட்ட ரசனை மிக்கவர்.
- தட்டெழுத்தாளர் டெனிஸ் ஆட்ட வீரர்.
- சாரம் அணிபவர் பஸ் மூலம் அலுவலகத்திற்கு வருபவர்.
- சந்திரன் சாரம் அணிபவரல்லர். மோட்டார் சைக்கிளில் வருபவர்.
- தேசிய உடை அணிபவர் கைப்பந்தாட்ட வீரர். துவிச்சக்கரவண்டியில் வருபவர்.
- சந்திரன் சிற்றூழியர், கால்பந்தாட்ட வீரர்.
- இந்திரன் தேசிய உடை அணிபவர், லிகிதர் அல்லர். ஆயின்

1. லிகிதரின் பெயர் என்ன? (................)

2) காற்சட்டை அணியும் ஊழியர் யார்? (................)

3) சுந்தரம் அணியும் ஆடை எது? (................)

4) சுந்தரம் விரும்பும் ஆட்டம் என்ன? (................)

**2**

M, N, P, Q, R, S, T என்பவை 1 முதல் 10 வரையில் உள்ள ஏழு முழு இலக்கங்களைப் பிரதிபலிக்கின்றன.

Q விலும் பார்க்க M 3 ஆல் சிறியது.
T நடு இலக்கமாகும்.
M இலிருந்து R எவ்வளவு கூடியதோ அதே அளவினால் T யிலிருந்து P குறைவானதாகும். P யிலும் பார்க்க N பெரியது.

1) ஐந்தாவது இலக்கத்தை எது பிரதிபலிக்கின்றது. (...............)


2) P யிலும் பார்க்க Q எவ்வளவில் கூடியதோ அவ்வளவில் N இலும் குறைந்தது எது? (...............)

3) Q = 7 ஆயின் S இனதும் N இனதும் கூட்டுத்தொகை யாது? (...............)

4) S இலிருந்து எவ்வளவால் R பெரியதோ அவ்வளவில் R இலிருந்து Q பெரியது ஆகக்கருதப்படின் Q + S ஆக எழுதினால் வரும் விடை யாது? (...............)

**3**

கீழ் உள்ள வரைபடத்தைக் கவனமாகப் பார்த்து பின்னர் அதில் ஆங்கில நெடுங்கணக்கு எழுத்துக்களால் குறிப்பிட்டுள்ளவற்றின் பெறுமதியை அவற்றிற்கெதிரே குறிக்குக.




1) A : (................)
2) B : (................)
3) C : (................)
4) D : (................)
5) E : (................)
6) F : (................)

## புதிர்ப்போட்டி 14 இற்கான சரியான விடைகளை எழுதி பாராட்டுப்பெறுவோர்

**பெயர்:** ஆ.கீர்த்தனா
**பாடசாலை:** யா/ சங்கானை சிவப்பிரகாச மகா வித்தி.

**பெயர்:** இ.பிரியதர்சினி
**பாடசாலை:**
யா/ உடுவில் மகளிர் கல்லூரி.

**பெயர்:** கு.ஜெயராமன்
**பாடசாலை:**
யா/ மத்திய கல்லூரி.

**பெயர்:** ஸ்ரீ. சஞ்சுதன்
**பாடசாலை:**
யா/ சென்.ஜோண் பொஸ்கோ.

**பெயர்:** க.தினேஸ்
**பாடசாலை:**
யா/ புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரி.

**பெயர்:** ரா.சுமித்தை
**பாடசாலை:**
யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி.

**பெயர்:** மெ.இங்கிதை
**பாடசாலை:**
யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை.

**பெயர்:** கே.கோகிலவாணி
**பாடசாலை:**
யா/ செம்பியன்பற்று அ.த.க. பாடசாலை.

**பெயர்:** க.பவித்திரா
**பாடசாலை:**
யா/ சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்

**பெயர்:** து.கோகுலன்
**பாடசாலை:**
யா/ இந்துக் கல்லூரி.

## புதிர்ப்போட்டி 14 இற்கான சரியான விடைகள்

**1**
1) சதையி
2) சுத்தோதனன், மகாமாயா
3) கம்போடியா
4) அல்புமின்
5) சேர்.அலக்ஸ் ஜெப்றி

**2**
1) 6
2) 4
3) 5
4) 2
5) 3

**3**
1) 12
2) 32
3) 21
4) 4
5) 12

## புதிர்ப்போட்டி 14 இல் வெற்றியீட்டியோர்



**பெயர்:**
ர.அபிதா
**பாடசாலை:**
யா/ இராமநாதன் கல்லூரி



**பெயர்:**
கி.கயறூபி
**பாடசாலை:**
யா/ சங்கானை சிவப்பிரகாச மகா.வித்தி



**பெயர்:** கி.டிசாயினி
**பாடசாலை:**
யா /சங்கானை சிவப்பிரகாச மகா வித்தி.



**பெயர்:**
க.அபிராமி
**பாடசாலை:**
யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை



**பெயர்:**
த.மதுஷா
**பாடசாலை:**
யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை.

## அனுப்பவேண்டிய முகவரி


**புதிர்ப்போட்டி இல....**
**தினமுரசு**
**இல .373 பிரதான வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**புதிர்ப்போட்டி 16 இற்கான விடைகளை எதிர்வரும் நவம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்புதல் வேண்டும்.**

## முக்கிய குறிப்பு

தபால் மூலமும் அனுப்பலாம், காரியாலயத்திலுள்ள புதிர்ப்போட்டிப் பெட்டியிலும் போடலாம். யாழ். பிரதான பேருந்து நிலையத்தில் உள்ள தினமுரசு செய்திப் பெட்டியிலும் போடலாம்.

## விண்ணப்பதாரரின் விபரம்



மாணவர் முழுப்பெயர்:- ....................................

பாடசாலையின் பெயர் ....................................

தரம் :- :-....................................

தொலைபேசி இல.:-....................................

முகவரி :-....................................

....................................

# மலேசிய ஹோட்டல் பயிற்சியில் யாழ். மாணவர்கள் இணைவு

(சிகரம்)

மலேசிய அரசாங்கத்தினால் SEGi பல்கலைக் கழகத்தினூடாக நடத்தப்படும் ஹோட்டல் பயிற்சிநெறியை சிகரம் கல்வி - தொழில் வழிகாட்டல் பிரிவினரூடாகச் சென்ற, ஒரு தொகுதி யாழ். மாணவர்கள் கடந்த திங்கட் கிழமை (22-10-2012) ஆரம்பித்துள்ளனர்.

இந்தப் பயிற்சிநெறியில் இணைந்துகொள்வதற்காக விண்ணப்பித்த மாணவர்களில் முதற்கட்டமாகத் தெரிவுசெய்யப்பட்ட 8 மாணவர்கள், சிகரம் பணிப்பாளர் றுஷாங்கனுடன் மலேசியாவுக்குச் சென்று நேரடியாகப் பயிற்சிநெறியில் இணைந்துள்ளனர்.

இவர்களுக்கான தங்குமிட வசதிகளையும் SEGi பல்கலைக்கழகத்தினர் மேற்கொண்டுள்ளதுடன், மாணவர்கள் தமது விடுதியிலிருந்து தொடருந்து சேவை மூலம் SEGi பல்கலைக்கழக கோலாலம்பூர் கிளையின் பயிற்சி மையத்துக்குச் சென்று பயிற்சிகளைப் பெற்று வருகின்றனர்.


இவர்களுக்கான பயிற்சிநெறி விண்ணப்ப ஒழுங்குகள், விசா ஒழுங்குகள், பயண ஒழுங்குகள் யாவற்றையும் சிகரம் கல்வி தொழில் வழிகாட்டல் பிரிவினரும், SEGi பல்கலைக் கழகமும் இணைந்து வழங்கியிருந்தன.




Skills Malaysia INVITE என்றழைக்கப்படும் இந்த ஒரு வருட ஹோட்டல் பயிற்சிநெறியில் மாணவர்கள் ஹோட்டல் தொழிற்துறை தொடர்பான 3 மாத கால அறிமுறைப் பயிற்சிகளும், ஆங்கில மொழித் தொடர்பாடல் பயிற்சிகளும் பெறவுள்ளனர். தொடர்ந்து, இந்த மாணவர்கள் நேரடியாக விடுதிகள் மற்றும் உணவகங்களில் தொழிற்பயிற்சியில் ஈடுபடுத்தப்படுவர்.

9 மாத காலம் நடைபெறவுள்ள இந்தத் தொழிற்பயிற்சியின்போது மாணவர்களுக்கு மாதாந்த ஊக்குவிப்புத் தொகையும் வழங்கப்படும்.

பயிற்சிநெறி நிறைவில், மலேசிய அரசாங்கத்தின் Skills Malaysia INVITE சான்றிதழுடன்,



பிரித்தானியப் பல்கலைக்கழகமான University of East London இன் Global Examination Body சான்றிதழையும் பெறுவர். இதற்கு மேலதிகமாக, சர்வதேச புகழ்வாய்ந்த பிரித்தானியச் சான்றிதழான City & Guilds மற்றும் அவுஸ்ரேலிய சான்றிதழான AETS ஆகியவற்றையும் மாணவர்கள் பெற முடியும்.

பயிற்சிநெறி முடிவில், மாணவர்களின் அடைவுகளைப் பொறுத்து, அவர்களுக்கு நேரடிப் பணியிடப் பயிற்சியை வழங்கிய நிறுவனங்களிலேயே அவர்கள் தொழில் பெறக்கூடிய வாய்ப்பு இருப்பதுடன், விரும்பிய மாணவர்கள் மேற்கொண்டு ஹோட்டல் தொழிற்துறையில் கூடுதல் பயிற்சியைப் பெற்று பட்டச் சான்றிதழ் வரையில் முன்னேறவும் முடியும்.


ஹோட்டல் தொழிற்துறையில் செயன்முறைப் பயிற்சியை வழங்கும் இந்தப் பயிற்சிநெறி இந்த ஆண்டு (2012) நடுப் பகுதியில் சிகரம் கல்வி தொழில் வழிகாட்டல் பிரிவினரால் வட மாகாணம் தழுவியதாக அறிமுகப்படுத்தப்பட்டு, மாணவர்களுக்கு அறிமுகக் கருத்தரங்குகளும் நடத்தப்பட்டன.

மலேசிய SEGi பல்கலைக்கழகப் பிரதிநிதி ரயான் நேரடியாக இந்தக் கருத்தரங்குகளில் கலந்துகொண்டு மாணவர்க்ளுக்கு பயிற்சிநெறி தொடர்பான விளக்கங்களை வழங்கினார்.

தொடர்ந்து சிகரம் ஊடக இல்லப் பணிப்பாளர் கோ.றுஷாங்கன் தலைமையில் கல்வி தொழில் வழிகாட்டல் பிரிவினர் மாணவர்களுக்கு இந்தப் பயிற்சிநெறி தொடர்பான விளக்கங்களையும், வழிகாட்டல் ஆலோசனைகளையும் வழங்கியதுடன், மாணவர்களின் பெற்றோருக்கும் இவை தொடர்பான பூரண விளக்கத்தை அளித்திருந்தனர்.

தற்போது தெரிவுசெய்யப்பட்டுள்ள ஒரு தொகுதி மாணவர்கள் பயிற்சியை ஆரம்பித்திருப்பதைத் தொடர்ந்து, அடுத்த தொகுதி மாணவர்கள் அடுத்து வரும் மாதங்களில் பயிற்சிநெறியில் இணைந்துகொள்வதற்காக மலேசியா பயணமாகவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# யாழில் புத்தகக் கண்காட்சி



(பக்,சாந்தன் - சிகரம்)

எம்.டி.குணசேன புத்தக நிலையத்தின் புத்தக கண்காட்சி யாழ்.மத்திய கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெற்று வருகின்றது.

இந்தக் கண்காட்சியில் பாலர் வகுப்பு முதல் பல்கலைகழக மாணவர்கள் வரை அனைவருக்கும் மிகவும் அவசியமான விலைமதிப்பற்ற புத்தகங்கள் கண்காட்சிக்கும் 20% விலைக் கழிவில் விற்பனைக்கும் வைக்கப்பட்டுள்ளன.

1500 ரூபாவுக்கு மேல் கொள்வனவு செய்பவர்களுக்கு கண்காட்சியின் இறுதி நாளான நாளை மறுதினம் திங்கட்கிழமை குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்பட்டு மடிக்கணனி, மின் அகராதி மற்றும் ரேப் ரப் (Tap) என்பன பரிசாக வழங்கப்படவுள்ளன.

இதேவேளை, விரும்பிய புத்தகங்களை கணனியில் தரவிறக்கம் செய்துகொள்ளவும், பார்வையிடுவதற்கும் எடிசலாட் நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ள http://www.thebookhub.lk என்ற புதிய இணையத்தளம் மூலம் பார்வையிடமுடியும்.

# சுன்னாகம் வாழ்வகத்தின் மண்டபத் திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)


சுன்னாகம் வாழ்வகத்தின் மேல்மாடி மண்டபத் திறப்பு விழா நாளை மறுதினம் திங்கட் கிழமை முற்பகல் 9.00 மணிக்கு வாழ்வகத் தலைவர் ஆ.ரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஈ.பி.டி.பி யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், சிறப்பு விருந்தினராக உடுவில் பிரதேச செயலர் மு.நந்தகோபாலன், நிக்கொட் திட்டப் பணிப்பாளர் திருமதி ரஞ்ஜினி நடராஜபிள்ளை, நிக்கொட் பிரதித் திட்டப் பணிப்பாளர் ச.வசந்தகுமார், நிக்கொட் தொழில்நுட்ப உத்தியோகத்தர் அல்பேட் சாள்ஸ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன், ராஜா கொம்பிளெக்ஸ் உரிமையாளர் ஆறுமுகம் ராஜசிங்கம், இணுவில் கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கச் செயலாளர் செ.உதயகுமார் ஆகியோர் கலந்த கொள்ளவுள்ளனர்.

# மெய்தான் பாருங்கோ...

## "கரும்புள்ளிகள்"



போனகிழமை இதால வந்த இடத்தில எங்கட 'மத வியாபாரியள்' பற்றி வாயைத் திறக்கவேண்டி வந்திட்டுது. நானும் சொல்ல வேண்டியதைச் சொல்லிப் போட்டுப் போனாப்போல, என்ர சகபாடி வந்து, தான் பேப்பரில பாத்ததெண்டு ஒரு விசயத்தைச் சொன்னான்.

அது என்னெண்டால் பாருங்கோ! குரோஷியா எண்ட நாட்டில சாக்ரெப் எண்டு சொல்லுற ஒரு பகுதியில 34 வயசுடைய போதகர் ஒருவர் கலியாணமான ஒரு பெண்ணோடை தலைமறைவாகியிட்டாராம். அவர் போகும் போது சும்மா போகேல்லை! தன்ர கட்டுப்பாட்டில இருந்த தேவாலயத்தின் சொத்துமதிப்பு 9 கோடி ரூபாவையும் சுருட்டிக்கொண்டு மறைஞ்சிட்டார்.

தேவ ஊழியம் (போதகம்) எண்டது சும்மா லேசுப்பட்ட விசயம் இல்லைக் கண்டியளே! அன்பு, நன்றி, கருணை.. எண்ட உணர்வுகளோடை மனக்கட்டுப்பாடும் அவசியமானது பாருங்கோ. இந்த மனக்கட்டுப்பாடு எண்டது எல்லாராலையும் நடைமுறைப்படுத்த இயலாத காரியம். மனசில உணர்வுகளையும் மீறின அர்ப்பணிப்பு எழவேணும். அப்பதான் எந்தவொரு பாவமான காரியங்களிலையும் விழுந்து போகாதபடிக்கு ஆண்டவருக்கு ஊழியம் செய்ய முடியும்.

இதைக்குறிச்சு இயேசு ஏற்கனவே தன்னுடைய சீசர்மாருக்குச் சொல்லி வைச்சிருக்கிறார்.

**"என்பெயரின் பொருட்டு வீடுகளையோ, சகோதரர்களையோ, தந்தையையோ, தாயையோ, பிள்ளைகளையோ, நில புலன்களையோ விட்டுவிட்ட எவரும்..."** (மத்தேயு சுவிஷேசம் 19 ஆவது அதிகாரம் 29 ஆவது வசனம்)

தன்னுடைய நாமத்தின் பொருட்டு சகலதையும் விட்டிட்டு தன்வழியைப் பின்பற்றுகிற ஆர்... எவரோ...? அவர்கள்தான் தனக்கு உண்மையாக, விசுவாசமாக ஊழியஞ்செய்ய முடியும்... எண்டதை இயேசு சொல்லியிருக்கிறார்.

ஆனாலும் பாருங்கோ! இப்படியாக தனக்கு தேவஊழியம் செய்யவந்திட்டு, சாகிறதுக்கு முன்னாடி மனம்குழம்பி, தனக்குப்பிடிச்ச பெண்ணோடை தலைமறைவாகிப் போறதும், திரும்பவும் தாய், தேப்பனோடை போய் இருக்க விரும்புறதும் தேவஊழியத்துக்கான செயற்பாடல்ல எண்டதை இயேசு இன்னொரு இடத்தில சொல்லியிருக்கிறார்.

**"கலப்பையில் கைவைத்தபின், திரும்பிப் பார்ப்பவர் எவரும் இறையாட்சிக்கு உட்படத் தகுதியுள்ளவர்கள் அல்ல"** (லூக்கா சுவிஷேசம் 10 அதிகாரம் 62ஆவது வசனம்)

கலப்பையில் கை வைத்தபின் - ஊழியம் செய்யப் புறப்பட்ட பின், திரும்பிப் பார்ப்பவர் - திரும்பவும் பழைய நிலைக்குச் செல்பவர்... எண்டதை இயேசு மறைமுகமாக வெளிப்படுத்துறார்.

கலப்பையைத் தூக்கிக்கொண்டு வயல்ல உழவெளிக்கிடுகிற ஆட்கள் வயல்நிலம் சேறோ சகதியோ, காய்ஞ்சு போச்சோ கல்லு; முள்ளுக்கிடக்குதோ...? எண்டு எதையும் பாராமல் உழுது முடிச்சுப்போட்டுப் போகவேண்டிய நேரத்தில போய்ச் சேந்திடவேணும். அதுதான் 'திரும்பிப்பாராத' உண்மையான சுவிஷேச தேவஊழியம் கண்டியளே!

இயேசுவுக்கு உண்மையாக, விசுவாசமாக ஊழியம் செய்யிறவையும் கனபேர் இருக்கினம். அதேநேரத்தில இயேசுவின்ர பெயரை வைச்சுக்கொண்டு 'ஊத்தைத்தனமான வேலையள்' செய்யிற ஆட்களும் இருக்கிறதால உண்மையான சுவிஷேச ஊழியர்மாரை சனங்கள் சந்தேகக் கண்கொண்டு பாக்கவேண்டிய நிலையும் இருக்குது.

சந்தேகம் எண்டு சொல்லத்தான் எனக்கு என்ர ஊரில நடந்த ஒருசம்பவம் ஞாபகத்துக்கு வருகுது. இது 2000ஆம் ஆண்டில நடந்ததெண்டு நினைக்கிறன்.

தேவசத்தியத்தைப் போதிக்கிற வேதசபையொண்டுக்கு போதகர் ஒருவர் வந்தவர் பாருங்கோ! வந்தவர் தனக்கான சுவிஷேச ஊழியத் தோடை நிண்டிருக்கலாம். அவரோ இளம் பொடியன். மூண்டுமாசத்துக்குப் பிறகு ஒரு நாள் சபையில அந்தப் போதகரையும் காணேல்லை. சபைக்கு வந்து போன ஒருபிள்ளையையும் காணேல்லை. கொஞ்சநாள் கழிச்சு பிள்ளையின்ர தேப்பனுக்கும் சபையின்ர மேலிடத்துக்கும் கடிதங்கள் ரண்டு போயிருக்குது.


அதில, "கர்த்தரால ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் பாக்கியவான்கள்... எண்ட பைபிள் வசனத்தின்படி... எங்களையும் ஆசீர்வதிப்பீர்களாக - ஆமென்" எண்டு எழுதிக்கிடந்ததைக்கண்டதும் எல்லாருக்கும் பெரிய அதிர்ச்சியாய் போச்சுது.

என்ர சகபாடி குரோஷியா நாட்டுப் போதகற்ர விசயத்தைச் சொன்னதும் எனக்கு அது ஏதோ பாரதூரமாகத் தெரியேல்லைப் பாருங்கோ. சில இடங்களில இப்படியான சீத்துவக் கேடுகள் நடக்கத்தான் செய்யுது. அதுக்காக எல்லாத்தையும் ஒரே கண்ணோட்டத்தோடை பாக்கக்கூடாது கண்டியளே. இப்படியான சம்பவங்கள் சிலதுகள் வெளிச்சத்துக்கு வருகுது. பலதுகள் இருட்டுக்குள்ள காலத்தோடை அடிபட்டுக்கொண்டு போய்விடுகுது.

கலப்பையில கையைவைச்சிட்டு பின்னிட்டுத் திரும்பிப் பாக்கிற சில கரும்புள்ளிகளால வெள்ளை உடுப்புப் போட்டுக்கொண்டு இயேசுவுக்கு விசுவாசமாக ஊழியஞ் செய்யிற போதகர்மார் வெட்கப்பட்டுத் தலைகுனிய வேண்டிய நிலையாக் கிடக்குது பாருங்கோ!

**- சின்னக்குட்டி சின்னச்சாமி.**

# ஆணையாளரின் இடமாற்றம் மறுபரிசீலிக்கப்படுமா?



(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகரசபை ஆணையாளராக இருந்து உள்ளூராட்சித் திணைக்களத்திற்கு திடீர் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ள பிரணவநாதனை மீண்டும் யாழ் மாநகர சபைக்குக் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாக யாழ் மாநகர முதல்வர் திருமதி. யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் 2.00 மணிக்கு யாழ் மாநகர சபையின் 10ஆவது மாதாந்தப் பொதுக்கூட்டம் முதல்வரின் மண்டபத்தில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்திற்கு தலைமை ஏற்று உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

யாழ்.மாநகரசபை ஆணையாளராக பிரணவநாதன் சிறிது காலம். இருந்தபோதும் அவரது செயற்பாடுகள் பலரும் பாராட்டும் விதத்தில் அமைந்திருந்தது. அரச ஊழியர்களின் இடமாற்றம் என்பது சட்ட பூர்வமானதும் சட்டத்திற்கு அமைவானதுமேயாகும் இருந்தும் பிரணவநாதனின் இடமாற்றம் அரசியல் ரீதியானது என்று உள்ளூர் பத்திரிகை ஒன்று சித்தரித்து செய்தியை வெளியிட்டுள்ளது. இது முற்றிலும் தவறு என்று குறிப்பிட்ட அவர் யாழ் மாநகர எதிர்க்கட்சி உறுப்பினர்கள், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கு பிரணவநாதனை மீண்டும் யாழ் மாநகரசபையின் ஆணையாளராக நியமிக்க வேண்டும் என்று கடிதம் எழுதியிருக்கின்றனர் அவ்விடயம் முதல்வராகிய எனக்குத் தெரியப்படுத்தப்படாமை மனவேதனையை உண்டு பண்ணியிருக்கின்றது எனவும் தெரிவித்தார்.

இருந்தும் அவரை யாழ் மாநகரசபைக்குக் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் முதல்வர் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த எதிர்க்கட்சி உறுப்பினர் பரஞ்சோதி தெரிவிக்கையில் சபை உறுப்பினர்கள் சம்பந்தப்பட்ட விடயங்களே முதல்வருக்குத் தெரிவிக்கப்பட வேண்டும் ஊழியர் சம்பந்தப்பட்ட விடயம் என்பதால் முதல்வருக்குத் தெரியப்படுத்தப்படவில்லை எனவும் தெரிவித்தார்.

இதேவேளை யாழ் மாநகர சபையின் புதிய செயலாளராகக் கடமை யேற்றிருக்கும் தர்மரட்ணம் இந்த 10ஆம் மாதப்பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

# திருத்தப்பட்டது தபால் பெட்டி

(வரணி)

வடக்கு வரணி கறுக்காய் பேருந்து தரிப்பிடத்தில் பொருத்தப்பட்டிருந்த தபால்பெட்டி திருத்தப்பட்டுள்ளது.

இனந்தெரியாத விசமிகளால் அடித்து சேதப்படுத்தப்பட்டு மீண்டும் திருத்தப்பட்ட நிலையில் அதே தரிப்பிடத்தில் பொதுமக்களின் நன்மை கருதி பொருத்தப்பட்டுள்ளது.

இதனால் இப்பகுதி மக்கள் தற்போது பயன் அடைந்துள்ளனர். முன்னர் இத்தபால்பெட்டி இல்லாதநிலையில் மக்கள் வரணியில் உள்ள அஞ்சலகத்திற்கு ஒருமைல் தூரம் சென்று தங்கள் தபால்களை சேர்க்க வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (150)

# கேதாரீஸ்வரர் விரதம்

(தொடர்ச்சி...)

கௌதம முனிவர் கூறிய வண்ணம் அம்மையார் இவ்விரதத்தை விதிப்படி அநுட்டித்துப் பரமசிவனை மகிழ்வித்தார். பரமேஸ்வரன் சிவகணங்கள் புடைசூழ அவ்விடத்திற்கு எழுந்தருளினார். பார்வதி தேவியார் இறைவனை வணங்கி "சுவாமி! அடியாள் அனுஷ்டித்த இந்த விரதத்தை யாவர் அனுஷ்டித்தாலும் அவர்களுக்கு நீண்ட ஆயுளையும், நல்ல புத்திரப் பேற்றையும் அஷ்டஐஸ்வரியங்களையும் கொடுத்து இறந்தபின் உங்களது திருவடித் தாமரைகளை அடைகின்ற பேற்றையும் அனுக்கிரகித்தருள வேண்டும்" என்று பிரார்த்தித்தார். சிவபெருமான் அம்மையாரின் பிரார்த்தனைக்கு அனுக்கிரகம் செய்து, கௌதம முனிவருக்கும் திருக்கண் பாலித்துத் தேவியாரைத் தமது வாமபாகத்தில் சேர்த்து அர்த்தநாரீஸ்வராகிக் கைலாயத்திற்கு எழுந்தருளினார்.

சித்திராங்கதன் என்னும் கந்தர்வன் வச்சிரதேயன் என்னும் அரசனுக்கு இவ்விரத மகிமையை உபதேசித்தான். அவன் அதனை அனுஷ்டித்துப் புதல்வராற் சிறந்து, புகழும் பெருக ஆட்சிபுரிந்தான்.

இந்த விரதத்தின் மகிமையை அறிந்த தெய்வகன்னியர்கள் பூவுலகில் வந்து தங்களால் இருபத்தொரு தினங்களாக இவ்விரதத்தை அனுஷ்டிக்க முடியாமையினால் ஒரே நாளில் அனுஷ்டிக்க விரும்பினார்கள். அதாவது ஐப்பசி மாதத்து அபரபட்சத்து சதுர்த்தசியில் அனுஷ்டித்தார்கள். குறித்த விரத தினத்தில் கங்கையில் நீராடி, ஆசாரசீலர்களாக இருந்து தங்களது நித்திய கருமங்களை முடித்து, ஆலமரத்தின் கீழ் சிவலிங்கம் அமைத்து, குத்துவிளக்கு ஏற்றி, சங்கல்பம் சொல்லி, சிவலிங்கப் பெருமானுக்கு முறைப்படி அபிஷேக ஆராதனைகளைச் செய்து, இருபத்தொரு வெற்றிலை, பாக்கு, வாழைப்பழம், இருபத்தொரு இழையினாலான நூலை முறுக்கி இருபத்தொரு முடிச்சிட்டு தூப தீப சோடசோபசார பூசனைகளைச் செய்து வில்வார்ச்சனை செய்து தேங்காயுடைத்துப் பஞ்சாரத்தி காட்டி பிரதட்சண நமஸ்காரம் செய்தார்கள். இதனைப்பார்த்திருந்த புண்ணியவதி, பாக்கியவதி என்ற இரு பெண்களும் தங்களது துன்பமெல்லாம் நீங்கி, தங்களுக்கு நல்ல கணவன் வேண்டும் என்று விரும்பித் தெய்வ கன்னிகைகள் அனுட்டித்தபடி இவ்விரதத்தை அனுட்டித்தார்கள். (தொடரும்)

தொகுப்பு – விசிந்தன்

# சீனாவின் உதவிக்கரம் யாழ் நூலகத்துக்கும்


(யாழ்ப்பாணம்)

யாழ் நூல்நிலையத்திற்கு நேற்றுமுன்தினம் வஜயம் செய்த இலங்கைக்கான சீனத்தூதுவர் யூஜியாங்கே யாழ் நூல்நிலையத்தின் ஒரு பகுதியைப் புனரமைக்க முதற்கட்ட மாக ஒரு மில்லியன் ரூபா நிதியுதவி வழங்கியுள்ளார்.

நேற்றுமுன்தினம் முற்பகல் 10.30 மணிக்கு யாழ் நூல் நிலையத்திற்கு விஜயம் செய்த அவர் யாழ் நூல் நிலையத்தைச் சுற்றிப்பார்வையிட்டார். தூதுவருடன் அவரது பாரியாரும் தூதரக அதிகாரிகளும் சமூகமளித்திருந்தனர். தூதுவரை யாழ் மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா பிரதம நூலகர் மற்றும் ஊழியர்கள் வரவேற்று நூல் நிலையத் திற்கு அழைத்துச் சென்றனர்.

நூல்நிலையத்தின பல பிரிவுகளையும் மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தூதுவருக்குச் சுற்றிக் காண்பித்தார். இதனைத் தொடர்ந்து யாழ் நூல்நிலைய கேட்போர் கூடத்தில் சீனத்தூது வருடன் ஒன்று கூடல் ஒன்று நடைபெற்றது. இந்த நிகழ்வில் வைத்து சீனத் தூதுவர் யாழ் நூல்நிலையத்தின் புனரமைப்புப் பணிக்கென ஒரு மில்லியன் ரூபாவை யாழ் நூல் நிலைய பிரதம நூலகரிடம் கையளித்தார். அத்துடன் இந்தப் புனரமைப்பு வேலைக்கான மிகுதி நிதியினையும் சீன அரசாங்கம் வழங்கும் என்றும் சீனத்தூதுவர் தெரிவித்துள்ளார். (பா)

# ஈதுல் அழ்ஹா இனிய வாழ்த்து



இஸ்லாத்தின் கடமைகளில் இறுதிக்கடமையாம் ஹஜ் அதனை நிறைவேற்றி ஹஜ் பெருநாளைக்கொண்டாடும் உலக முஸ்லீம்களுடன் இப்பெரு நாளை மகிழ்வுடன் கொண்டாடும் அனைவருக்கும் என் "ஈதுல் அழ்ஹா" இனிய வாழ்த்துக்கள்.

தியாகங்களை தீர்க்க தரிசனங்களாக்கி அன்று இப்ராஹிம் நபி(அலை) அவர்களும் ஹஜர் அம்மையார் அவர்களும் செய்த தியாகங்களின் அடிப்படையில் தான் இப்பெருநாள் எமக்கு வழங்கப்பட்டது.

அன்று மனித சஞ்சாரமற்ற வரண்ட பாலைவனத்தில் அருந்தவம் செய்து மகனாரையும் மனைவியாரையும் தனியே விட்டு மக்கா சென்று புனித ஆலயம் ஹரம் சரீபை கட்டச் சென்றது அவரின் மறக்கமுடியாத அற்புத தியாகம். மேலும், தாகமேலீட்டால் அழும் குழந்தைக்காக ஸபா-மர்வா குன்றுகளில் ஓடிஓடித்தேடி ஏழுமுறை ஓடிப்பெற்ற ஸம்ஸம் நீர்தந்த அதிசயம் ஹாஜரா அம்மையாரின் தியாகம், அதற்கும்மேல், தந்தை கண்டகனவான தன்னை அறுத்துப் பலி கொடுப்பதை, நனவாக்கச் சொன்ன மகனார் இஸ்மாயில் தியாகம் அளப்பரியது.

அல்லாஹ்வின் கட்டளையை ஏற்று தவப்புதல்வன் கழுத்திலே வைத்த கத்தியை தந்தையார் நடத்திய காட்சி விண்ணில் உள்ளவைகளும் அதிர்ந்து மண்ணில் உள்ளவைகளும் அதிர்ந்தன. ஆனால் கழுத்து வெட்டப்படவில்லை. ஆவேசத்துடன் வீசப்பட்ட கத்தி பாறாங்கல்லை இருதுண்டாக்கியது.

அப்போது தான் அந்தக்கத்தி "இப்றாஹிமே கலில் ஆகிய நீங்கள் அறு என்கிறீர்கள் ஜலீல் என்ற இறைவன் அறுக்க வேண்டாம் என்கிறான்! நான் எப்படி அறுப்பேன் என வினவியது.

கனவை மெய்ப்பித்த தியாகச் செம்மலுக்களித்த நல்மாராபவம் என்ற இறை அசரீரியுடன் மகனுக்கு பகரமாக ஆட்டுக்கடாவை குர்பான் செய்ய உத்தரவு வந்தது! நாமும் இதன் பிரகாரம் கடமையை சிரமேற்கொண்டு செய்து மகிழ்வுடன் பெருநாளைக் கொண்டாடி மகிழ்ந்து இதன் மூலம் ஏழை எளியோருக்கு உவந்து, இரத்த உறவுகளைப் பேணி, வேற்றுமையில்லா ஒற்றுமையுடன் ஒன்று கூடுவோம்.

மௌலவி ஏ.எம்.ஏ.அஸீஸ் (ஹாஸிமி), சிவலைபள்ளி, யாழ்ப்பாணம்.

# திறப்பு விழா

கட்டைவேலி நெல்லியடி பல நோக்கு கூட்டுறவு சங்கத்தின் கரவெட்டி கிராமிய வங்கி திறப்புவிழா இன்று காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளது. சங்கத்தின் தலைவர் செ.செல்வராசா தலைமையில் விழா நடைபெறவுள்ளதோடு யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே. அருந்தவநாதன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு வங்கியினை திறந்து வைக்கவுள்ளார். (116)

# வரணியில் கிளை

(வரணி)

வரணிப்பிரதேசத்தில் கால்நடைவளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் கிளை ஒன்று வரணி பிரதேச வைத்திய சாலை அருகில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கால் நடைத் தீவனங்கள் உட்பட பல்வேறு வசதிகளை கால் நடைவளர்ப்போர் இதன் மூலம் பெற்றுக் கொள்ள முடியும் எனத் தெரிக்கப்படுகிறது. (150)

# விதை தானியம் வழங்கல்

வடக்கு வரணி ஜே/336 கிராம அலுவலர் பிரிவில் கடந்த வாரம் வீட்டுத்தோட்ட செய்கையாளர்களுக்கு விதைதானியங்கள் வழங்கப்பட்டன.

- கிராம சேவையாளர் அலுவலகத்தில் வைத்து சுமார் 150 பயனாளிகளுக்கு கிராம அலுவலர் அ.பிரதீபனால் விதை தானி யங்கள் வழங்கப்பட்டன. தற் போதைய பருவமழையுடன் இத் தானியங்களைப் பயிரிடுமாறும் பயனாளிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. (150)

# க.பொ.த. (சாதாரணதர) மாதிரி வினாத்தாள்
# G.C.E. (O/L) Examination model Paper

வரலாறு | 33 T I | ஆசிரியர் : V. முரளி

## பகுதி I

1) வரலாற்றுக்கும் புவியியலுக்கும் இடையிலான தொடர்பினை வெளிப்படுத்தும் கூற்றாவது,
1) காலத்திற்குக் காலம் நிலநடுக்கம் ஏற்படல்.
2) சூறாவளிக்காற்றும் மழையும் கிடைத்தல்.
3) சர்வசன வாக்குரிமையின் மூலம் நாட்டின் நிர்வாகிகளைத் தேர்ந்தெடுத்தல்.
4) மலையகம் போர்த்துக்கேயரதும் ஒல்லாந்தரதும் ஆக்கிரமிப்புக்கு உட்படாமை.

2) இலங்கையின் வரலாற்றினை அறிய உதவும் செவிவழி இலக்கிய மூலாதாரமாவது.
1) நாட்டார் பாடல்கள் 2) வம்சக் கதைகள்
3) சீகிரியக்கவிதைகள் 4) மகாகாவியம்

3) பதுத்தளைத்தூண் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள விடயம்
1) முடிசூட்டு விழா 2) சமகால வர்த்தகம்
3) ஆராமை நிர்வாகம் 4) பிராமரணது கல்வி

4) வேதங்களில் குறிப்பிடப்படாத விடயமாவது
1) கடவுளரின் திருவுருவங்கள் பற்றிய விடயம்
2) விவசாயத்துடன் இணைந்த வாழ்க்கை முறை பற்றியது
3) இருககுயசுர், சாம, அதர்வம் பற்றியது.
4) பௌத்த தர்ம வேலைகள் நடைபெறும் முறைகள்.

5) பதினாறு பெரும் ஆரியக்குடியேற்றம் அல்லாதது
1) மகதம் 2) டில்லி 3) கோசலை 4) அவந்தி

6) கீழே தரப்பட்டுள்ள விடயங்கள் அனைத்துடனும் தொடர்புடைய மன்னன்
A - குப்த பேரரசின் நிர்வாகி
B - கவிஞன்
C - சங்கீத வித்துவான்
D - நீலராஜன், விஷ்ணு எனும் மன்னர்களை வெற்றி கொண்டவன்.
1) சந்திரகுப்தன் 2) 11 ஆம் சந்திரகுப்தன்
3) சமுத்திரகுப்தன் 4) குமாரகுப்தன்

7) வேத காலத்தில் இலங்கையின் மனித வரலாற்றில் மனித வாழ்க்கைக்குட்படாத இடம்
1) தம்புள்ளை குகை 2) பட்டதொம்பே குகை
3) கிதுள்கல பெலிலேன குகை 4) அத்னகொட அலுலேன

8) மன்னரது முறையான முடிசூட்டு விழாவிற்கு அவசியமான பொருட்கள் புராதன காலத்தில் அழைக்கப்பட்ட முறை
1) அரசவம்ச பொருட்கள் 2) அரச பரிவட்டப் பொருட்கள்
3) அரச பாவனைப் பொருட்கள் 4) திவ்ய ஆபரணங்கள்

9) இலகம்பகர்ண வம்சத்தின் முதல் மன்னன்
1) வசபன் 2) வலகம்பா
3) துட்டகைமுனு 4) கவன்தீசன்

10) அனுராதபுர யுகத்தின் முதல் மன்னனும் இறுதி மன்னனும்
1) பண்டுகாபயன் - V ஆம் மகிந்தன்
2) விஜயன் - V ஆம் மகிந்தன்
3) பண்டுபாபயன் - IV ஆம் சேனன்
4) பண்டுகாபயன் - I ஆம் விஜயபாகு

11) மகாசேன மன்னன் அழைக்கப்படும் சிறப்புப் பெயர்
1) மின்னேரித் தெய்வம் 2) மினிப்பே தெய்வம்
3) காவல் தெய்வம் 4) சமன் தெய்வம்

12) அனுராதபுர இராசதானியின் பிரதேசங்கள் பிரிக்கப்பட்டிருந்த முறை
1) ராசரட்டை, தக்கிணதேசம், ரோகணதேசம், மலயரட்டை
2) ருகுணு, மாயரட்டை, பிகிடிரட்டை
3) உத்தரபஸ்ஸ, தக்கிணபஸ்ஸ, பிராசினபஸ்ஸ, பஸ்சிமபஸ்ஸ
4) வடக்கு, கிழக்கு, மத்திய

13) அனுராதபுர காலத்தில் செனவிரத்ன என அழைக்கப்பட்டவர்
1) யுவராஜன் 2) பிரதம அமைச்சர்
3) புரோகிதன் 4) சேனாதிபதி

14) குளத்தின் அணைக்கட்டின் உட்புறத்தில் கருங்கற்களை நிரப்பி அமைக்கப்படும் அமைப்பு என்ன பெயரால் அழைக்கப்படும்?
1) சுருங்கை 2) அலைதாங்கி
3) கலிங்கற்தொட்டி 4) கலிங்கல்

15) தம்பதெனிய இராசதானி காலத்தில் புனித தந்ததாதுவையும் பாத்திர தாதுவையும் பிரதிட்டை செய்த இடம்
1) கண்டியின் செங்கட்கல மலைப்பகுதி
2) கேகாலை பெலிலேன பகுதி
3) பொலனறுவை கல்விகாரை
4) களனி விகாரை

16) திரச, மயூர சந்தேச காவியங்கள் எழுதப்பட்ட காலம்
1) தம்பதெனிய காலம் 2) யாப்பகூவ காலம்
3) குருநாகல் காலம் 4) கம்பளை யுகம்

17) தம்பதெனிய யுகத்தில் எழுதப்பட்ட காவியங்கள்
1) திரச சந்தேச, மயூர சந்தேச, அன்தகலுவங்ச.
2) கிராசந்தேச, செலலிகினி சந்தேச, லொவெடசங்கிராவ.
3) கவிசிலுமின, சந்தரமரத்னாவலிய, விசுத்திமார்க்கசன்னய.
4) கோகிலசந்தேச, ஹங்ச சந்தேச, குத்திய காவியம்

**18 - 21 வரையான வினாக்களுக்கு படத்தினை அடிப்படையாகக் கொண்டு விடையளிக்க.**




18) படத்தில் 1, 2, 3, 4 எனும் இலக்கங்களால் காட்டப்பட்டுள்ள விடயங்கள்
1) கோகர்ண, ஜம்புகோளப்பட்டினம், கொடவாய, களனி.
2) கோகரணன, ஜம்புகோளப்பட்டினம், களனி, மகாதித்த.
3) தேவநகரம், கொடவாய, களனி, கோகர்ண.
4) மகாதித்த, காலி, கோகர்ண; தேவநகரம்.

19) பத்தகச்சானா வந்திறங்கி துறைமுகத்தை குறிக்கும் இலக்கம்
1) 2 2) 1 3) 4 4) 5

20) மல்வத்து ஓயாவைக் குறிக்கும் எழுத்து
1) A 2) B 3) C 4) D

21) போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்திறங்கிய துறைமுகம்
1) A 2) B 3) C 4) D

22) பொலன்னறுவை இராசதா்னியின் வீழ்ச்சிக்கு காரணமான ஆக்கிரமிப்பாளன்
1) ராஜேந்திரசோழன் 2) ராஜராஜ சோழன்
3) கலிங்கமாகன் 4) சென்ஹோ

23) இலங்கைக்கு வருகை தந்த முதல் மேலைத்தேயத்தவர்
1) ஒல்லாந்தர் 2) ஆங்கிலேயர்
3) போர்த்துக்கேயர் 4) அராபியர்

24) பிரான்சியப் புரட்சி நடைபெற்ற ஆண்டு
1) 1789 2) 1932
3) 1800 4) 1760

25) ஜேர்மனியை ஒன்றுபடுத்திய ஆண்டு
1) கி.பி. 1805 2) கிபி. 1871
3) கி.பி.1870 4) கி.பி1873

26) கம்சபா முறையை நீக்கிய முதல் யாப்புச் சீர்திருத்தம் எது?
1) டொனமூர் 2) மக்கலம்
3) கோல்புறுக் - கமறன் 4) சோல்பரி

27) முதலாளித்துவ பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டு ஐக்கிய அமெரிக்க குடியரசு ஏற்படுத்திய அமைப்பு எது?
1) வோர்ஸோ 2) நேட்டோ
3) கெட் 4) யுனிசெப்

28) சூரியத்தொகுதி பற்றிய உண்மையை முதன்முதலில் உலகிற்கு கூறிய விஞ்ஞானி யார்?
1) கலிலியோ கலிலி 2) ஜொகன்னஸ் கெப்ளர்
3) ஐசக் நியூட்டன் 4) நிக்கலஸ் கொப்பணிகஸ்

29) தலதா மாளிகைக்குரிய புனித தந்ததாதுவை இலங்கைக்கு கொண்டு வந்து பிரதிட்டை செய்தபோதிருந்த ஆட்சியாளன் யார்?
1) மகாசேனன் 2) கித்சிரிமேவன்
3) வலகம்பா 4) தாதுசேனன்

30) பிரான்சியப் புரட்சியுடன் தொடர்புடைய எண்ணக்கருவை வெளியிட்டவர்.
1) ரூசோ 2) டோல்ஸ்டோய்
3) கரிபால்டி 4) ஜோசப் மசினி

31) உலகயுத்தத்தின் முடிவில் உலகில் பலம் வாய்ந்த நாடுகள் இரண்டு
1) இங்கிலாந்து, பிரான்ஸ்
2) ஜப்பான், ஜேர்மனி
3) ஒஸ்திரியா, ஹங்கேரி
4) ஐக்கிய அமெரிக்க குடியரசு, சோவியத் ரஷ்யா

32) i ஆம் ii ஆம் மலையக ஆக்கிரமிப்புகளுக்கு தலைமை வகித்த பிரித்தானிய ஆளுநர்கள்
1) பிறவுண்ரிக் - மெயிட்லன்ட் 2) நோர்த் - பிறவுண்ரிக்
3) மெக்டோவல் - ஸ்மேலி 4) நோர்த் - கிறகரி

33) 1 பத்தோலமியூ டயஸ் A இந்தியா
2. அமெரிக்கோ வெஸ்புச்சி B நன்னம்பிக்கைமுனை
3. கொலம்பஸ் C அமெரிக்கா
4. வஸ்கொடகாமா D ஹிஸ்பேனியாலோ
1) BCDA 2) ABCD
3) CBDA 4) DACB

34) ஜப்பானிய பேரரசனான முட்சுகிதோவால் 1871 இல் ஜப்பானில் ஏற்பட்ட முக்கிய மாற்றமாவது
1) ஜப்பானிய கதவுகளை வெளிநாடுகளுக்காகத் திறந்த விட்டமை.
2) புதிய யாப்புச் சீர்திருத்தத்தை நடைமுறைப்படுத்தியமை.
3) நடைமுறையிலிருந்த மானிய முறையை நீக்கியமை.
4) கிறிஸ்தவ மதத்தை நாடியவர்களை அழித்தமை.

35) "நாடுகளுக்கு சுதந்திரம் அவசியம், இனங்களுக்கு விடுதலை அவசியம், மக்களுக்கு புரட்சி அவசியம்" எனும் பிரகடனத்தின் மூலம் சீன மக்களுக்கு தைரியத்தை ஏற்படுத்தியவர் யார்?
1) பிரமதர் வோ என் - லாய் 2) யுவாங்சிகாய்
3) சுன் - யாத் - சென் 4) சீயெங்காய்ஷேக்

36) II ஆம் உலக யுத்தத்தின் முடிவில் தமது குடியேற்றவாதத்திற் குட்பட்டிருந்த நாடுகளுக்கு சுதந்திரம் வழங்குவதும் இடம்பெற்றது. அவ்வாறு சுதந்திரம் வழங்கிய நாடுகளாவன
1) ஜேர்மனியும் பிரான்சும் 2) கினாவும் வியட்னாவும்
3) ரஷ்யாவும் ஜப்பானும் 4) பிரித்தானியாவும் பிரான்ஸும்

37) II ஆம் உலக யுத்தத்தால் அழிவுற்ற ஐரோப்பிய நாடுகளுக்கும் ஜப்பானுக்கும் உதவி வழங்குவதற்காக உருவாக்கப்பட்ட அமைப்பு எது?
1) நேட்டோ அமைப்பு 2) சியாட்டோ அமைப்பு
3) மார்ஷல் திட்டம் 4) வோர்ஸோ அமைப்பு

38) இலங்கை நாடாளுமன்றத்தில் காணப்பட்ட இருசபை முறைகளைக் கொண்டமுறை எச்சீர்திருத்தத்தின்படி நீக்கப்பட்டது?
1) கி.பி 1931 2) கி.பி 1947 3) கி.பி 1972 4) கி.பி.1978

39) ரஷ்யாவின் போல்ஷவிக் கட்சியின் தலைவர்
1) II ஆம் அலெக்சாந்தர் 2) மகாபீட்டர்
3) III ஆம் அலெக்சாந்தர் 4) VI லெனின்

40) தொழிற்பிரிப்பு எனப்படுவது
1) பல்வேறு உற்பத்திகளில் ஈடுபடல்
2) ஒரு முடிவுப்பொருளைப் பெறுவதற்காக அதன் பகுதிகளை வெவ்வேறிடங்களில் உற்பத்தி செய்தல்.
3) உணவுப் பொருட்களின் உற்பத்திகள்
4) பலவாறாகப் பிரிக்கப்பட்ட தொழில் முயற்சிகள்.

## பகுதி II


**A**

கீழே "அ" பகுதியிலுள்ளவற்றை இலங்கைப் படத்திலும் "ஆ" பகுதியிலுள்ளவற்றை உலகப்படத்திலும் குறித்துப் பெயரிடுக.

(அ) மகாவலிகங்கை, யாழ்ப்பாணம், களுகங்கை, யாபகூவ, அனுராதகம, தீகவாபி, மாத்தறை, மகாகம, மகாதித்த, கற்பிட்டி.

(ஆ) விஜயநகர், பையர், போ்லின், செங்கடல், பாருகச்ச, நன்னம்பிக்கை முன்னை, ஜிப்ரோல்டர் தொடுகடல், பிறேசில்.

**B**




(i) இப்படத்தில் காட்டப்பட்டுள்ள தேரரைப் பெயரிடுக.

ii) அவர் நடத்திய பஞ்சமகா விவாதங்களில் ஒன்றினைப் பெயரிடுக.

iii) ஹென்ரி ஸ்டீல் ஒல்கொட் இலங்கைக்கு வருகை தருவதற்குக் காரணமாயமைந்த விவாதம் எது?



02)
i) இச்செதுக்கல் என்ன பெயரால் அழைக்கப்படுகிறது?
ii) எந்த வழிபாட்டிடத்தில் இதனைக் காணலாம்?
iii) இக்கலைப்படைப்பு எவ் இந்திய கலாசாரத்தை ஒத்துள்ளது?



03)
(i) இக்கலைப்படைப்பினைப் பெயரிடுக
ii) இது எதனைப் பிரதிபலிக்கிறது?
iii) இப்படைப்பு எந்நாட்டில் அமைந்துள்ளது?



04)
i) படத்தில் காட்டப்பட்டுள்ளவரைப் பெயரிடுக.
ii) அவர் எந்நாட்டவர்?
iii) அவரது சட்டக்கோவையின் பெயர் யாது?

*கடந்த செவ்வாய்க்கிழமை வெளியான தமிழ்மொழியும் இலக்கியமும் முன்னோடி வினாத்தாளுக்குரிய விடைகள்*

## பகுதி I

## முன்னோடி வினாத்தாள் - இல 02

| வினா | விடை | வினா | விடை | வினா | விடை | வினா | விடை |
|---|---|---|---|---|---|---|---|
| (01) | i | (11) | ii | (21) | ii | (31) | i |
| (02) | iii | (12) | iv | (22) | i | (32) | iv |
| (03) | iii | (13) | ii | (23) | iii | (33) | i |
| (04) | iv | (14) | ii | (24) | iii | (34) | iv |
| (05) | ii | (15) | iv | (25) | i | (35) | i |
| (06) | ii | (16) | iii | (26) | iv | (36) | ii |
| (07) | i | (17) | iii | (27) | ii | (37) | iii |
| (08) | ii | (18) | iii | (28) | i | (38) | iv |
| (09) | ii | (19) | i | (29) | iii | (39) | iv |
| (10) | iv | (20) | iv | (30) | i | (40) | iii |

## பகுதி II

01)
i) தேன் + அருவி + திரை + எழும்பி + வானின் + வழி + ஒழுகும்.
ii) ஒரு செயலை எழுவாயே செய்வதைக் காட்டுவது தன் வினையாகும்.
iii) அவர்கள் புதல்வன் ஊர்ந்து களித்து விளையாடி இருக்கின்றான்.
iv) விடய அறிவு, மொழியாற்றல்
v) நேர்மையற்றவன், கைப்பற்று, பொறாமை, புதுமை
vi) பணம் தருவதாக ஆசைகாட்டி மோசம் செய்தான். மாடமாளிகை கூட கோபுரத்தில் வாழ ஆசைப்படவில்லை.
vii) பொருட்பெயர் - வீடு / இடப்பெயர் - மாத்தளை / காலப்பெயர் - மார்கழி / சினைப்பெயர் - கண் / குணப் பெயர் - அன்பு / தொழிற்பெயர் - உண்ணல்.
viii) பரந்த விடய ஞானம், தெளிவான சிந்தனை
ix) ஆவணம் - நிலத்தின் உரிமை / கொண்டாடுவதற்குச் சான்றாக எழுத்துருவில் அமைந்த உறுதி
x) "தம்பரைக் காணாத நாளெல்லாம் நாமிங்கு பிறவா நாளே" என்று தம்பர் புராணம் பாடியுள்ளார்.

02) கட்டுரை பொருத்தமாக எழுதியிருப்பின் 25 புள்ளிகள் வழங்கவும்.

03) சுருக்கம் ஒரே பந்தியில் எழுதியும் பொருத்தமாக இருப்பினும் 10 புள்ளிகள் வழங்கவும்.

04) பாடலை வாசித்து பூரண வாக்கியத்தில் விடையளித்திருப்பின் 10 புள்ளிகள் வழங்கவும்.

05) கடிதம் அல்லது துண்டுப்பிரசுரம் என்பனவற்றில் ஏதாவது ஒன்றினை முறையாக எழுதியிருப்பின் 15 புள்ளிகள் வழங்கவும்.

## பகுதி III

01)
i) கற்றவரிடம் செல்வம் காணப்படுவது ஊரின் நடுவே இருக்கின்ற குளத்தில் நீர் நிறைந்தது போன்றதாகும்.

ii) மானம், குலம், கல்வி, வாய்மை, அறிவுடைமை, கொடை, தவம், உயர்வு, தொழில் முயற்சி, மங்கையர் மேல்கொள்ளும் ஆசை.

ii) "தாழை மடல் பெரிது கந்தம் மகிழினது"

iv) ஔவையார் முன்னுறை அரையனார்.

v) இயல், இசை, நாடகம் / சேர, சோழ, பாண்டியர்

vi) பல்வகைப் பொருள் பற்றி வெவ்வேறு செய்யுள் வகைகளால் அமைந்த சிற்றிலக்கிய வகை கலம்பகம் எனப்படும்.

vii) குஞ்சம்மாவால் தம்பிக்கு கூறப்பட்டது.

viii) அதிகாரம் கொண்டவர் / வர்க்க வேறுபாடு உடையவர்

ix) புதுமைக் கோயில், பூவும் பொன்னும்

x) கம்பர் - உழவர்கள் பற்றிக் குறிப்பிடப்படுகிறது

02) பொருளும் சிறப்பும் எழுதியிருப்பின்


பொருள் $3 \times 4 = 12$
சிறப்பு $2 \times 4 = 8$
20 புள்ளிகள்

03 ஆம் 04 ஆம் வினாக்களுக்குப் பொருத்தமான விடையெழுதியிருப்பின் புள்ளிகள் வழங்கவும்

3 ஆம் வினா 15 புள்ளிகள்
4 ஆம் வினா 15 புள்ளிகள்

5, 6, 7 ஆம் வினாக்களில் ஏதேனும் ஒன்றினை பொருத்தமாக எழுதியிருப்பின் 10 புள்ளிகள் வழங்கவும்.

# "தேச பிதா" பட்டம் வழங்க இந்திய சட்டத்தில் இடமில்லை



இந்தியாவின் தேச பிதா மகாத்மா காந்தி என்று இதுவரை காலமும் அனைவராலும் கூறப்பட்டுள்ள போதிலும் அவருக்கு 'தேச பிதா' பட்டம் வழங்க இந்திய சட்டத்தில் இடமில்லை என உள்துறை அமைச்சு விளக்கமளித்துள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, லக்னோவைச் சேர்ந்த 6ஆம் வகுப்பு மாணவியான ஐஸ்வர்யா பராஷரிடம், அவருக்கு கற்பிக்கும் ஆசிரியை, இந்தியாவின் தேசப் பிதா யார்? என வினவியுள்ளார். அக்கேள்விக்கு குறித்த மாணவி எவ்வித பதிலும் அளிக்காமல் மௌனமாக இருந்துள்ளார்.

இக்கேள்விக்குத் தானே பதிலளித்த ஆசிரியை, இந்தியாவின் தேசபிதா மகாத்மா காந்தி எனத் தெரிவித்துள்ளார். ஆசிரியையின் பதிலை மறுதலித்த அந்த மாணவி, இந்தியாவின் தேசப் பிதா மகாத்மா காந்தி என எப்போது அறிவிக்கப்பட்டது? அது எந்தச் சட்டத்தில் இருக்கிறது? என ஆசிரியையிடம் திருப்பி கேள்வியெழுப்பியுள்ளார்.

இதனையடுத்து மகாத்மா காந்தி தேசப்பிதாவா? இல்லையா? என்ற விவகாரம் சூடு பிடித்தது. இது தொடர்பில் கண்டறிந்துகொள்வதற்காக அக்கேள்வி கல்வி அமைச்சுக்கு அனுப்பப்பட்டது. அதற்குரிய பதில் கிடைக்காமையினால் அக்கேள்வி மாநில, மத்திய அரசாங்கங்களுக்கு கைம்மாறப்பட்டது. இறுதியில் அக்கேள்விக்கு பதிலளிக்கும் பொறுப்பு உள்துறை அமைச்சுக்கு வழங்கப்பட்டது. இருப்பினும் அதற்கான பதில் உத்தியோகபூர்வமாகக் கிடைக்கவில்லை.

இந்நிலையில், மகாத்மா காந்தியை தேசத் தந்தை என்று அரசு அறிவிக்க வேண்டும் என்று இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி பிரதீபா பட்டேல், பிரதமர் மன்மோகன்சிங் ஆகியோருக்கு மாணவி ஐஸ்வர்யா பராஷர் கடிதம் எழுதியிருந்தார். இதற்கு எந்தப் பதிலும் கிடைக்கவில்லை.

எனவே தனது கடிதத்தின் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பது பற்றி தகவல் அறியும் உரிமைச் சட்டம் மூலம் விபரங்களைக் கேட்டு விண்ணப்பித்திருந்தார். இந்த விண்ணப்பம் உள்துறை அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டு, உரிய விளக்கம் அளிக்கும்படி அறிவுறுத்தப்பட்டது.

இதையடுத்து மாணவி ஐஸ்வர்யாவின் விண்ணப் பத்திற்கு உள்துறை அமைச்சகம் விளக்கமளித்துள்ளது. அதில், கல்வி மற்றும் இராணுவம் தவிர வேறு எந்த பட்டமும் வழங்க அனுமதி இல்லை என்று அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 18(1)இல் கூறப்பட்டுள்ளது.

எனவே, மகாத்மா காந்திக்கு தேசபிதா என்ற பட்டம் வழங்க முடியாது. எனவே மாணவியின் மனு மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று அவ்வமைச்சு அறிவித்துள்ளது.

# எதிர்க் கட்சியினரின் குற்றச்சாட்டுக்கு பதிலடி கொடுப்போம்

## — காங்கிரஸ் தலைவர்கள்



காங்கிரஸ் சார்பில் வரும் நவ. 4ஆம் திகதி எதிர்கட்சியினரின் குற்றச்சாட்டுகளுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் மாபெரும் பேரணி நடத்த ஏற்பாடு செய்யயப்பட்டுள்ளது.

இந்தப் பேரணியில் காங்கிரஸ் தலைவர், சோனியா மற்றும் ராகுல் ஆகியோர் பங்கேற்று பேசவுள்ளனர். இந்த பேரணியில் இலட்சக்கணக்கானவர்கள் பங்கேற்கும் வகையில் முதல் ஷீலா தீட்சித் மும்முர ஏற்பாட்டில் இறங்கியுள்ளார். புகழ்பெற்ற ராம்லீலா மைதானத்தில் இந்த பேரணி நடக்கவுள்ளது.

# முகேஷ் அம்பானி முதல் இடத்தில்



இந்திய பணக்காரர்கள் பட்டியலில் முகேஷ் அம்பானி தொடர்ந்து முதல் இடத்தில் இருந்துவருகின்றார்.

ரிலையன்ஸ் நிறுவனங்களின் தலைவரான முகேஷ் அம்பானியின் மொத்த சொத்து மதிப்பு 21 பில்லியன் டொலர் என்று போபர்ஸ் பத்திரிகை கூறியுள்ளது.

முகேஷ் அம்பானியின் சொத்து மதிப்பு கடந்த 3 ஆண்டுகளாக வீழ்ச்சியடைந்த போதிலும் 5 ஆவது ஆண்டாக இந்திய பணக்காரர்களில் தொடர்ந்து முதலிடத்தில் இருப்பது குறிப்பிடத்தக்கது. அவரது சகோதரர் அனில் அம்பானி முதல் 10 இடத்துக்குள் கூட வர முடியாமல் பின்னுக்குத் தள்ளப்பட்டுள்ளார்.

உலகளாவிய ஸ்டீல் தொழிலில் ஆதிக்கம் செலுத்தும் இலட்சுமி மிட்டல் 16 பில்லியன் டொலர் சொத்துக்களுடன் 2. ஆவது இடத்தில் உள்ளார். 12 பில்லியன் டொலர் சொத்து மதிப்புடன் விப்ரோ நிறுவன தலைவர் அஜிம் பிரேம்ஜி மூன்றாவது இடத்தில் உள்ளார்.

பலோன்ஜி மிஸ்ட்ரி (9.8 பில்லியன் டொலர்) திலீப் சங்வி (9.2 பில்லியன் டொலர்) அதி கோத்ரஜ் (9 பில்லியன் டொலர்) சாவித்தரி ஜின்டல் (8.2 பில்லியன் டொலர்) சசி அன்ட் ரவி ரூயா (8.1 பில்லியன் டொலர்) இந்துஜா சகோதரர்கள் (8பில்லியன் டொலர்) குமார் மங்கலம் பிர்லா (7.8 பில்லியன் டொலர்) ஆகியோர் இந்திய பணக்காரர்களில் அடுத்தடுத்த இடங்களில் உள்ளனர்.

இந்தியச் செய்திகள்

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ........................................

முகவரி : ........................................

பிறந்த ஆண்டு : ........................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

........................................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# ஜெயலலிதாவுடன் திடீர் சந்திப்பு


கடந்த சட்டசபை தேர்தலில் அ.தி.மு.கவுடன் தே.மு.தி.க கூட்டணி வைத்து தேர்தலைச் சந்தித்தது. இதில் 29 இடங்களைப் பிடித்த தே.மு.தி.க எதிர்கட்சி அந்தஸ்தைப் பெற்றது.

விஜயகாந்த் சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவரானார். தற்போது தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த், அரசுக்கு எதிரான நிலைப்பாடுகளை எதிர்த்து அரசையும் ஆட்சியையும் விமர்சித்து வருகிறார்.

இந்நிலையில், மதுரை மத்திய தொகுதி தே.மு.தி.க. எம்.எல்.ஏ.ஆன ஆர்.சுந்தர்ராஜன், திட்டக்குடி தே.மு.தி.க சட்டமன்ற உறுப்பினர் க. தமிழழகன் ஆகியோர் இன்று தங்கள் ஆதரவாளர்களுடன் சென்று முதலமைச்சர் ஜெயலலிதாவை சென்னை கோட்டையில் சந்தித்தனர்.

அவர்கள் முதல்வருக்கு தங்கள் வாழ்த்துகளைத் தெரிவித்து தமிழக அரசு சிறப்பாகச் செயற்படுவதாகக் கூறிப் பாராட்டினர். மேலும், தங்கள் தொகுதி வளர்ச்சிப் பணிகளுக்கு தமிழக அரசு உதவி செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டனர்.

தே.மு.தி.க. எம்.எல்.ஏக்கள் 2 பேர் முதல்வரை தலைமைச் செயலகத்தில் சந்தித்துப் பேசியிருப்பது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அவர்கள் இருவரும் அ.தி.மு.க.வில் இணையவுள்ளதாகவும், அதற்காகவே அவர்கள் முதல்வரைச் சந்திக்கச் சென்றதாகவும் கூறப்படுகிறது.




## வாழ்க வளமுடன்



தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்

பெயர் : ந. கநிசிகா

முகவரி: சங்கத்தானை, சாவகச்சேரி.

அகவை 3 இல்

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

## வாழ்க வளமுடன்



தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்

பெயர் : ந. கனிசா

முகவரி: யமுனா வீதி. நல்லூர்.

அகவை 3 இல்

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

# ජාතික සම්පත

## ஜாதிக சம்பத JATHIKA SAMPATHA




265 ஆவது ஜாதிக சம்பத லொத்தரில் விசேட இலக்கம் பொருந்தியதன் மூலம் தங்க ஆபரணங்களின் தொகுதியை வென்ற நுவரெலியவைச் சேர்ந்த திரு.- தங்கராஜா அயிலர்ராஜா தேசிய லொத்தர் சபையின் பணிப்பாளர் திரு. வீ.எம் அமீன் அவர்களிடமிருந்து உரிய பரிசை பெற்றுக்கொண்டார்.

### சனிக்கிழமை

**ஜாதிக சம்பதவின் இன்றைய சுப்பர் பரிசு**


**ரூபா. தொண்ணூற்று மூன்று இலட்சம்**

**ரூபா. 9,389,441.00**

අංක
இல 272
No

දිනුම් ඇදීම
சீட்டிழுப்பு 27.10.2012
Draw on

இப்போது ஜாதிக சம்பத லொத்தரின் சுப்பர் பரிசு உள்ளிட்ட வழமையான பரிசுகளுக்கு மேலதிகமாக "ரன் வாசனா" விசேட இலக்கம் பொருந்துவதன் மூலம் தங்கமாலை, வளையல், தங்கக்காசு பிரேஸ்லட். என்பனவற்றையும் வெல்லும் வாய்ப்பு உங்களுக்கு.



உங்களையும் நாட்டையும் வளப்படுத்தும்

**தேசிய லொத்தர் சபை**

(C/2081)

# சமரச தீர்மானங்கள் அடுத்த வாரம் அமுல்

## விரிவுரையாளர் பிணக்கு தீருமா?

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்க சம்மேளனத்துடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட இணக்கப்பாடுகள் எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படும் என உயர்கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

குறித்த இணக்கப்பாடுகளை செயற்படுத்த அரசு தயங்கி வருவதாகப் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்க சம்மேளனம் முன்வைக்கும் குற்றச்சாட்டில் உண்மை இல்லை என உயர்கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

நேற்று இடம்பெற்ற செயற்குழு கூட்டத்தில் இணக்கப்பாடுகள் குறித்து கூடிய கவனம் செலுத்தியதாக பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்க சம்மேளனத்தின் ஊடகப் பேச்சாளர் கலாநிதி மஹிம் மென்டிஸ் குறிப்பிட்டார்.

இந்த நிலையில் கடந்த 24 ஆம் திகதி மற்றும் நேற்றைய தினம் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்க சம்மேள்னத்துடன் நடைபெறவிருந்த பேச்சுவார்த்தையைத் தவிர்க்க முடியாத காரணங்களால் பிற்போட வேண்டி ஏற்பட்டதென உயர்கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

எனினும் எதிர்வரும் 30 ஆம் திகதி பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்க சம்மேளனத்துடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என உயர்கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

# ஆய்வுக்குச் சென்றவர் ஆற்றில் மூழ்கிப் பலி

(கொழும்பு)

டெங்கு நுளம்பு ஒழிப்பு தொடர்பான ஆய்வுக்குச் சென்ற உயிரியல் பிரிவு உதவி அதிகாரி ஒருவர் மஹா ஓயாவில் விழுந்து காணாமல் போயுள்ளார். வரகாபொல - கோதாபாலுவ பகுதி மஹா ஓயாவில் கடந்த வியாழன் மாலை குறித்த நபர் நீராடச் சென்றுள்ளார்.

அதன்போது அவர் நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளதாக வரக்காபொல பொலிஸார் குறிப்பிட்டனர்.

கேகாலை மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரிகள் அலுவலகத்தில் கடமைபுரியும் 48 வயதுடைய நபரே காணாமல் போயுள்ளார்.


டெங்கு நுளம்பு ஒழிப்பு குறித்து கோதாபாலுவ பகுதியில் ஆய்வுகளை நடத்த குறித்த நபர் சென்றிருந்த வேளை இவ்விபத்து ஏற்பட்டுள்ளது.

# ஆணின் சடலம் மீட்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு, வலையிறவுப் பாலத்தின் கீழ் பகுதியில் இருந்து ஆண் ஒருவரின் சடலத்தை நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் பொலிஸூார் மீட்டுள்ளனர். வலையிறவுப் பாலம் அமைந்துள்ள ஆற்றில் சுமார் 50 வயது மதிக்கத்த க்க ஆணொருவரின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அப்பகுதியில் மீன்பிடித்துக்கொண்டிருந்தவர்கள் வழங்கிய தகவலினையடுத்தே இந்தச் சடலம் மீட்கப்பட்டதாக மட்டக்கீளப்பு பொலிஸார் தெரிவித்தனர். சடலம் அடையாளம் காண்பதற்காகவும் பிரேத பரிசோதனைகளுக்காகவும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பிலான விசாரணையை மட்டக்களப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



முட்டிமோதிய மூன்று வாகனங்கள் - சுன்னாகத்தில்

# 13 ஆம் திருத்தத்தை அகற்றினால் போர்க்கொடி தூக்குமாம் கூட்டமைப்பு

TNA
Tamil National Alliance
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

அரசியல் அமைப்பின் 13 ஆவது திருத்தத்தை அரசாங்கம் இரத்துச் செய்தால், அதற்கு எதிராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயற்பாடுகளை முன்னெடுக்கும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் கே. துரைராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தில் உள்ள சில தரப்பினர் 13 ஆவது அரசியல் அமைப்புத் திருத்தம் இரத்துச் செய்யப்பட வேண்டும் என வெளியிட்டு வரும் கருத்துக்கள் தொடர்பிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

கிழக்கு மாகாண சபைக்கு ஓரளவு அதிகாரம் கிடைத்துள்ளது. இதன் மூலம் பிரதேசத்தில உள்ள சிறுபான்மை இனத்தவரின் உரிமைகள் ஓரளவு பாதுகாக்கப்பட்டுள்ளன. அரசாங்கம் 13 ஆவது அரசியல் அமைப்புத் திருத்தத்தை இரத்துச் செய்ய வேண்டும் எனக் கூறுமாயின் சிறுபான்மை மக்களின் உரிமைகள் மேலும் இல்லாமல் போய் விடும்.

13 ஆவது அரசியல் அமைப்புத்திருத்தம் நாட்டின் நிரந்தர சுதந்திரத்திற்கு தடையாக இருப்பதாக அதனை எதிர்க்கும் அரசாங்கத்தில் உள்ள தரப்பினர் தெரிவிக்கின்றனர். இலங்கையில் நிலவும் பிரச்சினைக்கு ஆரம்பகாலம் முதலே தீர்வுகளை வழங்க உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டன. எனினும் அவை அனைத்தும் கிழித்தெறியப்பட்ட வரலாறே இருக்கின்றது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். இதற்கு காரணம் நாட்டில் உள்ள சிங்கள அரசியல்வாதிகளின் ஒருதலைப்பட்சமான செயற்பாடுகளாகும்.

தமிழர்களின் உரிமைகளுக்காக எந்த அரசியல் தீர்வையும் வழங்கக் கூடாது என அவர்கள் தெரிவிக்கின்றனர். இலங்கையில் வாழும் சிறுபான்மை இனதவர்கள் குறித்து சர்வதேசம் ஏறகனவே தனது கவனத்தை செலுத்தி வருகிறது. இவ்வாறான சந்தர்ப்பத்தில் எந்த விதத்திலும் 13 ஆவது அரசியல் அமைப்புத் திருத்தத்தை இரத்துச் செய்ய இடமளிக்கக் கூடாது எனவும் துரைராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.

### கடற்பாதுகாப்புக்கு...

நாடுகளுக்கு சட்டம், அமுலாக்கப் பயிற்சிகள், மற்றும் உபகரணங்களை இத்திட்டம் இலங்கைக்கு வழங்குகின்றது. இலங்கை கரையோர காவற்படையினருடன் இணைந்து இந்த வகையான பயிற்சிகளை நடத்துவதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம் என அமெரிக்கத் தூதுவர் அங்கு மேலும் தெரிவித்தார்.

### சி- 4...

வாராந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். கடந்த 23 ஆம் திகதி முல்லைத்தீவு பொலிஸாரினால் கைப்பற்றப்பட்ட இந்த வெடிபொருட்ளில் 450 கிலோகிராம் சி-04 வெடிமருந்தும் 80 மி.மீற்றர் ரவைகள் 1120, ரீ-56 ரவைகள் 5925, கிளைமோர் குண்டுகள் - 25, உட்பட பெருமளவு வெடி பொருட்கள கைப்பற்றப்பட்டுள்ளன.

இதேவேளை முள்ளிவாய்க்கால் பகுதியின் வேறு ஒரு பகுதியில் புதைத்து வைக்கப்பட்டிருந்த ரி-56 ரக துப்பாக்கிகள் - 07, ஆர்.பி.ஜி. செல்கள் - 11 மற்றும் ரவைகள் உட்பட பெருமளவு வெடிபொருட்கள் மீட்கப் பட்டிருப்பதாகவும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார். (பா)

### வரணியில்...

இளைஞன் யுவதியொருத்தியை காதலித்து வந்தார். இந்த நிலையில் யுவதியின் பெற்றோர் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வந்திருந்தனர். அத்துடன் குறித்த யுவதியினை மறைத்து வைத்தவாறு தகவல்களை வழங்கவும் மறுத்து வந்துள்ளனர்.இதனால் சீற்றமுற்ற குறித்த இளைஞன் தான் மறைத்து வைத்திருந்த துபபாக்கி சகிதம் யுவதியினது குடும்பத்தவர்களை அச்சுறுத்த முற்பட்டுள்ளார். அவ்வேளையிலேயே அவர்களை மிரட்ட துப்பாக்கியினால் வேட்டுக்களையும் அவர் தீர்த்துள்ளார்.

எனினும் நடுவீதியில் வைத்து துப்பாக்கியினால் ஆட்களை அவர் மிரட்ட முற்பட்ட வேளை அச்சமடைந்த பொதுமக்கள் படையினருக்கு தகவல் வழங்கியதையடுத்து அவர் கைது செய்யப்பட்டார். குறித்த நபர் புலிகளது முன்னாள் போராளியெனவும் அவர் பதுக்கி வைத்த துப்பாக்கியினாலேயே எச்சரிக்கை வேட்டுக்களை தீர்த்ததாகவும் பொலிஸ் தரப்பினால் இப்போது கூறப்படுகின்றது. இதேவேளை அவரது மனநிலை தொடர்பில் வைத்திய நிபுணர்களது அறிக்கையினை பெற பொலிஸார் முயற்சிகளை மேற்கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# அதிகாரப் பகிர்வு அரசின் போக்கில் மாற்றம்

## ரவூப் ஹக்கிம் சந்தேகம் கிளப்புகிறார்

(கொழும்பு)

அதிகாரப் பகிர்வு தொடர்பான அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாக நீதி அமைச்சரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார். அதிகாரப் பகிர்வு குறித்த அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் ஏற்பட்ட மாற்றம் சந்தேகத்தை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆளும் கட்சியின் சில முக்கியஸ்தர்கள் அதிகாரப் பகிர்வு குறித்த தங்களது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். நீதிமன்றத்திற்கும் நிறைவேற்று அதிகாரத்திற்கும் இடையிலான முரண்பாட்டின் காரணமாகவே இந்த மாற்றங்கள் ஏற்பட்டனவா என ஹக்கீம் கேள்வி எழுப்பியுள்ளார்.

## விசா மோசடி நோர்வே தூதரகம் எச்சரிக்கை

விசா விண்ணப்பங்கள் தொடர்பில் உதவி வழங்குவதாகக் கூறி பணம் வசூலிக்கும் முகவர்கள் தொடர்பில் எச்சரிக்கையாக இருக்குமாறு கொழும்பிலுள்ள நோர்வே தூதரகம் அறிவுறுத்தியுள்ளது. நோர்வேயில் வேலை வாய்ப்பு பெறுவது தொடர்பில் இந்த முகவர்களில் பலர் தவறான தகவல்களை வழங்கி வருகின்றனர் என்று தூதரகத்தின் பிரதித் தலைவர் கூறினார். ஏற்கனவே, கிடைத்துள்ள ஏராளமான விண்ணப்பங்களை பரிசீலிக்க வேண்டியுள்ளதால் தற்போதைக்கு வேலை அனுமதி விண்ணப்பப் பத்திரங்களை வழங்குவதை நிறுத்தியுள்ளதாக நோர்வே தொழில் அமைச்சு அறிவித்துள்ளது. விசா தொடர்பான புதிய தகவல்களை பெறுவதற்கு தூதரகத்தின் இணையத்தளமான www.norway.lk க்கு விஜயம் செய்யுங்கள். ஏனைய விசா விண்ணப்பங்களை உலக வர்த்தக மையத்திலுள்ள Norway VFS Srilanka வில் ஒப்படைக்க வேண்டும் 011--3168865, 3168866 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடாக திங்கள், வியாழக் கிழமைகளில் சகல தகவல்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

### கிணற்றில்...

விழுந்துள்ளான். மழை காலம் ஆரம்பித்துள்ளதால் கிணற்றில் மழை நீர் நிறைந்து காணப்பட்டுள்ளது. அதனால் கிணற்றுள் விழுந்த சிறுவன் மூச்சுத் திணறி இறந்துள்ளதாக திடீர் மரண விசாரணை அதிகாரி எம்.உதயசிறி தெரிவித்தார்.

### பாலியல்...

ஊடகத்துறை அமைச்சருமான கெஹெலிய ரம்புக்வெல மேலும் கூறுகையில்,

பாலியல் தொழிலாளர்கள் இலங்கையில் தொந்தரவுக்கு உள்ளாகின்றனர் என்ற ஐ.நா.வின் அறிக்கையில் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பாக கவனம் செலுத்தி உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

பொலிஸ் மற்றும் இராணுவத்தினரால் பாலியல் தொழிலாளர்கள் தொந்தரவு செய்யப்படும் நாடுகளுள் இலங்கை, இந்தியா மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகள் அடங்குவதாக 'ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# மருத்துவமனைக்கு புத்துயிர்



(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையின் அதிதீவிர சிகிச்சைப்பிரிவை மீண்டும் இயங்கச் செய்வதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா துரித நடவடிக்கை எடுத்துள்ளார்.

நீண்டகாலமாக செயலிழந்து கிடக்கும் அதிதீவிர சிகிச்சைப் பிரிவை மீண்டும் இயங்கச் செய்ய உதவுமாறு, அங்கு விஜயம் செய்த அமைச்சரின் கிழக்கு மாகாண இணைப்பாளர் மாட்டின் ஜெயா மற்றும் ஈ.பி.டி.பியின் ஊடகச் செயலாளர் ஸ்டாலின் ஆகியோரிடம் வைத்தியர்களால் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

இவ்விடயம் தொடர்பில் ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகமும், பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டதைத் தொடர்ந்து, அமைச்சரின் ஆலோசனைக்கேற்ப, உடனடியாகவே சுகாதார அமைச்சின் பிரதிச் செயலாளர் நாயகம் டொக்டர் ஆனந்த குணசேகர, மாட் டின் ஜெயா மற்றும் ஸ்டாலின் ஆகியோருக்கும் இடையே சந்திப்பு ஒன்று இடம்பெற்றது.

இச்சந்திப்பின்போது மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் பல்வேறு குறைபாடுகள் தொடர்பாக சுகாதார அமைச்சின் பிரதிச் செயலாளர் நாயகத்தின் கவனத்துக்கு ஈ.பி.டி. பியினரால் கொண்டு வரப்பட்டது. அவற்றைக் கேட்டுக் கொண்ட பிரதிச் செயலாளர் நாயகம் பல தேவைகள் இருந்தாலும் அவசரமும், அவசியமுமான அதி தீவிர சிகிச்சைப் பிரிவை மீள் இயக்க வேண்டியதன் அவசியத்தை புரிந்து கொள்வதாகவும், முன்னுரிமை அடிப்படையில் அதற்கான பணிகளை மேற் கொள்வதாகவும் உறுதியளித்தார்.

இதேவேளை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் குறைபாடுகளை சரி செய்யவும் மற்றும் அதிதீவிர சிகிச்சைப் பிரிவை துரிதமாக இயங்கச் செய்வது தொடர்பாகவும் அமைச்சரவைப் பத்திரமொன்றை சமர்ப்பித்துள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் துரித முயற்சியால் மட்டக்களப்பு மக்கள் நன்மையடைவார்கள் என்று அமைச்சரின் கிழக்கு மாகாண இணைப்பாளர் மாட்டின் ஜெயா தெரிவித்தார்.

## விசேட நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.சர்வதேச மார்க்சிய குழுவின் நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கை ஒரு பார்வை நிகழ்வு இன்று மாலை 4.30 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரிக்கு அண்மையில் உள்ள டி.சி.எம். தனியார் கல்வி நிறுவனத்தில் இடம்பெறவுள்ளது.

சொ.சிவபாலன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் ஏ.சி.ஜோர்ஜ் உரையாற்றவுள்ளார்.

## மூன்று வாகனங்கள் ஒன்றாக மோதின

(சுன்னாகம்)

சுன்னாகம் சந்தியில் நேற்று மாலை 4.45 மணியளவில் வாகன விபத்து ஏற்பட்டுள்ளது.

நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பாரவூர்தி மற்றும் வடிரக வாகனங்களுடன் பின்னால் வந்த பஜிரோ ரக வாகனம் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

வடி வாகனமும், பஜிரோ வாகனமும் சேதத்திற்குள்ளாகியுள்ளன. (165)

## முறிகண்டியில் விபத்து ஒன்பது பேர் படுகாயம்

(முறிகண்டி)

திருமுறிகண்டிக்கும் கொக்காவிலுக்கும் இடையில் நேற்று மாலை 6.20 மணியளவில் ஏற்பட்ட வாகன விபத்தில் 9 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து திருகோணமலை சென்ற ஹயேர்ஸ் வாகனமும், தண்ணீர்த்தாங்கி பவுஷரும் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

காயமடைந்தவர்கள் கிளிநொச்சி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் கரவெட்டி கிழக்கைச் சேர்ந்தவர்களாவர்.

வாகனத்தின் சாரதியான தங்கராசா (வயது-53), இ.ராகுலன் (வயது-21), இ.கோகுலன் (வயது-14), இ.வள்ளியம்மா (வயது-59), செல்லமணி (வயது-57), நடராசா கௌரி (வயது-43), செல்லம்மா இளசத்தியன் (வயது-64), சிறிமதி (வயது-41) ஆகியோர் உட்பட 9 பேர் காயமடைந்துள்ளனர். (77)

## போர்க்குற்ற ஆதாரங்கள் ஐ.நா.சபையின் வசம்

இறுதிக்கட்ட யுத்தத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்ற ஆதாரங்கள் பல தம்மிடம் இருப்பதாகக் காலம் கடந்த நிலையில் அறிவுப்பு ஒன்றை ஐ.நா. சபை அறிவித்துள்ளது.

கடந்த 2009 ஆம் ஆண்டு இலங்கையில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின் போது 40,000 இற்கும் அதிகமான பொது மக்கள் கொல்லப்பட்டமைக்கு காணொளி ஆதாரங்கள் இருப்பதாக ஐக்கிய நாடுகள் சபை மேலும் தகவல் வெளியிட்டிருக்கிறது.

சட்டத்தை மீறிய கொலைகள், யுத்த கால வன்முறைகள் மற்றும் மனிதாபிமானத்துக்கு எதிரான செயற்பாடுகள் தொடர்பிலான ஐ.நா. சபையின் நிபுணர் கிறிஸ்டொப் ஹெய்ன்ஸ் நேற்று முன்தினம் இதனை செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இறுதி யுத்தத்தில் மாத்திரம் 40 ஆயிரம் பொது மக்கள் கொல்லப்பட்டமை தொடர்பிலான காணொளிகள் தம்மிடம் உள்ளன. அவை உண்மையானவை என்று நிபுணர்களால் உறுதி செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் இந்த காணொளிகள் இதுவரையில் சனல் - 4 உள்ளிட்ட எந்த ஊடகத்திலோ அல்லது ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரகத்துக்கோ காண்பிக்கப்படவில்லை என்று அவர் தெரிவித்துள்ளார்.

இந்தக் காணொளிகளை எதிர்வரும் மனித உரிமைகள் மாநாட்டில் காண்பிக்க உத்தேசித்திருந்த போதும், இந்த மாநாட்டில் இலங்கை தொடர்பில் கருத்து தெரிவிக்க உறுப்பு நாடுகளுக்கு 70 நொடிகளே வழங்கப்படவுள்ள நிலையில், அதனை அடுத்த ஆண்டு மார்ச் மாதம் நடைபெறவுள்ள மனித உரிமைகள் மாநாட்டில் காண்பிக்க திட்டமிட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் தாம் அடுத்த ஆண்டுக்கான மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மாநாடு தொடர்பிலேயே அவதானம் செலுத்துவதாகவும், இது இலங்கைக்கு பெரும் சவாலானதாக அமையும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இறுதி யுத்தத்தின் போது ஐக்கிய நாடுகளின் பணிகள் தொடர்பில், அதன் சிரேஷ்ட உறுப்பினர் பெற்றி தயாரித்த அறிக்கையும், எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள மாநாட்டில் சமர்ப்பிக்கப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இறுதிக்கட்ட போரின் போது முள்ளிவாய்க்காலில் இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் பொதுமக்கள் கொல்லப்பட்டமைக்கான ஆதாரங்கள் போதியளவு தம்மிடம் இருப்பதாக ஐக்கிய நாடுகள் சபை மேலும் தெரிவித்துள்ளது. இதுவரை காலமும் ஐக்கிய நாடுகள் தம்மிடம் ஆதாரங்கள் இருப்பதாக வெளிப்படையாகக் கூறவில்லை.

எனினும் பிற அமைப்புக்களினதும் பொதுமக்களின் வாய்மொழி சாட்சியங்களையும் வைத்தே அறிக்கைகளை விடுத்ததுடன், தம்மால் நியமிக்கப்பட்ட விசாரணைக்குழு அறிக்கையினையும் ஆதாரம் காட்டியது. ஆனால் தற்போது முதல் முறையாக தம்மிடம் காணொளிகள் உள்ளிட்ட ஆதாரங்கள் இருப்பதாக அறிவித்துள்ளது.

பல்வேறு அரச சார்பற்ற அமைப்புக்கள் ஊடாக இந்தத் தகவல்களையும் ஆதாரங்களையும் ஐ.நா.சபை திரட்டியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## சோளங்கன் சனசமூக நிலைய கலைவிழா இன்று

(வடமராட்சி)

கரவெட்டி சோளங்கன் சனசமூக நிலையத்தின் கலைவிழா இன்று பிற்பகல் 3.30 மணிக்கு சோளங்கன் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிலையத்தலைவர் ஆ.குகநேந்திரராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின், கௌரவ விருந்தினர்களாக நெல்லியடி இலங்கை வங்கி முகாமையாளர் இ.சிவதாஸ், நெல்லியடி பொலிஸ் பிரிவின் பொறுப்பதிகாரி கே.எம். டபிள்யு. ரி.கல்கார, யாழ். கரணவாய் மகா வித்தியாலய அதிபர் கி.கிருஷ்ணாகரன், சிறப்பு விருந்தினர்களாக கரவெட்டி முன்பள்ளி இணைப்பாளர் திருமதி பி.கலைவாணி, ஈ.பி.டி.பி.யின் வடமராட்சி அமைப்பாளர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன், ஈ.பி.டி.பி. கரவெட்டி பிரதேச இணைப்பாளர் இ.செந்தில்நாதன், சோளங்கன் குடும்பநல உத்தியோகத்தர் செல்வி.ரி.வாசுகி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்விற்கு சோளங்கன் சனசமூக நிலையம், சோளங்கன் முன்பள்ளி, சோளங்கன் விளையாட்டுக்கழகம் ஆகியன அனுசரணை வழங்குவதாக நிகழ்ச்சி ஒழுங்கமைப்பாளர் கி.பத்மரூபன் தெரிவித்துள்ளார். (116)

## ஊழல் வழக்கில் சிக்கினார் என்.எஸ்.பி.தலைவர் பிரதீப் காரியவசம்

அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து அரசுக்கு சுமார் 39 கோடி ரூபாவுக்கும் அதிகமான நட்டத்தை ஏற்படுத்தியிருப்பதாக தேசிய சேமிப்பு வங்கியின் முன்னாள் தலைவரும் இலங்கையின் தலைமை நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவின் கணவருமான பிரதீப் காரியவசத்துக்கு எதிராக லஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளது.

சேமிப்பு வங்கியின் தலைவராக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் கடந்த ஆண்டு நியமிக்கப்பட்டார்.

த .:.பினான்ஸ் என்ற தனியார் நிறுவனத்தின் சுமார் 78 லட்சத்துக்கும் அதிகமான பங்குகளை பிரதீப் காரியவசம் கடந்த ஏப்ரல் மாதம் சட்டத்துக்கு முரணான வகையில் வாங்கியதன்மூலம் அரசுக்கு சுமார் 39 கோடி ரூபாவுக்கும் அதிகமான நட்டத்தை ஏற்படுத்தியுள்ளதாக லஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு குற்றஞ்சாட்டியுள்ளது. அதுதவிர, ஷான் சண்முகம் என்ற நபரை குறித்த தனியார் நிறுவனத்தின் பணிப்பாளர் சபையின் உறுப்பினராக நியமிக்குமாறு பரிந்துரை செய்ததன் மூலம் பிரதீப் காரியவசம் நாட்டின் லஞ்ச ஊழல் ஒழிப்பு சட்டத்தை மீறியுள்ளதாகவும் ஆணைக்குழு நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளது.

இந்த வழக்கு விசாரணைக்காக பிரதீப் காரியவசத்துக்கு அழைப்பாணை விடுக்குமாறு இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு விடுத்த கோரிக்கையை கொழும்பு நீதவான் ரஷ்மி சிங்கப்புலி ஏற்றுக்கொண்டார். அதன்படி, பிரதீப் காரியவசம் எதிர்வரும் பெப்ரவரி 28 ஆம் திகதியன்று நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் என்று நீதவான் உத்தரவிட்டார்.

## பால் காய்ச்சும் நிகழ்வு

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் புதிய கட்டடத்திற்கான பால் காய்ச்சும் வைபவம் இன்று காலை 10.00 மணிக்கு பிரதேச சபையின் தவிசாளர் அ.ஜெபநேசன் தலைமையில் நடைபெறவுள்ளது. (104)

## நில அதிர்வு அபாயம் அதிகரிக்கிறது

இலங்கை பாரிய நில அதிர்வுகளுக்கு முகம் கொடுக்க தயாராக இருக்கவேண்டும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது. அனர்த்து முகாமைத்துவ மத்திய நிலையத்தின் நில அதிர்வுகள் தொடர்பிலான குழு இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது. அண்மைக் காலங்களில் ஏற்பட்ட நிலஅதிர்வுகளினால் இந்து அவுஸ்ரேலிய நிலத்தகட்டில் வெடிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் நிலத் தகட்டின் இலங்கைக்கு அருகில் உள்ள பகுதியில் அகலம் விரிவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த நிலையில் எதிர்வரும் காலங்களில் இலங்கையில் பாரிய நில அதிர்வுகள் ஏற்படலாம் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

## முடிவுக்கு வந்தது மருத்துவர் போராட்டம்

நாடளாவிய ரீதியில் சம்பளப்பிரச்சினையை முன்வைத்து அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினரால் மேற்கொள்ளப்பட்ட அடையாளப் பணிப்புறக்கணிப்பு போராட்டம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்க செயலாளர் தெரிவித்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் சம்பளப்பிரச்சினையை முன்வைத்து அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் நேற்று முன்தினம் காலை 8 மணி முதல் இன்று காலை 8 மணிவரை இருபத்தி நான்கு மணிநேரப் பணி புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

வைத்தியர்களின் இப்பணிப்புறக்கணிப்பு காரணமாக அவசர சிகிச்சைப் பிரிவு தவிர்ந்த ஏனைய வைத்திய சேவைகள் யாவும் முற்றாக பாதிக்கப்பட்டன.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 ஒக்ரோபர் 27 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.